Vol.5, Issue 5 | Annual Subscription ₹480

@NewsRotary

/RotaryNewsIndia

அக்டோபர் 2022

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

Rotary

# VISAKHA VISTA

New horizon

Rotary Institute - 2022

Zone 4,5,6,7

IMAGINE ROTARY

## 9th to 11th December, 2022

REGISTER HERE

rotaryinstitute2022.com

Venue

## Radisson Blu Resort

Visakhapatnam, Andhra Pradesh




**30th Nov to 1st Dec, 2022**

**GETS/GNTS**

W Abu Dhabi- Yas Island
United Arab Emirates

**8th Dec, 2022**

**GOLF TOURNAMENT**

07:00 AM

**TRF Seminar & Dinner**

3:00 PM to 10:30 PM

**9th Dec, 2022**

- **DG Mid-Year Review Meet**
- **District Trainers Seminar**
- **Women in Rotary**
- **Rotaractors Seminar**

09:30 AM to 01:00 PM

**Lunch**

01:00 PM

**Institute Inauguration**

03:00 PM to 6:00 PM

**Dinner/Entertainment**

07:00 PM

**10th Dec, 2022**

**Service Projects Inauguration**

**Rotary Institute**

10:00 AM to 5:00 PM

**Lunch**

01:00 PM

**Dinner/Entertainment**

07:00 PM

**11th Dec, 2022**

**Run to read (10k Run)**


6:00 AM

**Rotary Institute**

10:00 AM to 01:00 PM

**Lunch**

01:00 PM



**JENNIFER E. JONES**
PRESIDENT
ROTARY INTERNATIONAL



**Dr. MAHESH KOTBAGI**
CONVENOR
ROTARY INTERNATIONAL DIRECTOR 2021-23



**CH. KISHORE KUMAR**
CHAIRMAN
PAST DISTRICT GOVERNOR 3020



**Dr. Sagadevan**
CHAIRMAN - PROMOTION COMMITTEE
PAST DISTRICT GOVERNOR 3203

**CONTACT**

PDG Ch. Kishore Kumar
Chairman | +919849487870

PDG Dr. E.K. SAGADHEVAN
Chairman - Promotion | +919994477725

Email
rotaryinstitute2022@gmail.com

ADVT.

# உள்ளே


12
பிரிட்டிஷ் ஆட்சியை வெறுத்தாலும் இந்தியர்கள் ராணியை நேசித்தது ஏன்?

20
பிங்கோரி கிராம மக்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திய புனே ரோட்டேரியன்கள்

30
சக்கர நாற்காலியில் இருந்து ஊனமுற்றோர் உரிமைகளுக்காக ஒரு போராட்டம்

34
உக்ரைன், பாகிஸ்தான் குழந்தைகளுக்காக நிதி திரட்டிய அகமதாபாத் இன்டராக்டர்கள்

40
புற்றுநோய் விழிப்புணர்வை உண்டாக்கிய மிதிவண்டிப் பேரணி

44
புனேவில் கதிர்வீச்சு மையம்

46
ரோட்டரியால் நாம் மேம்பட்டுள்ளோம்: ஜோன்ஸ்

48
TRFன் நல்ல பணிகள் வியக்கவைக்கின்றன: இயன் ரைஸ்லி

58
பிறந்த குழந்தைக்கான பிரிவு, RC திருச்செங்கோட்டின் பெருமை

60
இளவயதில் சுற்றுச்சூழலுக்கு நண்பராவோம்


62
வெள்ளை காண்டாமிருகங்களும் கருப்பு மாம்பாக்களும்

74
RC திமாபூர், நாகா குழந்தைகளின் வரப்பிரசாதம்

76
ஆரோக்கியமான, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு




Advertise in
Rotary News




| Tariff | |
|---|---|
| Back cover | ₹1,00,000 |
| Inner Front Cover | ₹60,000 |
| Inner Back Cover | ₹60,000 |
| Inside Full Page | ₹30,000 |
| Half Page | ₹20,000 |
| **Specifications** | |
| 17 x 25 cm | Full page |
| 17 x 12 cm | Half page |

**Advertisements in colour only**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org

FIND A CLUB
ANYWHERE IN THE WORLD!




Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator

## District Wise TRF Contributions as on August 2022–23 (Interim Results)

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| | | | India | | |
| 2981 | 7,998 | 127 | 0 | 625 | 8,750 |
| 2982 | 5,095 | 1,099 | 2,001 | 14,538 | 22,733 |
| 3000 | 4,580 | 1,361 | 0 | 0 | 5,941 |
| 3011 | 7,344 | 100 | 127 | 44,582 | 52,152 |
| 3012 | 541 | 0 | 0 | 21,810 | 22,351 |
| 3020 | 5,443 | 160 | 30,000 | 0 | 35,603 |
| 3030 | 5,274 | 43 | 0 | 1,150 | 6,468 |
| 3040 | 4,412 | 258 | 0 | 5,747 | 10,416 |
| 3053 | 19,068 | 0 | 0 | 0 | 19,068 |
| 3054 | 2,664 | 0 | 0 | 0 | 2,664 |
| 3060 | 17,208 | 125 | 0 | 38,072 | 55,405 |
| 3070 | 11,136 | 100 | 8,400 | 2,975 | 22,612 |
| 3080 | 5,083 | 1,397 | 0 | 0 | 6,480 |
| 3090 | 1,098 | 0 | 2,190 | 0 | 3,288 |
| 3100 | 17,248 | 0 | 0 | 0 | 17,248 |
| 3110 | 3,233 | 229 | 2,025 | 242,000 | 247,487 |
| 3120 | 4,089 | 0 | 0 | 0 | 4,089 |
| 3131 | 73,282 | 381 | 22,785 | 73,316 | 169,765 |
| 3132 | 9,508 | 583 | 25,000 | 0 | 35,090 |
| 3141 | 290,163 | 27,200 | 1,000 | 8,114 | 326,477 |
| 3142 | 43,442 | 1,100 | 0 | 25 | 44,567 |
| 3150 | 8,581 | 1,109 | 0 | 313 | 10,003 |
| 3160 | 945 | 1,063 | 0 | 0 | 2,009 |
| 3170 | 26,906 | 10,636 | 506 | 0 | 38,048 |
| 3181 | 28,565 | 6 | 25 | 399 | 28,995 |
| 3182 | 5,482 | 253 | 0 | 0 | 5,735 |
| 3190 | 7,425 | 95 | 0 | 735 | 8,255 |
| 3201 | 22,837 | 531 | 0 | 251,245 | 274,613 |
| 3203 | 744 | 387 | 0 | 11,522 | 12,653 |
| 3204 | 3,575 | 0 | 0 | 152 | 3,727 |
| 3211 | 46,406 | 0 | 0 | 1,049 | 47,455 |
| 3212 | 7,287 | 10,041 | 0 | 31,646 | 48,974 |
| 3231 | 39,331 | 18,248 | 32,025 | 525 | 90,129 |
| 3232 | 24,659 | 3,051 | 0 | 16,312 | 44,022 |
| 3240 | 10,582 | 6,073 | 1,000 | 0 | 17,655 |
| 3250 | 2,449 | 75 | 0 | 10,500 | 13,024 |
| 3261 | 290 | 13 | 0 | 200 | 503 |
| 3262 | 530 | 23 | 0 | 27,471 | 28,023 |
| 3291 | 18,827 | 13 | 15,033 | 0 | 33,873 |
| **India Total** | **793,330** | **85,879** | **142,118** | **805,023** | **1,826,350** |
| 3220 Sri Lanka | 6,221 | 211 | 0 | 0 | 6,431 |
| 3271 Pakistan | 25 | 25 | 0 | 250 | 300 |
| 3272 Pakistan | 300 | 0 | 0 | 5,000 | 5,300 |
| 3281 Bangladesh | 29,277 | 393 | 20,000 | 7,352 | 57,023 |
| 3282 Bangladesh | 575 | 1,000 | 0 | 2,806 | 4,381 |
| 3292 Nepal | 3,248 | 907 | 0 | 9,326 | 13,481 |
| **South Asia Total** | **832,976** | **88,415** | **162,118** | **829,758** | **1,913,267** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office

### நன்கு தொகுக்கப்பட்ட இதழ்

செப்டம்பர் மாத இதழின் அட்டைப் படம் ரோட்டரி மாவட்டம் 2981ல் உருவாக்கப்பட்ட மியாவாகி காடுகளின் ஒரு காட்சியை அழகுற சித்தரிக்கிறது. RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸின் "வாய்ப்புகளைப் பயன்படுத்தி செயல்படுங்கள்" என்னும் கட்டுரை அனைவரையும் ஊக்கு விக்கும் வகையில் உள்ளது. சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளும், அடக்கு முறையும் ஒடுக்கப்பட வேண்டும் என்று ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தது படிப்பதற்கு சுவாரஸ்மாக இருந்தது.

"இடைநிற்றலை தவிர்க்க ஆசிரமப் பள்ளிகள்" கட்டுரை கிராமங்களில் உள்ள பழங்குடி யினரின் பரிதாப நிலையை எடுத்துக் காட்டுகிறது.

பிலிப் முலப்போன் M T
RC திருவனந்தபுரம்
புறநகர் — D 3211

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த இதய நோயாளி ஷாதாப்புக்கு பேஸ்மேக்கர் கருவி பொருத்தி இதயத்தை துடிக்க வைத்த ஜாம்ஷெட்பூர் Dr விஜயா பரத்தின் கட்டுரை (ஆகஸ்ட் இதழ்) நெஞ்சைத் தொடும் விதத்தில் இருந்தது. மேலும் TRF டிரஸ்டி கீதா மானெக்கின் நேர்காணலும் அருமை.

Dr ஜெகதீஷ் வகாசியா,
RC சூரத் ஈஸ்ட்— D 3060

### கவனத்தை ஈர்த்த DEI

தனது ஆகஸ்ட் செய்தியில், ரோட்டரி தலைவர் ஜோன்ஸ், ரோட்டரியின் படிநிலையில் DEI மீது கவனம் செலுத்தியதுடன் ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கையை பரவலாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ள வலியுறுத்தினார். முதன்முறையாக ரோட்டரி இந்தியாவில், அடுத்த ஆண்டு 7 பெண் ஆளுநர்கள் பதவியேற்க உள்ளதாக புனேயில் நடந்த "லக்ஷ்ய" மாநாட்டில் ஜோன்ஸ் தெரிவித்து பாராட்டியுள்ளார். இதய நோயாளிகளுக்கு பேஸ்மேக்கர் பொருத்துவது தொடர்பாக ஜாம்ஷெட்பூர் ரோட்டரி சங்கம், டாடா மெயின் மருத்துவமனையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதான அட்டைப்பட கட்டுரை மனதைத் தொடும் வகையில் இருந்தது.

S முனியாண்டி,
RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

RI தலைவர் ஜெனிஃபர், தமது ஆகஸ்ட் செய்தியிலும், ஹூஸ்டன் மாநாட்டின் நிறைவு அமர்வு உரையிலும் பல அம்சங்களைத் தொட்டுள்ளார். சங்க அளவில் புதிய உறுப்பினர்களை ஈடுபடுத்து தல் தொடர்பான அக்கறையை அவர் வெளிப்படுத்தியது முக்கியமானது.

ரோட்டரியின் மிகப்பெரிய சொத்து அதன் தனிப்பட்ட ரோட்டேரியன்கள்தான். PRIP கிளென் கின்ராஸின் வார்த்தைகளை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஒவ்வொரு முறை நாம் ஒரு உறுப்பினரை இழக்கும் போது, அதுவும் புதிதாக சேர்ந்தவரை, நமது மதிப்பு, தரம் குறைகிறது. உறுப்பினர்களை தக்கவைப் பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

R ஸ்ரீனிவாசன்,
RC மதுரை மிட்டவுன்— D 3000

### படம் பேசுகிறது!

என்னுடைய 14 வயது மகன் கடந்த ஆகஸ்ட் மாத இதழின் அட்டைப்படத்தை, (மருத்துவமனை படுக்கையில் சிரித்துக் கொண்டிருக்கும் நோயாளியை) எனக்கு காட்டி பொதுவாக மாத இதழ்களில் பெரும்பாலும் பாலிவுட் நட்சத் திரங்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் படங்களைத்தான் அட்டைப்படமாகப் போடுவார்கள். ஆனால், ரோட்டரி மாத இதழில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ஒருவரின் படத்தை வெளியிட்டிருக்கிறீர்கள். ஏன் அப்படி என்று கேட்டான். ரோட்டரியின் ஆதரவுடன் இலவசமாக பேஸ்மேக்கர் பொருத்தப் பட்ட இதய நோயாளிகள் ஒருவர் தான் இவர் என்று தெரிவித்தேன். அதற்கு என் மகன், "அறுவைச் சிகிச்சைக்குப் பின் புதுவாழ்வு பெற்றதை அவரின் முகத்தில் தெரியும் புன்னகையிலிருந்து காண முடிகிறது" என்று பதிலளித்தான்.

உலகம் முழுவதும் ரோட்டரி சங்கங் கள் உயிர்காக்கும் திட்டங்களைச் செயல்படுத்தி வருவது குறித்து பெருமிதம் அடைந்தேன்.

R முரளி கிருஷ்ணா,
RC பெர்ஹாம்பூர் — D 3262

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் **rushbhagat@gmail.com** அல்லது **rotarynewsmagazine@gmail.com** என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். **WHATSAPP** செய்திகள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் **www.rotarynewsonline.org** என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.

**அட்டையில்:** *1953ம் ஆண்டில் எலிசபெத் ராணியின் முடிசூட்டு விழா.*

# இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதற்கு முன்னுரிமை கொடுப்போம்

ஆகஸ்ட் மாதத்தில் நான் பாகிஸ்தான் சென்றேன். ரோட்டரியின் உயர்ந்த இலக்காகிய ‘இளம்பிள்ளைவாதத்தை அகற்றுதல்’பற்றிப் பெருமையுடன் பேசினேன். தடுப்பு மருந்தால் தடுக்கக்கூடிய இந்த நோயிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றும் முக்கியமான பணியைச் செய்கிற பெண் நல ஊழியர்களைப்பற்றிப் பேசுவதற்கும் அவர்களைப் பெருமைப்படுத்துவதற்கும் ஒரு மிகச் சிறந்த வாய்ப்பாகவும் இது அமைந்தது.

இந்த மாதத்தில் நாம் “உலக இளம்பிள்ளைவாத நாளை” கொண்டாடுகிறோம், 30 ஆண்டுகளுக்கும் மேலாக உலகின் முதல் பன்னாட்டு இளம்பிள்ளைவாத அகற்றல் பரப்புரையை முன்னின்று நடத்துகிற நம்முடைய முயற்சியையும், இந்த மிகப் பெரிய இலக்கை நிறைவு செய்யும் திறன் கொண்ட கூட்டணிகளை அமைக்கும் நம்முடைய வெற்றியையும் வெளிச்சம் போட்டுக் காண்பிக்கிறோம். வரலாற்றின் மிகப் பெரிய லட்சியவாதம் கொண்ட பன்னாட்டு நல முன்னெடுப்புகளில் ஒன்று இது என்பதையும், உலக அளவில் நாம் இளம்பிள்ளைவாதத்தை 99.9% குறைத்துவிட்டோம் என்பதையும் நாம் அனைவரும் அறிவோம்.

உலகில் வைல்ட் போலியோ வைரஸ் இன்னும் இருக்கிற இரண்டே நாடுகளில் பாகிஸ்தான் ஒன்று. (இன்னொன்று, அருகிலுள்ள ஆஃப்கானிஸ்தான்.) பாகிஸ்தானில் தடுப்பு மருந்து வழங்கல் பரப்புரைகளை நான் பார்த்தேன், பங்கேற்றேன். நான் அங்கிருந்து கிளம்பியபிறகு, 5 வயதுக்குக் குறைவான 43 மில்லியன் குழந்தைகளுக்கு ஒரு மிகப் பெரிய, நாடு தழுவிய தடுப்பு மருந்து வழங்கல் பரப்புரை நடைபெற்றது. பாகிஸ்தானில் தடுப்பு மருந்து வழங்குபவர்களில் 60%க்கு மேல் பெண்கள். இவர்கள் தாய்மார்களுடன் பேசி நம்பிக்கையை வளர்க்கிறார்கள்.

நம்முடைய முயற்சிகளுக்குப் பாகிஸ்தான் ஊடகங்களும் மிகவும் ஆதரவளித்தன. இந்த மாதம், பெர்லினில் உலக நல மாநாட்டில் ஒரு புதிய பன்னாட்டு உறுதிமொழிக் கணம் நடைபெறவுள்ளது. சரியான நேரத்தில் நடைபெற வேண்டிய இந்த நீக்குதல் முயற்சிகளுக்கு நிதியளிப்பதற்குக் கூடுதல் வளங்களைத் திரட்ட இது உறுதியளிக்கிறது. இப்போது, நாம் நம்முடைய பங்களிப்பைச் செய்யவேண்டும், இந்த ஆண்டு $50 மில்லியன் திரட்டி, பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை வழங்கும் 2-க்கு-1 பொருத்தத்தைப் பெறவேண்டும்.

முந்தைய சில மாதங்களில் இஸ்ரேலிலும், UKயிலும் சமீபத்தில் நியூ யார்க் நகரப் பகுதியிலும் புதிய இளம்பிள்ளைவாத நிகழ்வுகள் காணப்பட்டன. இந்தச் செய்திகள் அச்சுறுத்துகின்றன. ஆனால், ஒவ்வொரு சூழலிலும் நாம் செய்ய வேண்டிய எதிர்வினை தெளிவாக உள்ளது: தடுப்பு மருந்துகள் வேலை செய்கின்றன. ஒருவேளை, இளம்பிள்ளைவாதம் பரவினால், ஆபத்து கூடுதலாக உள்ள மக்கள் எல்லாருக்கும் சரியான நேரத்தில் தடுப்பு மருந்துகள் வழங்கப்படுவதை நாம் உறுதிசெய்யவேண்டும்.

மிக முக்கியமாக, நாம் இந்த வைரஸை இப்போது அழிக்க வேண்டும். பாகிஸ்தானில் பார்த்த காட்சிகள் நம்மால் இந்தப் பணியை முடிக்க இயலும், நாம் இதை முடிக்கவேண்டும் என்று என்னை எண்ணச்செய்துள்ளன. நம்முடைய உறுதி, தாராள மனப்பான்மை, மன உறுதியின் மூலம் நாம் இளம்பிள்ளைவாதத்தைஅழிப்போம்.



கௌஸா ஜமீல்

*கராச்சியில் (பாகிஸ்தான்) போலியோ தடுப்பு மருந்து அளித்தப்பின் ஒரு குழந்தையுடன் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ்.*

**ஜெனிஃபர் ஜோன்ஸ்**
RI தலைவர்



# இரண்டாம் எலிசபெத் ராணியிடம் கற்க வேண்டிய தலைமைப்பாடம்

ஆக்கிரமிப்பு, சச்சரவு, போர் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட உலகம் மற்றும் பிராந்திய, சமூக மற்றும் வகுப்புவாதத்தினால் ஏற்படும் பிளவு, கோவிட் தொற்று மற்றும் இயற்கைப் பேரழிவினால் பொருளாதார வீழ்ச்சியால் தத்தளிக்கும் நாடுகள் இவற்றுக்கு நடுவே கடந்த மாதம் 400க்கும் மேலான உலக தலைவர்கள் தங்களுக்கிடையேயான கருத்து வேறுபாடுகளை மறந்து, 96 வயதில் பிரிட்டிஷ் ராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவையடுத்து ஒன்று கூடி அஞ்சலி செலுத்தினர்.

இதில் முரண் என்னவெனில், யார் மீது அவர்கள் மரியாதை வைத்திருந்தார்களோ அந்த பெண், இவர்களை கவர்ந்திழுக்க பெரிய அரசியல் அதிகாரத்தில் இல்லை என்பதுதான். உண்மையில் பிரிட்டிஷாரின் இருண்ட காலனி ஆதிக்க ஆட்சிக்காக இந்தியா உள்பட பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் அவரை வசைபாடியும் விமர்சித்தும் வந்தனர். பிரிட்டிஷ் ஆட்சியின் இருண்ட காலம் என்பது காலனீய ஆதிக்க சக்திகளின் ஆட்சி. தங்களுக்கு கீழுள்ளவர்களை அடிமைகளாக கருதி கொடுமை செய்தனர். தங்களின் ஆட்சிக்கு உட்பட நாடுகளின் செல்வங்களைச் சூறையாடினர்.

ஆனாலும்கூட அதே பிரிட்டன், காமன்வெல்த் நாடுகளை உருவாக்கி தலைமைவகித்தபோது ராணி எலிசபெத்தான் அதனை பிரதிநிதித்துவப்படுத்தினார். அவர் சமத்துவம், கடமை உணர்வு, கருணை மற்றும் வசீகரத்தன்மையுடன் செயல்பட்டார். மேலும் மென்மையான போக்கை கொண்டிருந்தார். அதனால் அவரது மறைவை உலகம் ஈடுசெய்ய முடியாத இழப்பாக கருதியது. கொடூரமான சாலை விபத்தில் இறந்த, தமது வாழ்வின் முதன்மையான நேரங்களை பறிகொடுத்த இளவரசி டயானாவுக்கு எழுந்த துக்கம் போன்றது அல்ல இது. ஏனெனில் அவரது மரணம் அகால மரணம். ஆனால், எலிசபெத் ராணி 90 ஆண்டுகளுக்கு மேலாக நிறைவு வாழ்க்கை வாழ்ந்தவர்.

உலகத் தலைவர்கள் சிந்திக்கவும், பின்பற்றவும் விட்டுச் செல்லும் மரபு என்னவெனில், உணர்ச்சி வசப்படாமல், எதற்கெடுத்தாலும் கோபப்படாமல், பொது மக்களின் அதிருப்தி, விமர்சனங்களை நேர்மையாகவும், கண்ணியமாகவும் திறமையாகவும் கையாள வேண்டும் என்பதுதான். கோபம், மனக்கசப்பு இவை உச்சத்தில் இருக்கும் நேரத்தில் மௌனமாக இருந்தால் புயல், அலைகளை நாம் எளிதில் கடந்து செல்ல முடியும். பொது இடங்களில் ஆணவமும் கோபமும் இல்லாமல் அவர் இருந்தது நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மதிப்புமிக்க பாடமாகும். அவர் இங்கிலாந்தின் வருங்கால ராணியாக இருப்பார் என்பது தெரிந்தவுடனேயே மற்றும் இடைவிடாத பயிற்சி மூலம் இந்த குணங்கள் அவரது உடலில் வேரூன்றிவிட்டது என்றுகூட சொல்லலாம். துரதிருஷ்டவசமாக இன்றைய அரசியலில் கல்வியோ அல்லது பயிற்சியோ அல்லது கண்ணியமோ, தலைமைப்பதவிகளுக்கு ஒரு முன்நிபந்தனைகளாக கருதப்படுவதில்லை.

இன்றைய உலகில் விரல்விட்டு எண்ணக்கூடிய நாடுகளின் தலைவர்களிடம் மட்டுமே கலப்படமில்லாத மரியாதை, அன்பு, பாசம் இருக்கிறது என்பதுதான் அதிசயம்.

பிரிட்டிஷ் ராணியிடம் இருந்த பிரமிக்கத்தக்க செயல்பாடு, அவரிடம் இருந்த மந்திர சக்தி, ஆளுமை, அவரிடமிருந்த நன்மதிப்பு ஆகியவை அவருடனேயே மறைந்துவிடுமோ என்பதை நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது.



ரஷீதா பகத்

**ஆளுநர் குழு**

RID 2981 செல்வநாதன் V
RID 2982 சரவணன் P
RID 3000 ஜெரால்ட் I
RID 3011 அசோக் கண்டூர்
RID 3012 Dr லலித் கன்னா
RID 3020 பாஸ்கர் ராம் V
RID 3030 Dr ஆனந்த் ஜுன்ஜுனுவாலா
RID 3040 ஜினேன்தர ஜெயின்
RID 3053 ராஜேஷ்குமார் சூரா
RID 3054 பல்வந்த் S சிரானா
RID 3060 ஸ்ரீகாந்த் இந்தானி
RID 3070 Dr துஷ்யந்த் சௌத்ரி
RID 3080 கல்டா V P
RID 3090 குல்பர் சிங் சௌத்ரி ரெடோல்
RID 3100 தினேஷ் குமார் சர்மா
RID 3110 பவன் அகர்வால்
RID 3120 அனில் அகர்வால்
RID 3131 Dr அனில் லால்சந்த் பார்மர்
RID 3132 ருக்மேஷ் ஜகோட்டியா
RID 3141 சந்தீப் அகர்வல்லா
RID 3142 கைலாஷ் ஜித்தானி
RID 3150 டல்லா ராஜசேகர் ரெட்டி
RID 3160 வொமினா நாக சதீஷ்பாபு
RID 3170 வெங்கடேஷ் H டேஷ்பாண்டே
RID 3181 N பிரகாஷ் காரன்த்
RID 3182 Dr ஜெயகௌரி ஹடிகல்
RID 3190 ஜிதேந்திரா அனேஜா
RID 3201 ராஜ்மோகன் நாயர் S
RID 3203 இளங்குமரன் B
RID 3204 ப்ரமோத் நாயனார் V V
RID 3211 பாபுமோன் K
RID 3212 முத்து V R
RID 3231 பழனி J K N
RID 3232 Dr நந்தகுமார் N
RID 3240 குஷாநாவா பாபி
RID 3250 சஞ்ஜீவ்குமார் தாகூர்
RID 3261 ஷஷங்க் ரஸ்டோகி
RID 3262 பிரவுதத்தா சுபதி
RID 3291 அஜய்குமார் லா

துகார் டவர்ஸ், 3-வது தளம், மார்ஷல் சாலை, எழும்பூர், சென்னை-8. முகவரியில் இயங்கும் ரோட்டரி நியூஸ் டிரஸ்டுக்காக, P T பிரபாகரால், “ராசி கிராபிக்ஸ் P Ltd., 40, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை-14” என்ற முகவரியில் அச்சிடப் பட்டு வெளியிடப்படுகிறது.
**ஆசிரியர்:** ரஷீதா பகத்.

ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம் பரத்தில் வெளியிடப்படும் கருத்துக் களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரை களை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

இணையதளம்

# RI இயக்குனர்

## இன்றைய சூழலில் ஐநா-வின் பங்கு



பல நாடுகளுக்கு இடையில் மனித உரிமைகள், பன்முகத்தன்மை, முன்னேற்றத்தை முன்னிறுத்தும் அமைப்பு, ஐநா என்கிற ஐக்கிய நாடுகள் அமைப்பு. இந்த அமைப்பைப் பெருமைப்படுத்தும்வகையில் 1945ம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 24 அன்று ஐக்கிய நாடுகள் நாள் கொண்டாடப்படுகிறது. ஐநா-வின் உருவாக்கத்தில் ரோட்டரி தாக்கம் செலுத்தியுள்ளது, ஐநா பதிவு ஆவணம் எழுதப்பட்டபோது, சான் ஃபிரான்சிஸ்கோ மாநாட்டில் ஆலோசனை வழங்குவோராகச் சேவை புரிய அழைக்கப்பட்ட 42 நிறுவனங்களில் ரோட்டரியும் ஒன்று.

ஐநா தொடங்கப்பட்டதிலிருந்து மனித உரிமைகள், அமைதி மற்றும் பாதுகாப்பு, முன்னேற்றம், நோய்த் தடுப்பு, பாலினச் சமநிலை, கல்வி, மனிதத்தன்மை உதவி போன்ற பிரச்சனைகளில் மக்களுடைய வாழ்க்கைகளில் தாக்கம் கொண்டு வந்துள்ளது. ஆப்பிரிக்கா, ஆசியாவில் மிகப் பெரிய காலனித்துவ நீக்க முயற்சி களில் தொடங்கிப் பனிப் போரின்போது உரையாடலுக்கான ஒரு முக்கியத் தளத்தை வழங்கியதுவரை, மிகுதியான ஏழைமை, பசியை நீக்குவதில் தொடங்கி, காலநிலை மாற்றம் என்னும் முக்கியச் சவாலைக் கையாண்டதுவரை இந்த அமைப்பு முன்னிலையில் நின்றுள்ளது.

பல நேரங்களில் UNICEF போன்ற ஐநா அமைப்புகளும் ரோட்டரியும் இணைந்து, வளரும் நாடுகளைச் சேர்ந்த குழந்தைகள், குடும்பங்களுக்கு உயிர் காக்கும் மருந்துகள், தூய குடிநீர், கல்விப் பொருட்கள் போன்ற வற்றை வழங்கியுள்ளன.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொது அவையில் ரோட்டரிக்கு வழங்கப்படும் இருக்கை, எல்லைகளைத் தாண்டி நல்லெண்ணத்தையும் அமைதியையும் வளர்க்கும் அதன் முயற்சிகளைச் சுட்டிக் காண்பிக்கிறது. ஐநா மற்றும் அதன் சிறப்பு அமைப்புகள் வெவ்வேறு கருத்துகளைக் கொண்ட மக்கள் ஊடாடுவதற்கு ஒரு தளத்தை வழங்குகின்றன. அதன் உறுப்பினர் நாடுகள் மாறுபட்டு நின்றாலும், பல முரண்களின்போது அது நடுவராகச் செயல்பட்டு வெற்றிகரமான தீர்வுகளைக் கண்டறிந்துள்ளது. இந்த அமைப்பு முந்தைய சில ஆண்டுகளில் காலநிலை நெருக்கடி, உணவு பாது காப்பின்மை, கோவிட் நோய்ப்பரவல், உக்ரைன் போர் போன்ற சவால்களைச் சந்தித்துவந்தாலும், அதன் பொருத்தம் கூடியுள்ளது.

ஐநா-வுக்கு இந்தியாவின் பன்னாட்டுப் பங்களிப்புகள் முக்கிய மானவை, கோவிட் மீளல் கால கட்டத்தின் போது, இந்தியா உலகுக்கு மருந்துக்கடையாகச் செயல்பட்டது.

இந்தியா ஐநா-வின் நோக்கங்கள், கொள்கைகளை வலுவாக ஆதரிக்கிறது. ஐநா 77 ஆண்டுகளைத் தாண்டும் இந்த நேரத்தில், நம்முடைய நாடுகளின் சமூகம் சாதித்துள்ள அனைத்தையும் நாம் கொண்டாடவேண்டும். பெரிய அளவில் மாறிவரும் புதிய உலகத்தில் அது தொடர்ந்து செயல்திறனோடும் பொருத்தத்தோடும் இருப்பதை நாம் உறுதி செய்யவேண்டும்.



**Dr** மகேஷ் கோட்பாகி
RI இயக்குனர், 2021–23

# உங்கள் ஆண்டைக் கடந்து சிந்தியுங்கள்!



நம் பிராந்தியத்தைச் சுற்றியுள்ள பல்வேறு ரோட்டேரியன்களைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அந்த உரையாடல்களின்போது வெளிப்படையாக எனக்கு தெரியவந்தது என்னவெனில் சங்கத் தலைவர்களின் கண்ணோட்டம் ஒரு ஆண்டையும் தாண்டிச் செல்லாததுதான்.

ஒரு ஆண்டில் உருவாக்கி செயல்படுத்தக்கூடிய திட்டங்களையே நாம் பார்க்கிறோம். இது நமது கூட்டுச் செயல்பாடுகளையும், அதனால் ஏற்படும் தாக்கத்தையும் குறைத்து மதிப்பிடும் வகையில் இருக்கும். குறுகியகால நோக்கமாக இருந்திருந்தால் போலியோவை ஒழிப்பது சாத்தியமாக இருந்திருக்காது. குழந்தைகளின் பள்ளிக்கல்வி கட்டணத்தை செலுத்துவதுடன் நாம் திருப்தி அடைந்துவிடுகிறோமா? அல்லது ஏழைக் குழந்தைகள் படிக்க வசதியாக ஒரு பள்ளியைக் கட்ட வேண்டும் என்று கனவு காண்வோமா? இதய அறுவைச்சி கிச்சைக்கான நிதியை அளிப்பதுடன் நின்றுவிடுவோமா? அல்லது மருத்துவமனையில் ஒரு நோய் சிகிச்சை பிரிவை கட்டித்தர திட்டமிடப்போகிறோமா?

உங்கள் ஒவ்வொருவரிடமும் இதுபோன்ற சில எண்ணங்கள் இருக்கவேண்டும் என்பதே என் விருப்பமாகும். நீண்டகால கண்ணோட்டத்துடன் முழுத் திறமையையும் வெளிப்படுத்திச் செயல்படுவது என்பது நம்மகையில் தான் இருக்கிறது. ரோட்டரி பற்றி கனவு காணுங்கள் என்று நமது தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் நம்மிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார். அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு விஷயத்தைப் பற்றி கற்பனை செய்யவேண்டுமானால், நாம் ஒரு ஆண்டை கடந்து சிந்திக்க வேண்டும். இரண்டாவதாக நம்மிடம் தற்போது இருக்கும் வளங்களை மட்டும் வைத்து கண்ணோட்டத்தை கட்டுப்படுத்தக்கூடாது. நல்ல திட்டங்கள் எனில் அதை செயல் படுத்துவதற்கான வழிமுறைகள் தொடரும். மூன்றாவதாக மற்ற அமைப்புகளுடன் கூட்டாண்மை ஏற்படுத்தி செயல்படத் தயாராக இருக்க வேண்டும்.

அப்போதுதான் ரோட்டரி பற்றிய உயர்ந்த எண்ணத்தை ஏற்படுத்த முடியும். நாம் தடைகளைக் களைந்து, அச்சங்களை தூக்கி எறிந்துவிட்டு பெரியதாக கற்பனை செய்ய ஆரம்பிக்கலாம்.

A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| **RI இயக்குனர் மற்றும் RNT தலைவர்** | |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| **RI இயக்குனர்** | |
| Dr பரத் பாண்ட்யா | RID 3141 |
| **TRF அறங்காவலர்** | |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| பாண்டுரங்க செட்டி | RID 3190 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| PT பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| குலாம் A வாஹன்வதி | RID 3141 |
| **RI இயக்குனர் தேர்வு** | |
| அனிருதா ராய் சௌத்ரி | RID 3291 |
| TN சுப்ரமணியன் | RID 3141 |

**செயற்குழு உறுப்பினர்கள் (2022–23)**

| | |
|---|---|
| Dr துஷ்யந்த் சௌத்ரி | RID 3070 |
| **தலைவர், ஆளுநர் குழு** | |
| வெங்கடேஷ் H தேஷ்பாண்டே | RID 3170 |
| **செயலாளர், ஆளுநர் குழு** | |
| Dr N நந்தகுமார் | RID 3232 |
| **பொருளாளர், ஆளுநர் குழு** | |
| தினேஷ்குமார் சர்மா | RID 3100 |
| **ஆலோசகர், ஆளுநர் குழு** | |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்


**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

இதழ்

# நம் வாக்குறுதியை நிறைவேற்றுதல்



என்னுடைய ரோட்டரி நாயகர்களில் ஒருவர், 1978–79 RI தலைவர் கிளெம் ரெனௌஃப். 2020ல் மறைந்த சர் கிளெம் அவர்களுக்கும் எனக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. நாங்கள் இருவரும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள், ஒரே பணியைச் செய்தவர்கள், இளம்பிள்ளைவாதத்தை அழிப்பதில் பேரார்வம் கொண்டவர்கள். இந்த நோக்கத்தை நாம் நிறைவேற்றவேண்டும் என்று நமக்குப் பாதை வகுத்தது கிளெம் அவர்களுடைய தலைமைதான். அதற்கு நாம் திரட்டிய குழு இன்று ஒரு பன்னாட்டுக் கூட்டணியாக வளர்ந்துள்ளது.

ரோட்டரியும் அதன் கூட்டாளர்களும் சாதித்துள்ளது மிகச் சிறந்த பணி. நாம் உலக அளவில் இளம்பிள்ளைவாதத்தை 99.9% குறைத்துள்ளோம், 122 நாடுகளில் 2 பில்லியனுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து வழங்கியுள்ளோம். சென்ற ஆண்டில் மட்டும் 1 பில்லியனுக்கும் மேற்பட்ட வாய் வழி இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்தைப் பயன்படுத்தி 30 நாடுகளில் 370 மில்லியனுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து வழங்கப் பட்டது. இதனால், இந்த நோய் வரலாறு காணாத அளவு குறைந்துள்ளது. ஆகஸ்ட் 2020ல் உலக சுகாதார அமைப்பின் ஆப்பிரிக்கப் பகுதி வைல்ட் போலியோ வைரஸ் இல்லாத பகுதியாகச் சான்றளிக்கப்பட்டது, ரோட்டரி உறுப்பினர் களுடைய மிகப் பெரிய சாதனை இது.

ஆனால், இளம்பிள்ளைவாதம் எங்கு இருந்தாலும் சரி, அது எங்கும் உள்ள மக்களுக்கு, குறிப்பாகக் குழந்தை களுக்கு ஓர் அச்சுறுத்தல் தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். மலாவி, மொசாம்பிக்கில் இந்த நோய் வந்ததையும், UK, அமெரிக்காவில் கழிவு நீரில் போலியோ வைரஸ் கண்டறியப்பட்டதையும் நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்.

ஆப்பிரிக்காவிலும், ஆஃப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட ஆசிய, மத்திய கிழக்கு நாடுகள் பலவற்றிலும் உள்ள குழந்தைகளைத் தொடர்ந்து அச்சுறுத்துகிற, தடுப்பு மருந்திலிருந்து பெறப்பட்ட போலியோ வைரஸ் பரவு தலைத் தடுக்க, புதுமையான வாய் வழி இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வகை 2 (nOPV2) என்கிற ஒரு புதிய இளம் பிள்ளைவாதத் தடுப்பு மருந்தைப் பயன்படுத்துகிறோம். 24 அக்டோபர் உலக இளம்பிள்ளைவாத நாளாகும். இளம்பிள்ளைவாதத்தை அழிப்பதற்கு ஆண்டுக்கு $50 மில்லியன் திரட்டும் இலக்குக்கு வழங்கப்படும் பங்களிப்புகளைத் தாராள மனம் கொண்ட நம்முடைய கூட்டாளர் பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை 2-க்கு-1ஆகப் பொருத்தும் என்பதை மறந்துவிடாதீர்கள். நாம் ஒவ்வொருவரும் இளம்பிள்ளைவாதத்தை நிரந்தரமாக அழித்தலின் மூலம் உலகக் குழந்தைகளுக்கு நம்முடைய வாக்குறுதியை நிறைவேற்றும் ரோட்டரியின் இலக்குக்கு ஒரு படி அருகில் ரோட்டரியை அழைத்துச் செல்கிறோம்.

**இயன் ரிஸ்லி**

TRF அறங்காவலர் தலைவர்



# விருந்து நகரம்

EVA ரெமிஜன்-டோபா



சிறு உணவுக் கடைகளில் தொடங்கி மிக நேர்த்தியான உணவகங்கள்வரை மெல்போர்னின் உணவுச் சூழல் பன்னாட்டுத்தன்மை கொண்டது. அதனால், பசியோடு இருக்கும் எல்லாரும் பலப்பல தெரிவுகளிலிருந்து தேர்ந்தெடுக்கலாம். எடுத்துக்காட்டாக, குறைந்தது மூன்று மாவட்டங்கள் இந்த ஆஸ்திரேலிய நகரத்தின் Little Saigon என்று தங்களை அழைத்துக்கொள்கின்றன. அதனால், மே 27 முதல் 31 வரை நடைபெறும் 2023 ரோட்டரி பன்னாட்டு மாநாட்டுக்காக நீங்கள் இங்கு வரும்போது, உங்கள் பசிக்கும் ஆர்வத்துக்கும் நல்ல தீனி கிடைக்கும்.

இங்கு ஏராளமான உணவகங்கள், பேக்கரிகள், மளிகைக் கடைகளில் பாரம்பரியமான வியட்நாமிய உணவுடன் ஆஸ்திரேலியத் தாக்கம் கொண்ட கலவை உணவுகளும் கிடைக்கும். டிராம் ஏறிச் சிறிது வடக்குப் பக்கம் சென்றால், மெல்பர்ன் பகுதியின் மத்திய கிழக்கு உணவு மையமாகிய Brunswick என்ற புறநகர்ப் பகுதிக்குச் செல்வீர்கள். பல பண்பாடுகளைக் கொண்ட இந்த மாவட்டத்தின் சந்தைகள், உணவகங்கள், உணவைப் பொதியாக்கி வழங்கும் உணவகங்கள், பேக்கரிகளில் லெபானிய, துருக்கிய, சிரிய மற்றும் இராக்கிய உணவுகள் நிறையக் கிடைக்கும். உங்கள் உணவை நிறைவு செய்ய Cafe Cocoக்கு வாருங்கள், மிகச் சிறந்த காஃபியைக் குடியுங்கள், புகை பிடிக்கிறவர்களுக்கு இங்கு நறுமணம் மிக்க ஷிஷா கிடைக்கும்.

இத்தாலிய உணவுக்கு, Lygon தெருவுக்குச் சென்று மெல்பர்னின் லிட்டில் இத்தாலியைக் காணலாம், இந்நகரின் கஃபே பண்பாடு உயிர்ப்பித்து எழுவதைப் பார்க்கலாம். வழியில் ஓர் எஸ்ப்ரெஸ்ஸோ குடித்து விட்டு 400 Gradiல் இரவு உணவு உண்ணுங்கள். இந்த உணவகத்தில் கிடைக்கும் பிட்சா மிகவும் புகழ் பெற்றது. உங்களுடைய இத்தாலிய அனுபவத்தை முழுமை செய்ய, இந்தப் பகுதியில் இருக்கும் பலப்பல இனிப்புத் தலங்களில் ஒன்றில் புத்துணர்ச்சி மிக்க ஜெலெட்டோ-வுடன் இரவைச் சிறப்பாக்குங்கள்.

மேலும் அறிய, பதிவு செய்ய: convention.rotary.org.

# Rotarians!

**Visiting Chennai for business?**

**Looking for a compact meeting hall?**



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

**₹2,500 for 2 hours**
**₹5,000 for 4 hours**
**₹1,000 for every additional hour**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotary clubs | : | 36,995 |
| Rotaract clubs | : | 11,449 |
| Interact clubs | : | 18,601 |
| RCCs | : | 12,480 |
| Rotary members | : | 1,192,376 |
| Rotaract members | : | 204,103 |
| Interact members | : | 427,823 |

*As on September 18, 2022*

## Membership Summary

As on September 1, 2022 (Interim)

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 135 | 6,685 | 8.02 | 63 | 290 | 55 | 242 |
| 2982 | 78 | 3,571 | 7.28 | 48 | 1,208 | 98 | 73 |
| 3000 | 132 | 5,379 | 9.57 | 99 | 1,548 | 308 | 214 |
| 3011 | 122 | 4,571 | 27.37 | 81 | 3,075 | 133 | 36 |
| 3012 | 149 | 3,727 | 23.18 | 72 | 1,450 | 85 | 61 |
| 3020 | 83 | 5,021 | 7.39 | 33 | 697 | 168 | 350 |
| 3030 | 98 | 5,269 | 15.13 | 126 | 2,343 | 358 | 380 |
| 3040 | 111 | 2,688 | 14.55 | 59 | 888 | 85 | 185 |
| 3053 | 74 | 2,956 | 17.32 | 36 | 522 | 54 | 128 |
| 3054 | 172 | 7,073 | 20.39 | 116 | 7,623 | 200 | 571 |
| 3060 | 105 | 4,938 | 14.95 | 65 | 2,403 | 80 | 152 |
| 3070 | 127 | 3,245 | 16.02 | 48 | 730 | 61 | 59 |
| 3080 | 107 | 4,311 | 13.43 | 148 | 2,457 | 209 | 117 |
| 3090 | 102 | 2,523 | 7.06 | 46 | 726 | 112 | 164 |
| 3100 | 100 | 2,132 | 9.85 | 14 | 83 | 28 | 151 |
| 3110 | 150 | 3,787 | 12.09 | 14 | 98 | 27 | 106 |
| 3120 | 90 | 3,675 | 16.30 | 66 | 602 | 36 | 55 |
| 3131 | 143 | 5,740 | 24.30 | 120 | 2,701 | 247 | 143 |
| 3132 | 90 | 3,639 | 12.92 | 35 | 612 | 126 | 167 |
| 3141 | 108 | 6,023 | 26.52 | 145 | 9,229 | 193 | 110 |
| 3142 | 103 | 3,885 | 21.13 | 85 | 2,132 | 145 | 87 |
| 3150 | 109 | 4,357 | 13.17 | 147 | 1,950 | 151 | 119 |
| 3160 | 78 | 2,727 | 9.64 | 30 | 320 | 20 | 82 |
| 3170 | 146 | 6,590 | 15.84 | 99 | 1,800 | 262 | 176 |
| 3181 | 87 | 3,584 | 9.79 | 35 | 449 | 199 | 116 |
| 3182 | 88 | 3,645 | 9.44 | 45 | 165 | 132 | 106 |
| 3190 | 165 | 6,807 | 19.23 | 207 | 9,974 | 274 | 72 |
| 3201 | 165 | 6,415 | 9.85 | 126 | 2,383 | 105 | 87 |
| 3203 | 94 | 5,013 | 8.18 | 74 | 838 | 235 | 38 |
| 3204 | 73 | 2,518 | 9.05 | 23 | 201 | 32 | 13 |
| 3211 | 155 | 5,174 | 8.68 | 8 | 102 | 29 | 133 |
| 3212 | 128 | 4,863 | 11.76 | 84 | 3,531 | 293 | 153 |
| 3231 | 95 | 3,520 | 8.21 | 34 | 299 | 99 | 417 |
| 3232 | 174 | 7,636 | 19.04 | 133 | 19,110 | 237 | 100 |
| 3240 | 110 | 3,734 | 17.19 | 68 | 1,487 | 413 | 226 |
| 3250 | 105 | 3,996 | 21.25 | 66 | 1,188 | 78 | 188 |
| 3261 | 93 | 3,316 | 19.18 | 17 | 50 | 25 | 44 |
| 3262 | 129 | 4,233 | 14.98 | 76 | 816 | 653 | 277 |
| 3291 | 159 | 4,087 | 24.74 | 137 | 2,039 | 106 | 680 |
| **India Total** | **4,532** | **173,053** | | **2,928** | **88,119** | **6,151** | **6,578** |
| 3220 | 72 | 2,095 | 16.04 | 95 | 6,210 | 144 | 76 |
| 3271 | 142 | 3,118 | 17.70 | 152 | 2,438 | 192 | 25 |
| 3272 | 161 | 1,779 | 18.61 | 70 | 988 | 22 | 47 |
| 3281 | 309 | 8,661 | 18.67 | 279 | 2,678 | 156 | 207 |
| 3282 | 182 | 3,682 | 10.56 | 202 | 1,667 | 49 | 47 |
| 3292 | 155 | 5,962 | 18.00 | 176 | 5,130 | 142 | 131 |
| **S Asia Total** | **5,553** | **198,350** | | **3,902** | **107,230** | **6,856** | **7,111** |

*Source: RI South Asia Office*

# பிரிட்டிஷ் ஆட்சியை வெறுத்தாலும் இந்தியர்கள் ராணியை நேசித்தது ஏன்?

**ரஷீதா பகத்**

எதிர்பார்த்தபடியே ராணி இரண்டாம் எலிசபெத் மறைவை இந்தியர்கள் கனத்த இதயத்துடன் ஏற்றுக்கொண்டு ஒரு பெரிய இழப்பாகவே கருதினார்கள். ஒரு சகாப்தம் முடிந்துவிட்டதாகவே உணர்ந்தார்கள். என்னை தவறாக நினைக்க வேண்டாம். ஒட்டு மொத்த தேசமும் துக்கத்தை வெளிப்படுத்தியது போல் இல்லை. ராணியை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரிட்டிஷ் ஆட்சியை ஒரு கொடுங்கோன்மை ஆட்சியாகவே சிலர் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். பல ஆண்டுகளாக இந்தியாவை காலனி ஆதிக்க ஆட்சிக்கு உட்படுத்தியதாகவும், குறிப்பாக கோஹினூர் வைரம் உள்ளிட்ட நமது சொத்துக்களை கொள்ளையடித் ததாகவும் குறிப்பிட்டிருந்தனர். பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியர்கள் சொல்லொணா துயரத்துக்கு ஆளானதாகவும் கூறியிருந்தனர். இருந்தாலும் பிரிட்டிஷ் ராணியின் மென்மையான போக்கும், நளினமான பேச்சும், கருணையும், நிகரற்ற கண்ணியமும், ஆளுமையும், அனைத்திற்கும் மேலாக, அவரது மாறாத புன்னகையும் இந்தியா உள்பட உலகளாவிய அளவில் மரியாதையை பெற்றுத்தந்தது.

அவரது 70 ஆண்டுக்கால பதவிக்காலத்தில் கேலி, கிண்டல், விமர்சனங்கள், கோபம், கடுங்கோபத்தையும் அவர் சந்திக்க நேர்ந்தது. அவர் மீது கேலி பேசியவர்களில் மற்றவர்களைவிட வட அயர்லாந்து மற்றும் கிரேட் பிரிட்டனை உள்ளடக்கிய குடிமக்களே அதிகம். ஆடம்பரமாக சுற்றித்திரிவதைத் தவிர வேறு எதுவும் செய்யாத பிரிட்டஷ் மன்னர் குடும்பத்திற்கு அரசு ஏன் செலவு செய்ய வேண்டும். இது மக்களின் வரிப்பணம் அல்லவா என்று குடிமக்களில் பலரும் கேள்வி எழுப்பியதுண்டு.

ஏழு தசாப்தங்களாக எலிசபெத்தால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட முடியாச்சியின் மீதான வெறுப்பு மற்றும் மனக்கசப்பு 1997ஆம் ஆண்டு பாரிஸில் கார் விபத்தில் டயானா கொல்லப்பட்ட போது உச்சத்தை அடைந்தது. டயானாவுடன் நல்லுறவு இல்லாமல் ராணி எலிசபெத், அந்த சமயத்தில் ஸ்காட்லாந்தில் உள்ள பால்மோரல் காஸில் அரண்மனையில் இருந்தார். லண்டனில் டயானாவின் இறுதிச் சடங்கில் பங்கேற்க அவர் வருவதாக இல்லை. வேல்ஸ் இளவரசர் சார்லஸை விவாகரத்து செய்த பிறகு டயானா அரச குடும்பத்தைச் சேர்ந்தவராக இல்லை. ஆனாலும், இளவரசி டயானாவின் மரணம் பிரிட்டன் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியது பிரிட்டிஷ் அரச குடும்பத்தை திகைக்கவைத்தது.

இது அவரது நீண்ட ஆட்சியில் மோசமான நெருக்கடியை ஏற்படுத்தியது. சூறாவளி போல பொது மக்களிடம் எழுந்த துயரம், அரசு குடும்பத்தினர் மீது, குறிப்பாக ராணிக்கு எதிரான குற்றச் சாட்டாக மாறியது. ஏனெனில் அவர் லண்டனுக்கு வரவில்லை. ஊடகங் களின் அழுத்தம் மற்றும் ராணிக்கு அக்கறையில்லை, அவரிடம் மனிதாபமே இல்லை, கல்நெஞ்சக் காரி என்ற விமர்சனங்கள் எழுந்தன. ராணி எங்கே? அவருக்கு இதில் அக்கறை இல்லையா? என்று பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகள் வெளியான நிலையில், பக்கிங்ஹாம் அரண்மனையில் பூங்கொத்துக்கள் மலைபோல் குவிந்த நிலையில் அவர் செயல்பட முடிவு செய்தார்.

ராணி, தனது முன்னாள் மருமகளின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வாரா என்பது பற்றிய விவாதங்கள் எழுந்த நிலையில், எலிசபெத் ராணியின் துணிச்சலான கடமை உணர்வு மற்றும் சரியான நேரத்தில் சரியானதை செய்யும் எண்ணம் அவர் முன் வந்தது. இறுதியில் டயானா எதிர்கால பிரிட்டிஷ் மன்னரின் தாயார் என்பதையும் அவர் உணர்ந்து கொண்டார்.

இதையடுத்து இறுதிச்சடங்குக்கு ஒருநாள் முன்னதாக ராணி, லண்டன் சென்றார். வானொலி மூலம் பொது மக்களிடம் நேரலையாகப் பேசி னார். அவரது பேச்சு பிரிட்டிஷ் குடிமக்களின் கோபத்தை தணிக்கும் வகையில் இருந்தது. தன்னிச்சையாக மனதைக் கவரும் வகையில் பேசிய அவர், துயரத்தையும், இழப்பையும் எப்படி சமாளிப்பது பற்றியும், ஒவ்வொருவரும் எப்படி அதை சமாளிக்க முயற்சி செய்கிறார்கள் என்பது பற்றியும் பேசினார். இழப்பின் உணர்வை வெளிப்படுத்துவது எளிதல்ல. ஏனெனில் ஆரம்பத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியை அவநம்பிக்கை, புரியாத தன்மை, கோபம் உள்ளிட்டவை வெற்றிகொள்கிறது. கடந்த சில தினங்களாக நாம் அதை உணர்ந்திருக்கிறோம். நான் இப்போது உங்களுக்கு சொல்வ தெல்லாம் உங்களின் ராணி மற்றும் பாட்டி என்ற முறையில் நான் இதயபூர்வமாக பேசுகிறேன். டயானா ஒரு விதிவிலக்கான, அறிவுசார்ந்த மனிதப் பிறவி. அவருக்கு எனது அன்பான இதய அஞ்சலி என்று கூறிய அவர், இந்த துயரத்தின் மூலம் பாடம் கற்றுக் கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அவரது பேச்சு அரச குடும்பத் தின் மீதான கோபத்தை தணிக்கும்



ராணி எலிசபெத் - இளவரசர்
ஃபிலிப் திருமணம்.

வகையில் இருந்தது. தாம் ஏதும் தவறு செய்யவில்லை என்பதையும் தாம் கல்நெஞ்சக்காரி இல்லை என்பதை வெளிப்படுத்தும் வகையிலும் அவரது பேச்சு இருந்தது. என்ன இருந்தாலும் நானும் ஒரு மனிதப்பிறவிதானே என்பது போல் அவரது பேச்சு அமைந்திருந்தது.

முதலில் இங்கிலாந்து, அடுத்து பிரிட்டன் அதன் பிறகு யுனைடெட் கிங்டம் (ஐக்கிய ராஜ்ஜியம்) ஆகியவற்றின் மன்னர்கள் மற்றும் ராணி வரிசையில் எலிசபெத் 42-வது இடத்தில் இருந்தார். அவர், ஃபிஜி, ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து, பஹாமாஸ் முதல் கனடா வரை 15 நாடுகளின் தலைவியாக இருந்துள்ளார். மேற்குறிப்பிட்ட நாடுகள் எல்லாமே ஒருகாலத்தில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

காமன்வெல்த் நாடுகளின் தலைவராக இருப்பது என்பது உலகின் மூன்றில் ஒரு பங்கு மக்கள் தொகை கொண்ட, 2.1 பில்லியன் மக்கள் தொகை கொண்ட 54 நாடுகளின் தலைவராக இருப்பதை குறிக்கிறது. அவருக்கு அரசியல் அதிகாரம் எதுவும் இல்லை என்றாலும் அவர், லட்சக் கணக்கான மக்களின் மனம் கவர்ந்த தலைவராகவே வலம் வந்தார்.

அவரது சொந்த நாட்டிலேயே அவருக்கு அரசியல் அதிகாரமோ அல்லது முடிவெடுக்கும் அதிகாரமோ இல்லை. ஆனாலும் ஆலோசனை கலக்கும் உரிமையைப் பெற்றிருந்தார். ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் அவர் சில சமயங்களில் பிரதமர்களை எச்சரித்ததாக நம்பப் படுகிறது. தமது பதவிக்காலத்தில் இப்போது புதிதாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள பிரதமர் லிஸ் டிரஸ் உள்பட 15-க்கும் மேலான பிரதமர்களுக்கு அவர் ஆலோசனை கூறிவந்துள்ளார்.

இங்கிலாந்தின் முதல் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலுடன் அவர் சிறப்பான நல்லுறவை வைத்திருந்தார். சுதந்திரம் பெறுவதற்கு முன்னதாக சர்ச்சில், மகாத்மா காந்தி மற்றும் இந்தியாவுக்கும் எதிராக கருத்துக்களை கூறிவந்ததால் இந்தியர்கள் அவரை விரும்பவில்லை. 1943ல் பெங்காலில் கடும் பஞ்சம் ஏற்பட்டு ஏறக்குறைய 3 மில்லியன் மக்கள் பசியாலும், ஊட்டச்சத்து குறைபாடாலும் இறக்க நேர்ந்த தகவலை சர்ச்சிலிடம் தெரிவித்தபோது, துடுக்குத்தனமாக “காந்தி இன்னும் இறக்கவில்லையா?”


1


5

என்று அற்பத்தனமாக பேசியது இங்கு நினைவுகூறத்தக்கது.

கிரீக் இளவரசர் பிலிப்புடன் அவருக்கு திருமணம் நடந்தது. கிரீஸில் பதவி நீக்கம் செய்யப்பட்ட மன்னரின் மருமகனை அவர் விரும்பி மணந்து கொண்டது சுவையான கதை. அரச குடும்பத்தின் வற்புறுத்தல் இல்லாமல் திறந்தமனதுடன் எலிசபெத் அவரை மணந்துகொண்டார். தி கார்டியன் பத்திரிகை அவரது திருமணம் பற்றி பின்வருமாறு கூறியிருந்தது: எலிசபெத்தைவிட ஐந்து வயது மூத்தவர். அழகானவர் மற்றும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். எலிசபெத்தை திருமணம் செய்துகொள்ள தகுதியானவர்கள் பட்டியலில் பிலிப் பெயர் இல்லை. அவளின் பெற்றோர் பிலிப்புடன் திருமணத்தை தடுத்து நிறுத்த முயன்றனர். இளவரசர் பிலிப், ராயல் கடற்படையில் பணியாற்றிய போதிலும், வார இறுதியில் அரண்மனைக்கு வந்து அவர் தங்கும் போது


4





நன்றி-தி ஹிந்து







1 *பிரட்டிஷ் ராணி எலிசபெத் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன்.*
2 *(வலதிலிருந்து) பிரதமர் ஜவஹர்லால் நேரு, விஜயலஷ்மி பண்டிட், இளவரசர் ஃபிலிப், குடியரசு தலைவர் ராஜேந்திர பிரசாத், மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோருடன்.*
3 *இளவரசி டையனாவுடன்.*
4 *பேரக் ஒபாமா மற்றும் மிஷல் ஒபாமாவுடன்.*
5 *பில் கிளின்டனுடன்.*

ஓட்டை ஷூக்கள், போதிய ஆடைகள் இல்லாமை, பிலிப்பின் மூத்த சகோதரிகள் ஜெர்மன் நாஜிக்களை திருமணம் செய்துகொண்டது என்பது போன்ற காரணங்களால் அங்குள்ள பணியாளர்கள் அவரை ஏளனம் செய்தனர். ஆனால், ராணி எலிசபெத் பிடிவாதமாக நின்று அவரை திருமணம் செய்து கொண்டார். அதன் பின் மற்றவை வரலாறு.

இதில் சுவாரஸ்யம் என்ன வெனில் எலிசபெத் தனது பதவிக் காலத்தில் ட்ரூமென் முதல் ஜோ பைடன் வரை 14 அமெரிக்க அதிபர்களை பார்த்துள்ளார். லிண்டன் ஜான்ஸனைத் தவிர மற்ற அனைவரையும் அவர் சந்தித்துள்ளார். அவர், தனது 96வது வயதில் காலமானபோது உலகின் அனைத்து பகுதிகளிலும் அவர் கொண்டிருந்த வரையறுக்க முடியாத ஆனால், மறுக்க முடியாத மென்மையான போக்கை அங்கீகரிக்கும் வகையில், அமெரிக்க கட்டடங்களில் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப் பட்டன. ஜனநாயக கட்சியினரும், குடியரசுக் கட்சியினரும் ஒருவருடன் ஒருவர் மோதிக் கொள்ளும் நிலையிலும் இரு தரப்பினரும் பிரிட்டிஷ் ராணியை நேசித்தது, அவரது கண்ணியம், கருணை மற்றும் நேர்த்தியான செயலுக்கு கிடைத்த மரியாதையாகும்.

மன்னரை மதிப்பது என்பது அமெரிக்கர்களுக்கு ஒரு அபத்தமான யோசனையாக இருக்கலாம். ஆனால், அவர்கள் மன்னர் குடும்பத்தை மதித்தார்கள் எனில் அது ராணி எலிசபெத்தைத்தான். மிச்சேல் ஒபாமா போன்ற பிரபலங்கள் ராணியை சந்திக்க வேண்டும் என்றால் அதற்கு சில நடைமுறைகள் உள்ளன. ஆனால், ராணி அவற்றில் கடுமையாக இல்லை. தாம் ராணியை பார்க்கச் சென்றபோது, அவரது முதுகில் கையைப் போட்டு ஒரு தவறு செய்துவிட்டதாக மிச்செல் ஒபாமா நினைவுகூர்ந்தார். நெறிமுறைகள் படி யாரும் ராணியைத் தொடக்கூடாது. இது தவறு என்பது எனக்கு பின்னர்தான் தெரியவந்தது. ஆனால், ராணி அதை பொருட்படுத்தவில்லை. நான் அவரது முதுகை தொட்ட நிலையில் அவர், தனது கையுறை அணிந்த கையால் எனது பின்பக்கம் தொட்டு அழுத்தி என்னை அருகில் இழுத்தார் என்றார் மிச்செல் ஒபாமா.

பில் கிளிண்டன் துல்லியமாக மதிப்பிடுகையில், அவருடைய கம்பீரம் என்னைக் கவர்ந்தது. அவர் சூழ்நிலையால் அரச குடும்பத்தில் பிறந்துவிட்டார். இல்லையெனில் அவர் வெற்றிகரமான அரசியல் வாதியாகவோ அல்லது ராஜதந்திரி யாகவோ இருந்திருப்பார்.

ஆனால், அவர் ராணியானாலும் இரண்டுமாகவே இருந்திருக்கிறார். அவர் பல நாடுகளுக்கு பயணம் செய்து மக்களை சந்தித்து இருக்கிறார். காமன்வெல்த் மற்றும் இதர நாடுகளில் தமது கடமையை செவ்வனே செய்திருக்கிறார். ஆனாலும் அவர் அரசியல் செய்யவில்லை. அவர் பொது வெளியில் சர்ச்சைக்குரிய வார்த்தைகளை பேசியதில்லை. அவரது அறிக்கைகள் அல்லது கருத்துகள் சமநிலையாகவே இருந்தன. வார்த்தைகளையும் அவர் அளந்தே பேசினார்.

சிறையிலிருந்து வெளிவந்தபின் நெல்சன் மண்டேலா, ராணியுடன் நெருங்கிய உறவு வைத்திருந்தார். இருவரும் அடிக்கடி தொலைபேசியில் உரையாடி வந்தனர். இருவரும் பரஸ்பரம் மரியாதையுடனும், பாசத்துடன் இருந்தனர். வறட்சி நிலவிய தென்னாப்பிரிக்காவுக்கு ராணி எலிசபெத், பயணமாக வந்தபோது இடைவிடாத பலத்த மழையைக் கொண்டுவந்தாராம். இதனால் அவரை, மண்டேலா "மோதாலேபுலா" (Mothalepula) (மழையைக் கொண்டுவந்தவர்) என்று செல்லமாக அழைத்தாராம்.

இந்தியாவும் ராணியும் என்று வரும்போது விடைகேட்கும் கேள்வி என்னவென்றால், பிரிட்டிஷாரின் நீண்டகால ஆட்சியில் இந்தியர்கள் துயரங்களை அனுபவித்தார்களா? பிரிட்டிஷார், இந்தியாவின் செல்வங்களைச் சூறையாடினார்களா? ராணி எலிசபெத் ஏன் இந்தியர்களால் வெறுக்கப்படும் நபராக இல்லை? என்பதுதான். இந்த சிக்கலான கேள்விக்கு பல பதில்கள் உள்ளன. முதலில் எலிசபெத் 1952ல் தந்தை ஆறாம் ஜார்ஜ் மரணத்தை அடுத்து ராணியாக அறிவிக் கப்பட்டார். 1953ல் தான் அவர் அதிகாரப்பூர்வமாக ராணியானார். ஆனால், அவர், ராணி என்ற அந்தஸ்தை பெறுவதற்கு முன்னரே இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டது.



*நெல்சன் மண்டேலாவுடன்.*

மேலும் காலனி ஆட்சி மற்றும் இந்தியாவை சுரண்டும் சம்பவம் நடந்த நேரத்தில் ஆங்கிலேய மன்னராட்சி வெறும் ஆளுமை சக்தியாக மாறும் நிலையில் இருந்தது. கிழக்கிந்திய கம்பெனி மற்றும் அரசியல்வாதிகளின் சூழ்ச்சி மற்றும் அதிகார வர்க்கத்தினர் உலகில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்க நாடுகளின் செல்வங்களைச் சுரண்டும் வேலைகளில் இறங்கினர். அதில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது.

பிரபல எழுத்தாளர் ராபின் ஆர்டிஸ்ஸான், ராணியின் மறைவுக்குப் பின் ஒரு குறிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய ராஜ்ஜியத்துக்கு (யுனைடெட் கிங்டம்) வெளியில் உள்ள எனது நண்பர்களுக்காக இதை எழுதுகிறேன். கடந்த 400 ஆண்டுக் காலமாக நடந்த காலனி ஆட்சியின் துயரங் களுக்காக சிலர் ராணியை அல்லது அவரது மகன் சார்லஸை குறி வைக்கின்றனர். இது சரியானதாகவோ அல்லது வரலாற்று ரீதியில் ஆதரவு இருப்பதாகவோ நான் நினைக்கவில்லை. உங்கள் எதிரி-உண்மையில் காலனித்துவப் படுத்தியது அல்லது மக்களை கொலை செய்தது அல்லது சுரண்டியது முதலாளித்துவம்தான். அது ஒரு குடும்பம் அல்லது பல குடும்பங்களின் தொகுப்பும் அல்ல. அது ஒரு தீயசக்தி. அது வாழ்க்கையின் ஒவ்வொரு மூலையிலும் பரவியது. பல நூற்றாண்டுகளாக நடந்த தீமைக்கு ஒரு நபரை குற்றஞ்சாட்ட முடியாது. ஒரு நாட்டின் தலைவர் என்பதற்காக அவரின் மீது பழிசுமத்த முடியாது. அமெரிக்காவில் நாம் அதிகாரத் தரகர்களை புறக்கணிக்கிறோம். ஆனால், எதற்கெடுத்தாலும் அதிபரை குற்றஞ்சாட்டுகிறோம். உண்மையில் அதிபருக்கான அதிகாரங்கள் குறைவு தான். சில தவறுகள் நடக்கலாம். ஏனெனில் எல்லோரும் மனிதர்கள்தானே. ஆனால், நாம் வெறுப்பதற்கும், குற்றஞ்சாட்டவும் ஒருவரின் முகத்தைத் தேடுகிறோம்.

இது தந்திரமான செயல்போல் தெரிகிறதல்லவா?

இதுபோன்ற சுவாரஸ்யமான வரலாற்று கண்ணோட்டங்கள், ராணி எலிசபெத் எந்த நாட்டையும் காலனீய ஆதிக்கத்துக்கு கொண்டுவரவில்லை அல்லது எந்த நாட்டின் மீதும் போர் தொடுக்கவில்லை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. அவருக்கு கொடுக்கப்பட்ட வேலையை அவர் சரியாகவே செய்திருக்கிறார். அவர் எல்லோரிடமும் கண்ணியமாகவும், கருணையுடனும், நேர்மையாகவும் நடந்து கொண்டுள்ளார். சக்திவாய்ந்த அரச குடும்பத்தினர் அதிகார தோரணையில்தான் இருப்பார்கள், செயல்படுவார்கள் என்று எதிர்பார்த்த நிலையில் அவரது செயலில் ஆணவத்துக்கான எந்த தடயமும் இல்லை என்பதுதான் உண்மை.

ஊழல்கள் மற்றும் எழுச்சிகளுக்கு நடுவில் அவர் தலைமையிலான அரச குடும்பம் பல தோல்வியுற்ற திருமணங்களை- சார்லஸ், ஆனி, ஆண்ட்ரூ சந்திக்க நேர்ந்தது. கோபத்தின் உச்சியில் இருந்த டயானா, அரச குடும்பத்தினரின் ரகசியங்களை பேட்டிகள் மூலம் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தினார். பிரிட்டிஷ் அரச குடும்பத்தை மக்கள் முன்பைவிட அதிகமாக வெறுக்கச் செய்தார். கடந்த சில ஆண்டுகளாக தனது செல்லப் பிள்ளையான ஆண்ட்ரூவுடன் அவருக்கு கருத்து வேறுபாடு இருந்து வந்தது. அமெரிக்க நண்பருடன் ஆண்ட்ரூவுக்கு இருந்த பாலியல் தொடர்பு காரணமாக அரசு கடமைகளை துறக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அரச குடும்பத்தின் விருப்பத்துக்கு மாறாக இளவரசர் ஹாரி, அமெரிக்க நடிகை மேக்ஹன் மார்கலை திருமணம் செய்து கொண்டார்.

ஆனால், கடினமான சூழ்நிலைகளிலும் ராணி எலிசபெத் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தவில்லை. தமது வழக்கமான பணிகளிலிருந்து அவர் ஓய்வெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர், தமது பவள விழா கொண்டாட்டங்களின் போது பக்கிங்ஹாம் அரண்மனை பால் கனியிலிருந்து இரண்டு முறை மட்டுமே காட்சியளித்தார்.

பிரதமர் நரேந்திர மோடி, நமது காலத்தில் வாழ்ந்த சிறந்த நட்சத்திரம் என்று கூறி அஞ்சலி செலுத்தியுள்ளார். மேலும் பொது வாழ்வில் கண்ணியத்தை கடைப் பிடித்தவர் என்றும் தெரிவித்துள்ளார். எல்லாவற்றையும்விட ராணி எலிசபெத் மறைவுக்கு ஒரு நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படுவதாக இந்திய அரசு அறிவித்தபோது யாரும் புருவத்தை உயர்த்தி எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.



*பிரதம மந்திரி இந்திரா காந்தி மற்றும் குடியரசு தலைவர் ஜெயில் சிங் அவர்களுடன்.*

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# பிரிட்டிஷ் அரச குடும்பத்துடன் ரோட்டரியின் தொடர்பு

## ரோட்டரி செய்திக்குழு

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவு மற்றும் இளவரசர் சார்லஸ் அரியணை ஏறுதல் ஆகியவற்றில் உலகம் கவனம் செலுத்தி வரும் நிலையில், பிரிட்டிஷ் அரச குடும்பத்துக்கு ரோட்டரியுடன் இருந்த ஆழமான தொடர்பு வெளிச் சத்துக்கு வந்துள்ளது. மூன்றாம் சார்லஸ் மன்னர், ஸ்காட்லாந்தில் உள்ள பஞ்சோரி டெர்னன் ரோட்டரி சங்கத்தின் (RID 1010) கௌரவ உறுப்பினராக 1992 முதல் இருந்து வருகிறார். கடந்த ஜூன் மாதம்தான் அவருக்கு ருவாண்டாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் PRIP சேகர் மேத்தா, ரோட்டரி விருது வழங்கி கௌரவித்தார். பல்லுயிர்பெருக்கம் மற்றும் நிலைத்தன்மைக்கு அர்ப்பணிப்பு உணர்வுடன் ஆற்றிய பணிக்காக அவருக்கு இந்த விருது வழங்கப் பட்டது. சர்வதேச அளவில் போலியோ ஒழிப்பு முயற்சிகளுக்கு ஆதரவாகவும் அவர் இருந்துள்ளார். 2003ம் ஆண்டில் தில்லிக்கு அருகில் உள்ள கிராமத்தில் நடைபெற்ற போலியோ NID நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றுள்ளார். 2013ம் ஆண்டு அவர் மீண்டும் இந்தியா வந்தபோது நாட்டில் போலியோவை ஒழிப்பதில் ரோட்டரியின் பெருமுயற்சியை அங்கீகரித்து ஒப்புக்கொண்டார். 2018ல் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் போலியோ ஒழிப்பு முயற்சியில் ரோட்டரியின் முக்கிய பங்கு பணிகளை அவர் பாராட்டினார்.



*2003ம் ஆண்டு தில்லியில் நடைப்பெற்ற ஒரு போலியோ NIDயில் பிரிட்டிஷ் அரசர் சார்லஸ் III.*

அவரது சகோதரி இளவரசி ஆன், போலியோ குறித்த டொரன்டோ மாநாட்டில் உரையாற்றினார். அவர், ஸ்காட்லாந்தில் உள்ள எல்ஜின் ரோட்டரி சங்கத்தின் கௌரவ உறுப்பினர். எடின்பர்கின் மறைந்த கோமகன், இளவரசர் பிலிப், லண்டன், எடின்பர்க், கிங்க்ஸ் லின், வின்ட்ஸர் செயின்ட் ஜார்ஜ் மற்றும் வின்ட்ஸர் மற்றும் ஈடன் ஆகிய ரோட்டரி சங்கங்களின் கௌரவ உறுப்பினராக இருந்தார். 2013 ஆம் ஆண்டு பக்கிங்ஹாம் அரண்மனையில் எலிசபெத் ராணியாக பட்டமேற்ற 60 ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சியில், ரோட்டரி தலைவர், ராணிக்கு ரோட்டரி விருது வழங்கி கௌரவித்தார். மனிதநேய குழுக்களுக்கும், ரோட்டரியின் போலியோ ஒழிப்பு முயற்சிகளுக்கும் ஆதரவாக இருந்ததற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

எலிசபெத் ராணியின் மறைவுக்கு ரோட்டரி தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், அவரது மனிதாபிமான செயல்பாடுகளும், அமைதி மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் அவருக்கு இருந்த உறுதிப்பாடும் உலகம் முழுவதிலும் உள்ள ரோட்டேரியன்களை குறிப்பாக காமன்வெல்த நாடுகளில் உள்ளவர் களை வெகுவாக ஊக்கப்படுத்தியது என்று குறிப்பிட்டிருந்தார்.■




*பிரிட்டிஷ் அரசர் சார்லஸ் உடன் PRIP சேகர் மேத்தா மற்றும் ராஷி, ருவாண்டாவில் நடைபெற்ற CHOGM நிகழ்ச்சியில்.*

# கருப்பை வாய்ப் புற்றுநோயைக் கண்டறிய உதவும் ரோட்டரி மழை ஓட்டம்

**கிரண் ஜெஹரா**




“ரோட்டரி மழை ஓட்டம் என்பது கோவா-வில் மிகவும் எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சி, நாட்டின் முதன்மை மாரத்தான் ஓட்டங்களில் ஒன்று, உலகெங்குமிருந்து ஓடுவோரை ஈர்ப்பது” என்கிறார் RC போர்வொரிம், RID 3170, செயலாளர் நிகில் ஷா. ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதத்தில் இந்தச் சங்கம் நடத்துகிற இந்த மாரத்தான் 10வது முறையாக நடைபெற்றது, இதில் 3,000 ஓடுவோர் பங்கேற்றார்கள். இந்தச் சங்கம் கோவா சுற்றுலாத் துறை, இந்திய ராணுவம், இந்தியக் கடற்படை அடித்தள ஆதரவு வசதி (கோவா) உடன் இணைந்து இதை நடத்தியது. “கோவா போன்ற சுற்றுலாத் தலம் ஒரு சிறப்பு நிகழ்ச்சியை நடத்துவது எப்போதும் சிறப்புதான். இது ரோட்டரியின் பொது தோற்றத்தை மேம்படுத்த உதவியது,” என்றார் நிகழ்ச்சித் தலைவர் அவினாஷ் பர்மர்.

ஒவ்வோர் ஆண்டும் பதிவு மூலம் திரட்டப்படும் நிதியை இந்தச் சங்கம் போர்வொரிம்மில் சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் பயன்படுத்துகிறது. இந்த ஆண்டு ஓட்டம், பெண்களில் கருப்பை வாய் மற்றும் மார்பகப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிந்து குணப்படுத்துதலை ஆதரிக்க நடத்தப்பட்டது என்று தொடர்ந்து கூறுகிறார் ஷா. “இந்த நிகழ்ச்சியில் சேமிக்கப்பட்ட தொகை, பெண்களுடைய நலன், புற்றுநோய் விழிப்புணர்விற்காக, பணியாற்றும் பிரகாஷ் புற்றுநோய் உதவித் திட்டம் (PCAP) என்ற எங்களுடைய அடையாள முன்னெடுப்பை மேம்படுத்தப் பயன்படுத்தப்படும்.” இதுவரை இச்சங்கம் 160க்கும் மேற்பட்ட ஆலோசனை முகாம்களை நடத்தியுள்ளது, 3,500 பெண்கள் பாப் ஸ்மியர் பரிசோதனை செய்து கொண்டுள்ளார்கள். இச்சங்கம் 20 நோயாளிகளுடைய சிகிச்சையை ஆதரிக்கிறது, பெண்களுக்குப் பொது நலப் பராமரிப்பு, தூய்மைபற்றி ஆலோசனைகளையும் வழங்குகிறது.

இந்தச் சங்கம் பங்கேற்பாளர் களுடைய ஓட்ட நேரத்தைப் பின் தொடர்வதற்கு RFID (வானொலி அதிர்வெண் அடையாளம் காணல்) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் டைமிங் டெக்னாலஜீஸ் இந்தியாவுடன் இணைந்து பணியாற்றியது.

ரோட்டரி மழை ஓட்டத்தில் மூன்று வகைகள்: 5, 10 மற்றும் 21கிமீ (அரை மாரத்தான்). இதில் 10கிமீ, அரை மாரத்தான் நேரம் கணக்கிடப்பட்ட நிகழ்ச்சிகளாகும் ஓட்டப் பந்தயங்களில் பங்கேற்ற வர்களுக்குப் பதக்கங்கள், டி-சட்டைகள் விருதளிக்கப் பட்டன. அனைத்துப் பங்கேற் பாளர்களுக்கும் காலை உணவு, தண்ணீர் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு ஓட்டத்தின் பிராண்ட் தூதுவர்கள், மும்பையைச் சேர்ந்த மாற்றுத் திறனாளித் தடகள வீரர் பிரதீப் கும்பர், பனாஜி-யைச் சேர்ந்த, புற்றுநோயிலிருந்து பிழைத்த மரியோலா மாதியாஸ். இந்த மாரத்தான் பம்போலிம்-ல் உள்ள கோவா விளையாட்டு அலுவல் அமைப்பின் தடகள மைதானத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டது.■

# பிங்கோரி கிராம மக்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திய புனே ரோட்டேரியன்கள்

ரஷீதா பகத்



புனேவிலிருந்து சுமார் 66 கி.மீ. தொலைவில் உள்ள, மேற்கு தொடர்ச்சி மலையில், சஹயாத்ரி மலைத் தொடரில் அமைந்துள்ள சிறிய கிராமம் பிங்கோரி. இங்குள்ள வாகேஸ்வரி கோவில் வரலாற்று, கலாசார முக்கியத்துவம் பெற்றதாகும். மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் மழை மறைவுப் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த கிராமம் மழைக்காலத்தில் இயற்கை அழகுடன் இருப்பதை கண்டு ரசிக்கலாம். ஆனால், 1300க்கும் மேற்பட்ட கிராம மக்களின் விவசாயத் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு ஆண்டு மழை போதுமானதாக இல்லை.

இங்குள்ள மக்களின் முக்கிய தொழில் விவசாயம்தான் என்கிறார் இந்த கிராமத்தை தத்தெடுத்து, கிராமத்தையும் நீர்நிலைகளையும் மாற்றியமைத்துள்ள புனே ரோட்டரி மாவட்டம் 3131க்கு உட்பட்ட அவுந்த் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் பாபா ஷிண்டே. உள்ளூர் மக்களிடம் சராசரியாக 1 முதல் 2 ஏக்கர் வரை நிலம் உள்ளது. குறைந்த அளவே தண்ணீர் உள்ளதால் நெல்சாகுபடிக்கு அது போது மானதாக இல்லை. எனவே விவசாயிகள் கம்பு, சோளம் மற்றும் காய்கறி ரகங்களை பயிரிட்டு வருகின்றனர். கோதுமை சிறய அளவிலேயே பயிரிடப்படுகிறது.



RC *அவுந்த் மற்றும் பிம்ப்ரி எலைட்-ஐ சார்ந்த உறுப்பினர்கள் பிங்கோரியில் உள்ள ஜெய் கணேஷ் ஏரிக்கரையில்.*

2014ம் ஆண்டு, பிங்கோரி கிராமத்தின் தண்ணீர் பற்றாக்குறை நிலைமை அவுந்த் ரோட்டரி சங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. கோடைகாலத்தில் வறட்சியினால் கிராம மக்களுக்கும் கறவை மாடுகளுக்கும் சரிவர தண்ணீர் கிடைக்கவில்லை. பால் விற்பனைதான் இந்த கிராம மக்களுக்கு வருவாய் வாழ்வாதாரமாக இருந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கு பிறகு கிணறுகள் மற்றும் ஓடைகள் வற்றிவிடுவதால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆண்டுக்கு 400 மி.மீ. அளவே மழை பெய்வதால், கிராம மக்களின் விவசாயத் தேவைகளை பூர்த்தி செய்வதாக இல்லை. விவசாயிகளால் ஒரு பயிரைக்கூட முழுமையாக சாகுபடி செய்ய முடியவில்லை. பசு மற்றும் எருமை மாடுகளுக்கு மேய்வதற்கு புல்வெளிகள் இல்லை. இதனால் பால் உற்பத்தி வெகுவாக பாதிக்கப்படுகிறது என்கிறார் ஷிண்டே.

கிராமத்தில் போதுமான சுகாதார வசதிகள் இல்லை. மேலும் பள்ளிகளில் கணினி வசதியில்லாததால் மாணவர்களுக்கு தரமான கல்வி அளிக்க முடியவில்லை. மாணவ, மாணவிகள் தினமும் 3 முதல் 5 கி.மீ. தொலைவு நடந்து சென்றுதான் பள்ளியில் படிக்க வேண்டும். போதிய வருமானம் இல்லாததால் கிராம மக்கள் சுகாதாரம் மற்றும் தூய்மையைப் பேணுவதில் கவனம் செலுத்த முடிவதில்லை.

**தடுப்பணை மறுசீரமைப்பு:**

இதையடுத்து அவுந்த் ரோட்டரி சங்கம், 2014ம் ஆண்டு தொடங்கப்பட்ட மகிழ்ச்சி கிராமங்கள் திட்டத்தின் கீழ் பிங்கோரி கிராமத்தை தத்தெடுக்க முடிவு செய்தது. முதல் கட்டமாக தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் கவனம் செலுத்தப் பட்டது. இதற்காக RID 3131 WASH குழுவுக்கு தலைமை வகித்த மீனா பொராட்டே உதவியை சங்கம் நாடியது. மேலும் மோசமான நிலையில் இருந்த தார்ஜிபுவாச்சா நளா தடுப்பணையை தத்தா தேஷ்கர் உதவியுடன் மறுசீரமைக்கவும் முடிவு செய்யப்பட்டது. சங்கத்தின் தலைவர் பிரவீண் லகே தலைமையில் உறுப்பினர்கள், பிங்கோரி கிராமப் பஞ்சாயத்துடன் இணைந்து இத்திட்டத்திற்கான ரூ.5.5 லட்சம் நிதி திரட்டினர். தடுப்பணை மறுசீரமைக்கப்பட்ட பின் அதில் மழைக்காலத்தில் 30 லட்சம் லிட்டர் தண்ணீர் சேமிக்க முடிந்தது. இதனால் விவசாய நிலங்களைச் சுற்றியுள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்தது. மேலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் நீர்மட்டம் கணிசமாக உயர்வதை காணமுடிந்தது. இதனால் விவசாயிகள் இரண்டாவது பயிர் அல்லது ராபி பயிர் சாகுபடி செய்ய முடிந்தது.

முதல் திட்டமான தண்ணீர் பெருக்கு திட்டத்தில் வெற்றியடைந்த உற்சாகத்தில் ரோட்டரி சங்கத்தினர் 2015–16ல் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை மேற்கொண்டனர். அடுத்த ஆண்டில் மலைப்பாங்கான பரப்பில்

*ரூ.**78** லட்ச செலவில் **2.5** கோடி லிட்டர் மற்றும் **4** கோடி லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு பெரிய தொட்டிகள்*



*RC அவுந்த் முன்னாள் தலைவர் பாவ்னா உல்லங்வார் (இடமிருந்து 4வது) மற்றும் சங்கத்தின் பெண் உறுப்பினர்கள்.*

அகழிகளை உருவாக்குவதன் மூலம் தண்ணீர் வெளியேறுவதைத் தடுக்கும் சவாலான திட்டம் மேற்கொள்ளப்பட்டது. மலைச் சரிவிலிருந்து வெளியேறும் தண்ணீர் நீரோட்டமாக சென்று வீணாவதற்கு பதிலாக அவை அகழிகளில் தேக்கிவைக்கப்பட்டு நிலத்தடிக்கு செல்ல வழிவகை செய்யப்பட்டது.

பிங்கோரி கிராமம் மலைச்சரிவில் அமைந்துள்ளதால், மழை நீர் நீரோடையாகச் செல்கிறதே தவிர அவை பூமியில் இறங்குவதில்லை. எனவே தண்ணீர் வீணாகாமல் இருக்க அதை தேக்கிவைக்க மலையின் அடிவாரத்தில் அகழிகள் கட்டும் திட்டத்தை செயல்படுத்தினோம் என்று விளக்கினார் அவுந்த் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் ரவீந்திர உலங்வார்.

**தண்ணீர் தொட்டிகள்:** 2016–17ம் ஆண்டில் சங்கம், புனே ஹில்ஸ் சங்கத்தின் தலைமையில், புனே கோத்ருட் மற்றும் மஹத் ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து கூட்டாக சர்வதேச மானிய உதவித் திட்டத்தை முதல் முதலாகச் செயல்படுத்த தொடங்கியது. தனித்துவமான இந்த சர்வதேச மானிய உதவித் திட்டத்தின் கீழ் 4 கோடி லிட்டர் மற்றும் 2.5 கோடி லிட்டர் கொள்ளவு திறன் கொண்ட இரண்டு தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டன. புனே ஹில்ஸ் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் போரடே, தனது நண்பர் மான்ஸி நட்கர்னி (புனேயைச் சேர்ந்தவர்) உதவியுடன், RID 8000, அமெரிக்காவின் முஸ்கான்டைன் ரோட்டரி சங்கமும் சர்வதேச பங்கு தாரராக இத்திட்டத்தில் இணைந்து கொண்டது. இந்த திட்டம் அவுந்த் ரோட்டரி சங்கத்தால், அதன் முதல் பெண் தலைவர் ஃபோரா திவான்ஜி தலைமையில் செயல்படுத்தப் பட்டது. ஜன்ஹித் பத்சன்ஸ்தா (Janhit Patsanstha) என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் ரூ.78 லட்சம் செலவில் தனித்துவமான இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த தொண்டு நிறுவனம் மட்டும் ரூ.17 லட்சம் பங்களிப்பு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.




*RC அவுந்த் முன்னாள் தலைவர் ரவி உல்லங்வார், ரோஹித் ஷிண்டே, பாவ்னா மற்றும் ஹேமந்த் சவத்ரி.*

பிங்கோரி கிராமத்தில் தண்ணீர் திட்டத்தை செயல்படுத்தும் போது அதிக அளவு தண்ணீர் சேமிப்பது, இழப்பை தடுப்பது எங்களுக்கு பெரும் சவாலாக இருந்தது. அந்த கிராமத்தில் நிலை யான நீர் ஆதாரத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை நாங்கள் உணர்ந்தோம். என்வே இரண்டு தண்ணீர் தொட்டிகள் அமைக்கும் போதும் தொட்டியின் அடிப்பரப்பில் நீர்க்கசிவு ஏற்படாமல் இருக்க சிறப்பு கவனம் செலுத்தினோம். புனே ஹில்ஸைடு ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான உமேஷ் நாயக், தனது நிபுணத்துவம் மூலம் இரண்டு தொட்டிகளிலும் நீர்க்கசிவு ஏற்படாமல் இருக்க வாட்டர்ப்ஃரூபிங் முறையை செயல்படுத் தினார். இந்த தண்ணீர் தொட்டிகள்தான் கிராம மக்களின் வாழ்வாதாரமாக உள்ளது. இப்போது ஆண்டு முழுவதும் குடிப்பதற்கும், பாசனத்திற்கும் இவைதான் பயன்படுத்தப்படுகின்றன என்று அவர் மேலும் கூறினார்.

புனேயில் உள்ள தகடுசேத் ஹல்வாய்கோவிலும் பிங்கோரி கிராமத்தில் உள்ள கணேஷ் சாகர் ஏரியை தூர்வாரி சீரமைக்க உதவிக்கரம் நீட்டியது. இப்போது பிங்கோரி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் ராபி பருவத்தில் இரண்டாவது போகம் பயிர் சாகுபடி செய்து வருவாய் ஈட்டவும் முடிகிறது.

அடுத்தடுத்த ஆண்டுகளில் அவுந்த் ரோட்டரி சங்கம் தூய்மைத் திட்டம், மரங்கள் நடும் திட்டத்தை செயல் படுத்தியது. சுமார் 5,000 மரக்கன்றுகள் நடப்பட்டன. கிராம மக்களுக்காக மருத்து முகாம் நடத்தப்பட்டது. ஊட்டச்சத்து, வைட்டமின் மற்றும் இரும்புச்சத்து குறை பாடுள்ள பெண்களின் உடல் நலனில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

முகாமில் விவசாயிகள் பலருக்கு கண்புரை நோய் இருப்பதும், பற்களில் பிரச்னைகள் இருப்பதும் கண்டறியப்பட்டது. தற்போது அங்கு ஒரு மருத்துவ சேவை மையம் திறக்கப்பட்டு மக்களின் அடிப்படை சுகாதார பிரச்னைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மாணவிகளுக்கு சைக்கிள்:** தினமும் வாகேஸ்வரி பள்ளிக்கு 3 முதல் 5 கி.மீ. தொலைவு நடந்து சென்று படித்துவரும் மாணவிகள் பக்கம் எங்கள் கவனம் திரும்பியது. நீண்ட தொலைவு சென்று படிக்க வேண்டியிருப்பதால் பல பெண்கள் பள்ளிக்கு செல்வதையே தவிர்த்து வந்தனர். இவற்றைத் தடுக்க மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கும் திட்டம் சங்கத்தின் தலைவராக இருந்த ஹேமந்த் சௌதுரி (2014–2015) பதவிக் காலத்தில் தொடங்கப்பட்டது. அடுத்த ஆண்டு இந்த திட்டத்தை அவருக்குப் பின் வந்த உலங்வார் தொடர்ந்தார். இதுவரை 300 மாணவிகளுக்கு சைக்கிள்கள் வழங்கப் பட்டுள்ளன. இதன் மூலம் மாணவிகள் பள்ளிக்கு வருகை தருவது அதிகரித்தது. மாணவர்கள் பள்ளியில் படித்து முடித்து வெளியேறும் போது அந்த சைக்கிள் இளம் மாணவிகளுக்கு வழங்கப் படுகின்றன. இதன் மூலம் அதிக அளவில் மாணவிகள் கல்வி பெற முடியும். அவுந்த் ரோட்ராக்ட் சங்கமும் தொலைதூரத்திலிருந்து வரும் மாணவிகளுக்கு சைக்கிள்களை வழங்கியுள்ளது குறிப் பிடத்தக்கது.

கிராமத்தில் போது மான நீர் இருப்பு கிடைத்தவுடன் அந்த நீரை சிக்கனமாகவும் அதேநேரத்தில் அதிகபட்ச பயன்பாட்டை உறுதிசெய்வதன் மூலம் பலரும் பயனடைய முடியும். 2017–18ம் ஆண்டு பிங்கோரி கிராமத்தைச் சேர்ந்தவரான பாபா ஷிண்டே, சங்கத்தின் தலைவரானார். அவரது பதவிக்காலத்தின்போது பிங்கோரி கிராமத்தை பசுமை யாக்கும் மற்றும் கிராம மக்களின் வாழ்க்கை தரத்தை மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி ரோட்டரி சங்கத்தின் சந்தேஷ் சாவந்த் உடன் இணைந்து சங்கம் சொட்டு நீர் பாசனத் திட்டத்தை செயல்படுத்தியது. அமெரிக்காவில் கொலராடோ மாநிலத்தின் RID 5440-க்கு உட்பட்ட போர்ட் காலின்ஸ் பிரேக்பாஸ்ட் ரோட்டரி சங்கத்தின் கூட்டாண்மையுடன் சர்வதேச மானிய உதவி மூலம் இது செயல்படுத்தப்பட்டது. ஏராளமான விவசாயிகள் பயன்பெறும் வகையில் இந்த திட்டம் 40 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டது. மேலும் சிறு மற்றும் குறு விவசாயிகள் காய்கறிகள் மற்றும் பிற ராபி பயிர்களை சாகுபடி செய்ய உதவியது.

பிங்கோரியில் விவசாயி களிடம் சராசரியாக ஒரு ஏக்கர் நிலம் மட்டுமே இருந்தது. இதற்கு முன்னர் அப்பகுதி நீர் ஆதாரத்தை பெருக்க யாரும் உதவ முன்வராததால் சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் வாழ்க்கையை சமாளிக்கவே சிரமப்பட்டு வந்தனர் என்று விளக்கினார் ஷிண்டே.

2015–2016ம் ஆண்டில் தீபக் தோஷ்னிவால் தலைவராக இருந்த போது பிங்கோரி பகுதியின் புறநகர் பகுதியில் மலைச்சரிவுகளில் மரங்களை நடும் திட்டத்தை மேற் கொண்டார். அதை ஷிண்டே தொடர்ந்தார். இந்த மரங்கள் முக்கியமாக வளரும்



RID 3131ல் **15,000** *மரக் கன்றுகள் நடப்படும்*



**இடமிருந்து:** *வசந்த் மலுஞ்கர்; RCC தலைவர் பாபா ஷிண்டே, நீர் நிர்வாக வல்லுநர் தத்தா தேஷ்கர், சதாநந்த் நாயக், வினய் கனிக்கர், ஹேமந்த் சௌத்ரி, சுமிதா, சின்ஹா மற்றும் பாவ்னா உலங்வர்.*

அடியில் தண்ணீர் கிண்ணங்கள் வைக்கப்பட்டுள்ளன. இங்கு கிராம மக்களுக்காக மருத்துவ வசதியும் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

இன்று பிங்கோரி மிகவும் மகிழ்ச்சி நிறைந்த கிராமமாக மாறியுள்ளது. முன்பு மக்களுக்கு தண்ணீர் கிடைக்க குடிநீர் லாரிகள் தேவையாக இருந்தது. ஆனால், இனி அவை தேவையில்லை. பிங்கோரியில் போதுமான அளவு நீர் ஆதாரம் உள்ளது. பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இதனால் இடைநிற்றல் தடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, மாணவிகள் அதிக எண்ணிக்கையில் வந்து படிக்கின்றனர்.

ரகங்கள் மட்டுமல்ல அவை நிழல்தரும் மரங்கள். இவற்றுக்கு அதிகம் தண்ணீர் தேவைப்படாது என்பதுடன் மழைக் காலத்தில் மண் அரிமானத்தையும் தடுக்கக்கூடியவை, தண்ணீரை தேக்கி வைக்கும் திறன் உடையவை. காலப்போக்கில் சுமார் 15,000 சீதாப்பழ மரங்கள் நடப்பட்டன. இங்கு விளையும் பழங்களை புனேயில் சந்தைப்படுத்தி விற்க ரோட்டேரியன்கள் விவசாயிகளுக்கு உதவி வருகிறார்கள் என்றார் முன்னாள் தலைவர் ஷிண்டே.

**கணினி ஆய்வகம்:** அதே ஆண்டு அவுந்த் ரோட்டரி சங்கம் வாகேஸ்வரி பள்ளியில் 10 கணினிகளுடன் ஒரு கணினி ஆய்வகத்தை நிறுவியது. மேலும் சிவில் என்ஜினீயரிங் பணிகளுக்குத் தேவையான தளவாடங்கள் அமைக்கப்பட்டு ஒரு ஆய்வகமாக மேம்படுத்தப்பட்டது. முன்னாள் மாவட்ட ஆளுநர் சுபாஷ் ஷராப் நினைவாக அவரது குடும்பத்தினர் வழங்கிய நன்கொடை மூலம் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டது.

**பறவைகள் சரணாலயம்:** அடுத்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு மீது கவனம் செலுத்தப்பட்டது. புனே மேற்கு ரோட்டரி சங்கம் மற்றும் Dr சதீஷ் பாண்டே உதவியின் மூலம் 8 ஏக்கர் பரப்பளவில் எலா பறவைகள் சரணாலயம் அமைக்கப்பட்டது. இங்கு ரோட்டேரியன்கள் மூலம் எடுக்கப்பட்ட தண்ணீர் சேமிப்பு நடவடிக்கைகளால் மாதம் 30,000 லிட்டர் தண்ணீர் சேமிக்கப் பட்டது. இந்த சரணாலயத்தில் 250 உள்ளூர் வகை மரங்கள் நடப்பட்டுள்ளன. மேலும் இது 48 வகையான பறவைகளுக்கு புகலிடமாக உள்ளது. இங்குள்ள நீர் நிலைகளில் கழுதைப்புலிகள், மான்கள், நரிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகள் தண்ணீர் குடிக்க வருகின்றன. அணில் மற்றும் எலிகளுக்காக மரத்தின்

*விவசாயிகளுக்கு ஆதாயமாக பால் விலை ஒரு லிட்டருக்கு ரூ.**28**யிலிருந்து ரூ.**33** ஆக உயர்ந்தது*

**விற்பனை நிலையம்:** விவசாயிகள் தங்களின் விளைபொருள்களை சந்தைப்படுத்த ரோட்டேரியன்கள் உதவி வருகின்றனர். புனே போன்ற பெரிய நகரிலிருந்து 60 கி.மீ. தொலைவில் பிங்கோரி இருந்ததால்தான் இவை சாத்திய மானது. ஏனெனில் புனேயில் பால் மற்றும் புத்தம் புதிய காய்கறிகளுக்கு தேவை அதிகம் உள்ளது.

2018–19 ஆம் ஆண்டு அப்போது தலைவராக இருந்த Dr பிரசாந்த் கான்கோஜி பதவிக் காலத்தில் இப்போது RCC தலைவராக இருக்கும் ஷிண்டே மேலும் ஒரு முயற்சியை மேற்கொண்டார். பிங்கோரி கிராம விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பால் மற்றும் காய்கறிப் பொருள்களை விற்பனை செய்ய அமனோரா பூங்காவில் ஒரு விற்பனை நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். புனேயின் அமனோரா பூங்கா பகுதியில் பணம்படைத்த சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். தரமான காய்கறிகள், பழங்கள் கிடைப்பதால் இங்கு குடியிருப்பவர்கள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர் என்கிறார் உலங்வார். பிங்கோரி விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைப்பது

டன், அவற்றை புனேவுக்கு கொண்டுவருவதன் மூலம் ஏராளமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது.

இங்குள்ள விற்பனை நிலையம், பிங்கோரி பண்ணைப் பொருள்கள் விற்பனை நிலையம் என்று அழைக்கப்படுகிறது. இதற்கென தனி பிராண்ட் உருவாக்கப்பட்டுள்ளது. கிராமத்தில் பால் பண்ணை தொழில் முக்கியமானதாக இருப்பதால் ரோட்டேரியன்கள் கிராம மக்களுக்கு 25 பசுக்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர். மேலும் மாடுகளை பராமரிக்கவும், பால் உற்பத்தியை பெருக்கவும் காமதேனு திட்டத்தின் கீழ் ரூ.24 லட்சம் செலவில் ஒரு கூடாரத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இவையெல்லாம் நன்றாக சென்று கொண்டிருந்த நிலையில் 2020 மார்ச் மாதத்திற்கு பின் கோவிட் தொற்று மற்றும் பொது முடக்கம் காரணமாக கிராம மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டனர். பால் பொருள்கள், காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனைக்கு அவர்கள் புனே சந்தையை மட்டுமே நம்பியிருந்ததால் பாதிக்கப்பட்டனர். அவர்களின் வருமானமும் குறைந்தது. இந்த சமயத்தில் அவுந்த் ரோட்டரி சங்கம்தான் அவர்களுக்கு உதவ முன்வந்தது. ரோட்டேரியன்கள் ஒரு வாட்ஸ்ஆப் குழுவை ஏற்படுத்தினர். அதன் மூலம் விவசாயிகள் ஆர்டர்களைப் பெற்று அவற்றை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பிவைத்தனர். வாரம் இரு முறை அவை இளைஞர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்தன. பழங்கள், காய்கறிகள் தரமானதாகவும், புத்தம் புதியதாகவும் கிடைப்பதால் ரோட்டேரியன்கள் அல்லாத மக்களும் அவற்றை வாங்க முன்வந்தனர். இதனை அடுத்து கிராமத்து இளைஞர்கள் ஒரு டெம்போவில் தங்கள் விளைப் பொருள்களை கொண்டுவந்து அவுந்தில், ஆகாஷ்கங்கா சொசைட்டி பகுதியில் விற்பனை செய்யத் தொடங்கினர். இதன் மூலம் விற்பனையும்



*வாகேஷ்வரி பள்ளியில் மாணவ மாணவியர்.*

அதிகரித்தது. குடிமக்களுக்கு தங்கள் வீட்டு வாசலிலேயே தரமான, நியாயமான விலையில் உயர்தர காய்கறிகள், பழங்கள் கிடைப்பதால் வண்டிகளின் மூலமான நடமாடும் சேவையும் மிகவும் பிரபலமானது.

தொற்றுக்காலம் தணிந்து சீரடைந்த நிலையில், பிங்கோரி விற்பனை நிலையத்தில் காய்கறிகள் மற்றும் மாதுளை, கொய்யா, பப்பாளி உள்ளிட்ட பழங்களின் விற்பனை அதிகரிக்கத் தொடங்கியது. கிராம மக்கள் உற்பத்தி செய்யும் பால் பொருள்களுக்கும் தேவை அதிகரித்தது. புனே சந்தையும் பிங்கோரி கிராம மக்களின் உற்பத்தி பொருள்களுக்கு முக்கியத்துவம் தர ஆரம்பித்தது. 2020–21ம் ஆண்டில் குகுண்ட் சுர்குட்வார் சங்கத்தின் தலைவராக இருந்த போது புனேயின் மற்றொரு பகுதியிலும் பிங்கோரி பண்ணை பொருள்கள் விற்பனை நிலையம் திறக்கப்பட்டது. இப்போது ரோட்டேரியன்கள் தரமான உணவுப் பொருள்களையும் வீட்டிலேயே தயாரித்து வழங்க பிங்கோரி கிராம பெண்களை ஊக்கப்படுத்தி வருகின்றனர். விவசாயிகளின் விளைபொருள்களை சந்தைப்படுத்து வதில் பொருள் போக்குவரத் தின் மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரும் நிலையில் இப்போது பெண்களையும் உணவுப் பொருள்கள் தயாரிக்க உற்சாகப் படுத்தி வருகின்றனர் ரோட்டேரியன்கள்.

பிங்கோரி கிராமத்தில் தயாரிக்கப்படும் பொருள்களுக்கு நிரந்தரமான விற்பனை நிலையம் அமைக்கும் நேரம் வந்துவிட்டது. பாபா ஷிண்டேயுடன் நானும் இதற்கான முன்முயற்சியை மேற்கொண்டேன். விற்பனை நிலையம் அமைப்பதில் ஆர்வம் உள்ள உறுப்பினர்கள் ரூ.2 லட்சம் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்று கூறினோம். ரோட்டேரியன்கள் 8 பேர் இதற்கு முன்வந்தனர். ரூ.16 லட்சத் தில் நிரந்தர விற்பனை நிலையம் ஏற்படுத்தப்பட்டது. 20 வயதைக் கடந்த ரோஹித் ஷிண்டே புனேவுக்கு வந்து கடையை நிர்வகிக்க முன்வந்து ள்ளார். அவருக்கு எந்த முதலீடு ஏதும் இல்லாமல் கடையில் 50 சதவீத கூட்டாண்மை வழங்கப்பட்டது. வேறு சில பகுதிகளிலும் கடையை விரிவு படுத்துவதற்கான பொறுப்பை அவரிடம் ஒப்படைத்துள்ளோம் என்றார் உலங்வார். இப்போது உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பேக் செய்யப்பட்டு பிங்கோரி பாஃர்ம்ஸ் என்ற அடையாளத்தை தாங்கி விற்பனைக்கு வருகின்றன. இது நகர மக்களிடையே பிரபலமாகி வருகிறது.

இந்த கடையை நிர்வகிக்கும் ரோஹித் ஷிண்டே, பிங்கோரியிலிருந்து புனேவுக்கு தனது எல்லையை விரிவு படுத்துவதன் மூலம் மகிழ்ச்சி அடைகிறார். பொறியியல் பட்ட தாரியான அவர், முன்னதாக தமது இரண்டு ஏக்கர் நிலத்தில் விவசாயம் பார்த்துக் கொண்டே கிராமத்தில் உள்ள ஒரு சிறிய கடையில் பணிபுரிந்து வந்தார். கம்பு, சோளம் மற்றும் தானிய வகைகளை நிலத்தில் பயிரிட்டு வந்தார். தவிர சீதாபழ மரங்களை வளர்த்து வந்தார். அவருக்கு மாத வருமானமாக ரூ.20,000 கிடைத்து வந்தது. இப்போது பிங்கோரி விற்பனை நிலையத்தை நிர்வகிப்பதன் மூலம் அவருக்கு மாதம் ரூ.20,000 மற்றும் லாபத்தில் 50 சதவீ பங்கு கிடைக்கிறது.

ஷிண்டே மேலும் கூறுகிறார்: இப்போது அவர் நிர்வகித்து வரும் கடையில் பிங்கோரியிலிருந்து கொண்டு வரப்படும் புத்தம் புதிய காய்கறிகள், பழங்கள், மளிகை சாமான்கள் மற்றும் தானியங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கே சென்று பொருள்களை விநியோகம் செய்யும் நடைமுறையும் உள்ளது. பிங்கோரி கடையில் மின்னணு எடை இயந்திரங்கள், எலெக்ட்ரானிக் முறையில் பில் போடும் வசதி, டிஜிட்டல் முறையில் பணம் செலுத்தும் வசதி, டெபிட் மற்றும் கிரெடிட் கார்டுகள் மூலம் பணம் செலுத்தும் வசதி உள்ளது. இந்த முயற்சியின் விளைவாக பிங்கோரி கிராம விவசாயிகளின் வருமானம் கணிசமாக அதிகரித்துள்ளது. இளைஞர்கள் வேலைவாய்ப்பும் பெற்றுள்ளனர். மகளிர் சுயஉதவிக் குழுவினர் அப்பளம், திடீர் சேவை, ஊறுகாய், சட்னி போன்றவற்றை தயாரித்து விற்று அதன் மூலம் வருவாய் ஈட்டி பலன் அடைந்துவருகின்றனர். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பால் பதப்படுத்தப்பட்டு புனே நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. பால் தவிர நெய், பனீர் மற்றும் தயிர் போன்ற பால் பொருள்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆனால், பால்தான் இந்த கடை களில் அதிகம் விற்பனையாகிறது. பிங்கோரி கிராம மக்கள் உற்பத்தி செய்யும் பால், ஒவ்வொரு விற்பனை நிலையத்திலும் சராசரி ஒரு நாளைக்கு 50 லிட்டர் விற்பனையாகிறது. நாங்கள் விவசாயிகளிடம் லிட்டர் ரூ.33 முதல் ரூ.35 வரை விலை கொடுத்து பால் கொள்முதல் செய்கிறோம். அதன் பின் அவற்றை பதப்படுத்தி வைத்து லிட்டர் ரூ.56 விலை வைத்து விற்கிறோம். போக்குவரத்து மற்றும் பாலை பதப்படுத்தும் செலவுகளும் இதில் அடங்கும். பிங்கோரியிலிருந்து கொள்முதல்

*சங்கத்தின் காமதேனு திட்டத்திற்கு ATOS என்ற ITகம்பெனி ரூ.42.1 லட்சம் அளித்துள்ளது*

செய்யப் படும் பால் தரமாக இருப்பதால் அதிக வரவேற்பு உள்ளது. முன்பு லிட்டருக்கு ரூ.28 கிடைத்துவந்த நிலையில் இப்போது விவசாயி களுக்கு கூடுதலாக ரூ.5 கிடைப்பதால் அவர்கள் மகிழ்ச்சியுடன் உள்ளனர்.

பிங்கோரி கிராமத்தின் வளர்ச்சயைக் கண்டு பிரமித்துப் போன மகாராஷ்டிர முன்னாள் முதல்வர் தேவேந்திர பட்னவிஸ், 2019ல் பிங்கோரி கிராமத்துக்கு சென்று பார்வையிட்டதுடன், அந்த கிராமத்துக்கு ஆதர்ஷ் கிராமம் என்ற விருதையும் வழங்கினார்.

**காமதேனு திட்டம்:** சங்கத்தின் தற்போதைய தலைவர் பாவனா உலாங்வார், வாகேஸ்வரி பள்ளிக்கு இரண்டு குடிநீர் தொட்டிகள் மற்றும் கழிப் பறைகளை கட்டிக் கொடுத்துள்ளார். இதன் மூலம் பிங்கோரி கிராம மக்களின் மகிழ்ச்சிப் பயணம் தொடர்கிறது. ஷிண்டே மேலும் கூறுகையில், RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி மற்றும் RC அவுந்த் கூட்டு முயற்சியின் காரணமாக ATOS என்னும் ஐ.டி. நிறுவனத்தின் கார்பொரேட் நிறு வனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் ரூ.42.1 லட்சம் நிதியுதவி பெற்று பிங்கோரியில் காமதேனு திட்டத்தை செயல் படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாய குடும்பத்தைச் சேர்ந்த 25 பெண்களுக்கு பசுக்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. இவற்றை பராமரிக்க மாட்டுத்தொழுவம் நிறுவப்பட்டு அவற்றை சுயஉதவிக் குழுவினர் மேற்பார்வையிட்டு வருகின்றனர். இங்கு சூரிய சக்தி மின்விளக்கு வசதியும், பால் கறக்கும் இயந்திரமும் நிறுவப் பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் பால் விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் அனைத்து பயனாளிகளுக்கும் சமமாய் பிரித்து வழங்கப்படும். இதன் மூலம் அவர்கள் பொருளாதார ரீதியில் தன்னிறைவு பெறமுடியும்.

மாட்டுத் தொழுவத்துக்கான பூமி பூஜை கடந்த ஆண்டு ரோட்டரி மாவட்டம் 3131ன் ஆளுநர் பங்கஜ் ஷாவால் தொடங்கிவைக்கப்பட்டது.

பிங்கோரி கிராமத்துடன் ஷிண்டேவுக்கு இருக்கும் உறவு வலுவானது. அவர் வாரம் ஒருமுறை அந்த கிராமத்துக்குச் சென்று வருகிறார். பிங்கோரி கிராமத்தில் ஏற்பட்டுள்ள மாற்றமும் வளர்ச்சியும், அங்குள்ள மக்கள் பொருளாதார ரீதியில் தற்சார்பு நிலைக்கு உயர்ந்துள்ளதும் ரோட்டரி உலகின் மகிழ்ச்சி கிராமத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். தொடர் மற்றும் நிலையான முயற்சிகள் மூலம் ரோட்டரி சங்கங்கள் கிராம மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு கிராமம் முழுமையான மாற்றத்தை எப்படி அடைய முடியும் என்பதை இது நிரூபிக்கிறது என்றார் ஷிண்டே. ■

RID 3131 *கட்டிய ஒரு நீர் தேக்கத் தொட்டி.*



# UNESCO விருது பெற NCERTக்கு உதவிய RILM

ரோட்டரி செய்திக்குழு

12 "PM ஈ-வித்யா' DTH TV சானல்களில் ஒளிபரப்பாகும் 1 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்கான மின் கற்றல் உள்ளடக்கத்துக்கு UNESCOன் அரசர் ஹமத் பின் இசா அல்-கலிஃபா பரிசு பெற்றுள்ளது NCERT. 2,000 அரை மணி நேர அத்தியாயங்களைக் கொண்ட இந்தத் தொகுப்பு, ஜூன் 2020ல் அப்போதைய ஒன்றிய HRD அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க், கல்விச் செயலாளர் அனிதா கார்வால் முன்னிலையில் Rotary India Humanity Foundation (RIHF), NCERT இடையில் கையொப்பமிடப்பட்ட MoUவைத் தொடர்ந்து Rotary India Literacy Mission (RILM) அமைப்பால் உருவாக்கப்பட்டது.

'தீக்ஷா' என்கிற GoIன் பள்ளிக் கல்விக்கான தேசியத் தளத்தின் ஒலி, ஒளி உள்ளடக்கத்தையும் RILM உருவாக்கியது. இந்த ஜூலை மாதம் பாரிசில் CIET-NCERT இணை இயக்குநர் அமரேந்திரா P பெஹெரா இந்த விருதைப் பெற்றுக்கொண்டார். இது பற்றி அவர் அளித்த ஒரு பேட்டியில், "மின் கற்றலை முன்னிறுத்துவதற்குப் பல ஆண்டுகளாகக் கடினமாக உழைத்த'' ரோட்டரியன்களுக்கு நன்றி தெரிவித்தார். "UNESCO விருதும் ரோட்டரியின் பங்களிப்பும் நம் நாட்டின் பெருமைகள்.''



NCERT *இயக்குனர் ரிஷிக்கேஷ் சேனாபதி (இடது) மற்றும்* PDG *ரஞ்சன் டிங்ரா* MOU *கையொப்பமிடும் நிகழ்ச்சியில்.*

முன்னதாக அவர் PRIP சேகர் மேத்தா அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், ஸ்மார்ட்ஃபோன்கள் வழியாக இணையக் கல்வி வசதி இல்லாத, ஆனால், வீட்டில் TV உள்ள நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான குழந்தைகள் எதிர்கொள்ளும் டிஜிட்டல் இடைவெளியை இந்த முன்னெடுப்பு நிரப்பும் என்றார்.■

---

TRF உதவியுடன் நற்பணி

## வார்தா-வில் 1000 நோயாளிகளுக்குக் கண் புரை அறுவைச் சிகிச்சை



DG *ஆனந்த் ஜுன்ஜுனுவாலா (வலதிலிருந்து 2வது) மற்றும்* DRFC *மகேஷ் மொகால்கர் (வலதிலிருந்து 3வது) வினோ பாவே மருத்துவமனையில்.*

RC காந்தி சிட்டி, வார்தா, RID 3030, RC பஹியா, பிரேசில், RID 4319 ஆகியவை இணைந்து, மகாராஷ்டிர மாநிலம் வார்தா-வுக்கு அருகில் சவங்கி மெகெ கிராமத்தில் ஆச்சார்ய பாவெ கிராமப்புற மருத்துவமனையில் ஒரு கண் அறுவைச் சிகிச்சை அரங்கத்தை அமைத்துள்ளன. இந்தப் பன்னாட்டு நல்கைத் திட்டத்தின்மூலம் 1,000 நலிந்த நோயாளிகளுக்குக் கண் புரை ஒளி விலகல் அறுவைச் சிகிச்சை செய்யும் நோக்கத்துடன் இங்கு ரூ.45 லட்சம் மதிப்புள்ள ஃபாகோ, ஏ-ஸ்கேன் இயந்திரங்கள், டிஜிட்டல் நுண்ணோக்கி அமைக்கப்பட்டுள்ளன.

DRFC மகேஷ் மொகால்கர், சங்கத் தலைவர் ஷைலேஷ் சின்ஹால், செயலாளர் சாகேத் பக்ரோடியா முன்னிலையில் DG Dr ஆனந்த் ஜூன்ஜூன்வாலா OTஐத் தொடங்கி வைத்தார்.■

# சக்கர நாற்காலியில் இருந்து ஊனமுற்றோர் உரிமைகளுக்காக ஒரு போராட்டம்

ஜெய்ஸ்ரீ



ஸ்விட்சர்லாந்தில் சுனிதா சஞ்செட்டி தன் குடும்பத்தினருடன்.

மாற்றுத்திறனாளிகளின் தேவைகளுக்கு மக்கள் பரிவு காட்ட வேண்டும். ஊனம் ஒரு சாபம் அல்ல. இது யாருக்கும் ஏற்படலாம்; ஒரு விபத்து அல்லது முதுமை ஒருவரை பல்வேறு வடிவங்களில் ஊனமாக்கும். ஆனால் அது ஒருவரின் சுதந்திரத்திற்கு தடையாக இருக்கக்கூடாது என்கிறார் நீனு கெவ்லானி.

“உங்களுக்கு ஆதரவான குடும்பம் மற்றும் நண்பர்கள் இருக்கும்போது உங்கள் இயலாமை பெரிதாக இருக்காது. அவர்கள் உங்களுக்கு வசதியாகவும், ஒவ்வொரு திருப்பத்திலும் உங்களை சேர்த்துக் கொள்ளும் வகையில் செயல்படுவார்கள். என்னுடையவர்கள் அற்புதமானவர்கள்,” என்கிறார் சுனிதா சஞ்சேட்டி.

அவர்கள் இருவரும் 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஊனமுற்றோர் உரிமை ஆர்வலர்களாக செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள், தங்கள் குரலைக் கேட்க செய்யும் எந்த வாய்ப்பையும் அவர்கள் தவற விடுவதில்லை. அவர்கள் RC மும்பை பிரேவ்ஹார்ட்ஸ், RID 3141இன் புதிய உறுப்பினர்கள். “பரந்த பார்வையாளர்களை சென்றடைய உதவும் வகையில் ரோட்டரி எங்களுக்கு ஒரு விசாலாமான தளத்தை வழங்கியுள்ளது” என்று ஒன்பது மாத குழந்தையாக இருந்தபோது போலியோவால் பாதிக்கப்பட்டு சக்கர நாற்காலியில் இருக்கும் நீனு கூறுகிறார்.

ஆகஸ்ட் மாதம், சங்கம் பேட்மிண்டன் மற்றும் டேபிள் டென்னிஸ் போட்டி நிதி திரட்டலுக்காக ஏற்பாடு செய்திருந்த போது, சுனிதா 12 உடல் ஊனமுற்ற வீரர்களுடன் “பேட்மிண்டன் ஆன் வீல்ஸ்’ என்ற ஒரு கண்காட்சி போட்டியை நடத்தினார். “உடல் ஊனம் ஒருவரின் தனிப்பட்ட வளர்ச்சியை கட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்ற செய்தியை அனுப்புவதும் மேலும் அனைத்து மக்களுக்கும் ஏற்றவாறு அணுகக் கூடிய உள்கட்டமைப்பை வழங்க நிறுவனங்களுக்கு உணர்த்துவதும் இதன் நோக்கமாக இருந்தது,” என்று அவர் கூறுகிறார்.

சுனிதா 16 வயதில் முதுகுத்



*நீனு கெவ்லானி மற்றும் சுனிதா RC மும்பை ப்ரேவ்ஹார்ட்ஸ்-யில் சேர்கையில். உடன் PDG ப்ரஃபுல் சர்மா மற்றும் சங்கத்தலைவர் குஸெம் சகர்வாலா ஆகியோரும் உள்ளனர்.*

தண்டு வடத்தில் ஏற்பட்ட கட்டிக்கு சிகிச்சையளிப்பதற்காக செய்த அறுவை சிகிச்சையில் நடந்த தவறால் இடுப்பிற்கு கீழே முடங்கிவிட்டார். இங்கிலாந்தில் உள்ள ஒரு மறுவாழ்வு மையத்தில் சிறப்புப் பயிற்சியைப் பெற்ற அவர் ஒன்பது ஆண்டுகள் போராட்டத்திற்கு பிறகு இப்போது சக்கர நாற்காலியில் வசதியாக இருக்கிறார். என்னுடைய சக்கர நாற்காலி தனிப்பட்டது; அதில் ஹேண்ட்பார்கள் இல்லை மற்றும் நான் அதிலிருந்து ஒரு நாற்காலி அல்லது படுக்கைக்கு சிரமமின்றி மாற முடியும்; சரிசெய்யக்கூடிய இருக்கை மற்றும் பிற கட்டுப்பாடுகள் அதை எளிதாக இயக்க உதவுகின்றன.

சுனிதா தனது சமீபத்திய சுவிட்சர்லாந்து சுற்றுப்பயணத்தை நினைவு கூர்ந்தார், அங்கு நான் கோண்டோலாவில் செல்ல முடிந்தது, அருங்காட்சியகம், பூங்காக்கள் மற்றும் பிற இடங்களை அணுகக்கூடியதாக இருந்தது. மும்பையில் ஏறும் போது செக்-இன் லக்கேஜில் போடப்பட்டிருந்த சக்கர நாற்காலியை இழந்ததுதான் ஒரே தடங்கல்.

ஆனால் பத்து நாட்களுக்குப் பிறகு அது கண்டுபிடிக்கபடும் வரை சுவிஸ் விமான நிலையம் அவருக்கு ஒரு மாற்று சக்கர நாற் காலியை வழங்கியது. "அவர்கள் என்னுடையதை அங்கே என் வீட்டு வாசலில் டெலிவரி செய்தார்கள்.'' ஆனால் அது உடைந்து, ஒழுங்கற்ற நிலையில் இருந்ததால், விமான நிலையத்தின் சக்கர நாற்காலியை அவர் தங்கியிருந்த நேரம் தொடர்ந்து பயன்படுத்தினார். "இது மும்பை விமான நிலையத்தில் நான் திரும்பிய போது அனுபவித்த அனுபவத்திற்கு முற்றிலும் மாறுபட்டது.'' அவரது சக்கர நாற்காலி பயன்படுத்த முடியாததால், வீட்டிற்கு சென்ற பிறகு அதைத் திருப்பித் தருவதாக அவர் உறுதியளித்தும் விமான நிலைய சக்கர நாற்காலியை வீட்டிற்கு எடுத்துச் செல்ல விமான நிலைய அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

தாஜ்மஹாலுக்குச் சென்றதை நினைவு கூர்ந்த அவர், ஸ்டீபன் ஹாக்கிங் சென்ற ஒரு நாள் கழித்து நாங்கள் ஆக்ராவுக்குச் சென்றோம். அவர் தாஜ்மஹாலில் இருந்தபோது, அங்கு எல்லா இடங்களிலும் சரிவுகளைக் கொண்டிருந்தது மற்றும் சக்கர நாற்காலிக்கு ஏற்றதாக

## மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற சூழலுக்கான யோசனைகள்

*ரோட்டரி நியூஸிடம் பேசுகையில், சக்கர நாற்காலியில் செல்லும் ரோட்டேரியன்களான நீனு கெவ்லானி மற்றும் சுனிதா சஞ்செட்டி, தடையற்ற, உள்ளடக்கிய சூழலை உருவாக்க சில யோசனைகளை மீண்டும் வலியுறுத்து கின்றனர்.*

*பொதுக் கழிவறைகளில் தண்ட வாளங்கள்,பிடி கம்பிகள் , வழுக்காத தரை மற்றும் பெரிய வாசல் வேண்டும்.*

*தாழ்தள பேருந்துகள் மற்றும் நடைபாதைகள் மற்றும் பூங்காக் களின் நுழைவாயிலில் உள்ள தடை கம்பங்களைஅகற்றுதல். கடற் கரையை அணுக சாய்வுதளங்கள்.*

*அரசு கட்டிடங்கள் மற்றும் ரயில் நிலையங்களை அணுகுவதற்கு மெதுவாக சாய்ந்த சரிவுகள்/ அகலமான லிஃப்ட்கள்.*

*அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்களில் உள்ள லாபி பகுதியில் ஊனமுற்றோர்-நட்பு கழிவறைகள்.*

*"ஊனமுற்றோரின் சவால்களை உணரும் வடிவமைப்பாளர்களின் ஒரு திறமைக் குழு இருக்க வேண்டும் மற்றும் சமூகத்தின் அனைத்து மக்களையும் உள்ளடக்கிய அணுகக் கூடிய உள்கட்டமைப்பை உருவாக்க வேண்டும்,'' என்கிறார் சுனிதா.■*



*சுனிதா "பேட்மின்டன் ஆன் வீல்ஸ்" நிகழ்ச்சியில்.*

இருந்தது. ஆனால் நாங்கள் சென்ற போது அந்த சரிவுகள் இல்லாமல் போனது. அது தான் நம்முடைய எண்ணம்.

மாற்றுத்திறனாளிகள் சவால்களை சிறப்பாகச் சமாளிக்க உதவுவதற்காக, இந்தியாவில் அதிகமான மறுவாழ்வு மையங்கள் அமைக்க சுனீதா வாதாடுகிறார். உடல் ஊனமுற்றோர், காது கேளாதோர் அல்லது வாய் பேசாதவர்களுக்கு பள்ளிகளில் எந்தப் பாகுபாடும் இருக்கக் கூடாது என்று அவர் கடுமையாக வாதிடுகிறார். நாங்கள் பொது வாழ்வில் இருக்க விரும்புகிறோம். அப்போது தான் மற்ற குழந்தைகள் எங்கள் சவால்களைப் புரிந்துகொண்டு பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பழகக் கற்றுக்கொள்வார்கள்.

சுனிதா மற்றும் நீனு திருமண திட்டமிடல் மற்றும் நிகழ்வு மேலாண்மை பாடத்தை முடித்து ள்ளனர். "இது எனது மருமகனின் திருமணத்தைத் திட்டமிட உதவியது, மேலும் நாங்கள் ரூ.5 லட்சம் சேமித்தோம்" என்று ஒரு பொதுப் பேச்சாளரும் தொழிலதிபருமான நீனு கூறுகிறார்.

அவரை பொறுத்தவரை, ஊனமுற்றோர் உடல் ஊனமுற்றவர் மட்டுமல்ல. பரந்த அளவிலான மக்களும் இதில் அடங்குவார்கள் - பேச்சு குறைபாடுள்ளவர்கள், பார்வையற்றவர்கள், மனநலம் குன்றியவர்கள், முதியவர்கள் மற்றும் நிறைமாத கர்ப்பிணிகள் - குட்டையான மற்றும் பரும னானவர்கள் கூட இந்த வகையின் கீழ் வருகிறார்கள். "இந்த மக்கள் அனைவருக்கும் ஒருவித அணுகல் உதவி தேவை என்று அவர் கூறுகிறார். பார்வையற்றவர்களுக்கு செவிப்புலன் உதவியும், காது கேளாதோர் மற்றும் ஊமையர்களுக்கு உதவும் வகையில் மூலோபாய இடங்களில் சரியான அடையாளங்கள் இருக்க வேண்டும். "என்னை அரசு ஒதுக்கீட்டில் வேலைக்கு அமர்த்தினாலும், என்னால் அலுவலகத்திற்கு வரமுடியவில்லை என்றால், எனக்கு என்ன பயன்" என்று கேட்கிறார்.

### மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற கட்டிடங்கள்

கட்டிடக் குறியீடுகள் அனைத்து கட்டிடங்களும் ஊனமுற்றோர் அணுகக் கூடியதாக இருக்க வேண்டும் என்று உச்சரிக்கின்றன. ஆனால் இவை அனைத்தும் பேப்பரில் மட்டுமே உள்ளது என புலம்புகிறார்.

நீனு கடினமான நிகழ்வுகளை மேற்கோள் காட்டுகிறார். கழிப் பறையின் கதவு அகலமாகவும், வாஷ் பேசின் தாழ்வாகவும் இருக்கலாம், ஆனால் கண்ணாடி சாதாரண நபருக்கு ஏற்ற உயரத்தில் வைக்கப்படும். சக்கர நாற்காலியில் இருப்பவர்கள், கண்ணாடியை அடைய எப்படி எழுந்து நிற்க முடியும்? அதேபோல, வாஷ்பேசி னுக்கு அடியில் அலமாரியை வைத்திருப்பதால், என்னால் சக்கர நாற்காலியை வாஷ்பேசினுக்கு அருகில் இழுக்க முடியாது.

ரயில் நிலையத்தில் படிக்கட்டு களில் மக்கள் ஊர்ந்து செல்வதை நான் பார்த்திருக்கிறேன். அது கண்ணியமற்றது. பிளாட்பாரத்துக்கும் கோச்சுக்கும் இடையே அதிக இடைவெளி இருப்பதால் ரயிலில் ஏற சிரமமாக உள்ளது என்றார்.

சுனிதாவும் நீனுவும் 28 மாநிலத் தலைநகரங்கள் மற்றும் 40 நகரங்களில் 84 நாட்களில் 19,000 கிமீ தூரம் பயணித்து அணுகல் மற்றும் ஊனமுற்றோர் உரிமைகளை ஆதரித்து பேசியுள்ளனர். நாங்கள் கோஷங்களை எழுப்பி, நிகழ்வுகளை செய்து, பொதுநல வழக்குகளை பிரதிநிதித்துவப்படுத்தி, அரசு துறைகளுக்கு ஆவணங்களை சமர்ப்பித்து வருகிறோம். ஆனால் உண்மை என்னவென்றால், அது உங்களை பாதிக்கும் வரை, நீங்கள் சவால் களைப் பற்றி சிந்திக்க மாட்டீர்கள். பச்சாதாபம் தான் முக்கியம், என்கிறார் அவர்.

அவர்களுக்கு அதிக தளங்களை வழங்கவும், அதன் தாக்கத்தை மேம்படுத்தவும் சங்கத்தலைவர் குஸெம் சகர்வாலா இரண்டு பெண்களையும் பல்வேறு ரோட்டரி சங்கங்களில் விளக்கக்காட்சிகளை வழங்க ஊக்குவிக்கிறார்.■



**இந்த ஆண்டு சிறப்பு மானியம் பெறுவர்களின் திட்டங்கள் அறிவிப்பு.**

# நைஜீரியாவில் ஆரோக்கியமான குடும்பங்களுக்காக

**தாய்மார்கள், குழந்தைகள் உயிரைக் காப்பாற்றுதல்**

ரோட்டரி அறக்கட்டளையின் 2022ம் ஆண்டுக்கான சிறப்பு மானிய உதவித் திட்டம் நைஜீரியாவில் தாய்மார்கள் மற்றும் சிசுக்களை காப்பாற்றும் உறுப்பினர் தலைமையிலான முயற்சியை ஆதரிக்கிறது. ரோட்டரி மாவட்டங்கள் 1860 (ஜெர்மனி) மற்றும் 9110, 9125, 9141 மற்றும் 9142 (நைஜீரியா), இனப்பெருக்கம், தாய்-சேய் நலன் மற்றும் நைஜீரியாவின் மத்திய, மாநில சுகாதார அரசு கள், மருத்துவச்சங்கங்கள், சமூகத்தலைவர்கள், ரோட்டரி செயல் குழு ஆகியவை இணைந்து நான்கு மாநிலங்களில் தாய் மற்றும் சிசு இறப்பு விகிதங்களை 25 சதவீதம் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

ஜெர்மனியின் பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான மத்திய அரசின் நிதி உதவி மற்றும் சர்வதேச அமைப்புகள் மனமுவந்து அளிக்கும் நன்கொடைகள் ஆகியவற்றின் மூலம் 2 மில்லியன் டாலர் நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. குடும்பங்களுக்கான சுகாதாரக் கல்வியை விரிவுபடுத்துவதோடு கர்ப்பிணிப் பெண்கள், தாய்மார்கள், குழந்தைகளின் மருத்துவ பராமரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது இந்த திட்டம். Rotary.org என்னும் மின்னஞ்சல் முகவரிக்குச் சென்று பார்த்தால், இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல், அதன் வெற்றிகரமான செயல்படுகள், பெரும்பாலான குடும்பங்கள் செழிக்க எவ்வாறு உதவியது என்பது பற்றிய தகவல்கள் தெரியவரும்.

இந்த சிறப்பு மானிய உதவி திட்டம் குறித்து மேலும் தெரிந்துகொள்ள rotary.org/programsofscale என்னும் மின்னஞ்சலை அணுகலாம்.

Rotary

# உக்ரைன், பாகிஸ்தான் குழந்தைகளுக்காக நிதி திரட்டிய அகமதாபாத் இன்டராக்டர்கள்

கிரண் ஜெஹரா




*அபிஜித் வித்யாவிஹார் இன்ட்ராக்ட்டின் ‘கேண்டீன் டே’ நிகழ்ச்சி.*

கேண்டீன் தொடங்குவது, பள்ளி நேரத்துக்குப் பிறகு முதியோர்களுக்கு ஆன்லைன் மூலம் ஷாப்பிங் செய்வது குறித்து பயிற்சி அளிப்பது, பேல்பூரி மற்றும் பானிபூரி விற்பது என RID 3054க்கு உட்பட்ட கிரேட்டர் அகமதாபாத் ரோட்டரி சங்கம் ஆதரவில் மூன்று இன்டராக்ட் சங்கங்கள் செயல்பட்டு உக்ரைனில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ நிதி திரட்டியது.



*குஷி திட்டத்தின் கீழ் ஒரு பெண்ணிற்கு சீருடை (விஷ்வபாரதி பெண்கள் பள்ளியின் இன்ட்ராக்ட் மூலம்) வழங்கப்படுகிறது.*

அகமதாபாதில், தல்தேஜில் உள்ள விஸ்வ பாரதி மகளிர் மேனிலைப் பள்ளியின் இன்டராக்டர்கள், உக்ரைன் குழந்தைகளுக்கு உதவுவதற்காக, முதியோர்களுக்கு ஸ்மார்ட் போன் எப்படி பயன்படுத்துவது, வங்கியில் படிவங்களை எப்படி பூர்த்தி செய்வது, ஆன்லைன் மூலம் சொத்துவரி, குடிநீர், சமையல் எரிவாயு மற்றும் மின்சார கட்டண விவரங்களைத் தெரிந்துகொண்டு அதை ஆன்லைன் மூலமே செலுத்துவது குறித்து பயிற்சி அளித்து அதற்காக ஒரு சிறு தொகையை கட்டணமாக வசூலித்து வருகின்றனர். இதன் மூலம் ரூ.5,000 நிதி திரட்டியுள்ளனர் என்கிறார் கிரேட்டர் ஆமதாபாத் ரோட்டரி சங்கத்தின் இன்டராக்ட் தலைவர் அரூப் சின்ஹா.

உக்ரைனில் உள்ள குழந்தைகளின் அவநிலை பற்றி விஸ்வ பாரதி

பள்ளியின் இன்டராக்ட் சங்கத் தலைவர் பிரியங்கா பிரஜாபதி கூறுகையில், குண்டுவீச்சுக்கு பயந்து பல குழந்தைகள் குடியிருப்புகளின் அடித்தளங்களில் வசித்து வருகின்றனர். சிலர் தங்களின் அன்புக்கு உரியவர்களின் மரணத்தை நேரில் பார்க்க நேரிட்டது. சிலர் தங்கள் இருப்பிடத்தைவிட்டு வெளியேறிவிட்டனர். எங்களின் பிரச்னைகள் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு இணையாகாது என்றார்.

சங்க கூட்டத்தின் போது ஏன் பள்ளிச் சீருடை அணியவில்லை என்று இன்டராக்ட் சங்கத்தின் உறுப்பினரான ரதோட் குஷி ஹரேஷ்பாயிடம் கேட்ட போது எனது பெற்றோரால் சீருடை மற்றும் புத்தகங்கள் இரண்டுக்கும் செலவிட முடியாது என்பதால் என்னால் இரண்டில் ஒன்றைத்தான் தேர்வு செய்ய முடிந்தது என்றார் குஷி. அவரது நிலையை முழுமையாக உணர்ந்து கொண்டபோது இன்டராக் டர்கள் குஷி திட்டத்தை கொண்டுவந்தனர். அதன் கீழ் ரூ.2,000 நிதி திரட்டப்பட்டது. ரூ.1,000 செலவில் குஷிக்கு சீருடை வாங்கிக் கொடுத்தனர். மீதமிருந்த ரூ.1,000 உக்ரைன் குழந்தைகளுக்கான தொடக்க நிதியாக பயன்படுத்தப்பட்டது.



இன்ட்ராக்டர்கள் விதைப்பந்து செய்கின்றனர்.



நிதி திரட்டுவதற்கான கடைசி நாளில், இன்டராக்ட் சங்க உறுப் பினர்கள் நாள் முழுவதும் வெளியில் இருந்தோம். உக்ரைன் நாட்டு குழந்தைகளின் அவல நிலையை சமூகத்தினரிடையே எடுத்துக் கூறினோம். அவர்கள் படும் துயரங்களை உணர்ந்து அவர்களுக்கு உதவ மனமுவந்து நன்கொடை அளிக்குமாறு கேட்டுக் கொண்டோம் என்றார் பிரியங்கா.

அபிஜித் வித்யவிஹார் பள்ளியைச் சேர்ந்த இன்டராக்டர்கள், பள்ளி வளாகத்திலேயே ஒரு சிறிய உணவகத்தை தொடங்கி, பணம் செலுத்தும் கவுன்டருக்கு அருகிலேயே ஒரு பெட்டியை வைத்து, உக்ரைன் குழந்தைகளுக்கு தாராளமாக நன்கொடை வழங்குமாறு வருகை யாளர்களை கேட்டுக் கொண்டனர் என்றார் சங்கத்தின் தலைவர் ஜெய் படேல். இதன் மூலம் ரூ.2,500 வசூலானது. அடுத்து சங்கத்தினர் வடபாவ், பேல் பூரி, பானி பூரி போன்ற தின்பண்டங்களை விற்றனர். மேலும் காகித பைகள் தயாரித்து அருகில் இருந்த இனிப்பகங்களுக்கு விற்றனர். இதன் மூலம் 80 யூரோக்கள் கிடைத்தன என்று அவர் மேலும் கூறினார்.

உக்ரைனில் போரால் பாதிக்கப்பட்ட 20 குழந்தைகள் ஸ்பெயினுக்கு பயணம் செல்ல ஓரளவு உதவியாக திரட்டப்பட்ட நிதி, ஸ்பெயினில் உள்ள தர்ரகோனா தர்ரகோ ஆகஸ்ட் ரோட்டரி (RID 2202) சங்கத்துக்கு அனுப்பி வைக் கப்பட்டது.

அதைப் பெற்றுக்கொண்ட ச ங்க உறுப்பினர் சால்வடார் ஆலிவ், இந்த இன்டராக்டர்கள், தாங்கள் இருக்குமிடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள குழந்தைகளுக்கு உதவு வதற்காக நிதி திரட்டியுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. இவையெல்லாம் பல்வேறு நாடுகளில் உள்ள ரோட்டேரியன்களின் மேற்பார்வையில் நடந்துள்ளதும் மகிழ்ச்சி தருகிறது. இதுதான் ரோட்டரியின் மாயாஜாலம்! கடந்த சில நாட்களாக மன வேதனைகளை அனுபவித்து வந்த அவர்கள், இப்போது உடல் மற்றும் மனரீதியில் ஸ்பெயினில் மகிழ்ச்சியை அனுபவிப்பார்கள் என்றார்.

இந்த இரண்டு சங்கங்களும்

உக்ரைன் நாட்டு குழந்தைகளுக்காக 162 யூரோக்களை நிதியாக திரட்டிய நிலையில், விஸ்வ பாரதி ஆங்கிலவழிப் பள்ளி இன்டராக்ட் சங்கம், பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவுவதற்காக, உணவக தினத்தை கொண்டாடியும் சாண்ட்விச் மற்றும் போஹா விற்பனையின் மூலம் ரூ.3,700 நிதி திரட்டினர் என்கிறார் சங்க உறுப்பினர் காவ்யா தவே. துரதிருஷ்டவசமாக, சர்வதேச நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக இந்த நிதியை பாகிஸ்தானுக்கு உடனடியாக அனுப்பிவைக்க முடியவில்லை. எனினும் இதற்கான மாற்று வழியைத் தேடிவருகிறோம் என்றார் சின்ஹா.

இன்டராக்ட் சங்கங்கள் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது இரண்டு திட்டங்களுக்கு ஏற்பாடு செய்கின்றன. இவற்றில் ஒன்று பள்ளி அல்லது சமூக நலன் சார்ந்ததாகும். மற்றொன்று சர்வதேச கருத்தொற்றுமையை மேம்படுத்துவதாக இருக்கும். ரோட்டேரியன்களாகிய நாங்கள் அவர்களின் திட்டங்களுக்கு வழிகாட்டுகிறோம். ஆனால், அவர்கள் நிதி திரட்டும் விதத்தைப் பார்க்கும் போது, அவர்கள் அதிக நிதி கொடுக்கத் தேவையில்லை என்று நீங்கள் சொல்லலாம் என்று அவர் மேலும் கூறினார்.■

### பொது இடங்களில் எச்சில் துப்புவதை தவிர்க்க

*விஸ்வ பாரதி ஆங்கிலவழி பள்ளியின் இன்டராக்ட் சங்கத் தலைவர் பிரயாக்ராஜ் மேத்தா, நாங்கள் காரில் சென்றபோது குடும்ப உறுப்பினர்களில் ஒருவர், காருக்கு வெளியே எச்சில் துப்பியதை பார்த்து வருத்தமடைந்தார். உடனடியாக அதற்கு மாற்று ஏற்பாடு செய்ய முடிவு செய்தார். இதைத் தொடர்ந்து பொது இடங்களில் எச்சில் துப்புவதை தவிர்க்க, மக்கும் தன்மையுடய எச்சில் அல்லது உமிழ்நீரை துப்பும் குப்பிகளை வடிவமைத்தார். இவற்றை காரிலோ அல்லது பைக்கிலோ எளிதில் பொருத்திக் கொள்ள முடியும். இந்த புதுமையான கண்டுபிடிப்புக்காக அவர் சமீபத்தில் குஜராத் முதல்வர் பூபேந்திர படேலால் விருது வழங்கி பாராட்டப்பட்டார்.*

# திருநங்கைகளுக்கான RYLA திட்டம்

**ரோட்டரி செய்திக் குழு**

திருநங்கைகளுக்கு ஆதரவளிக்கும் முயற்சியாக RID 3232 சார்பாக RYLA (ரோட்டரி இளைஞர்கள் தலைமைப் பண்பு விருது வழங்கும்) திட்டம் ஒரு நாள் நிகழ்வாக நடைபெற்றது. 30 வயதுக்குட்பட்ட திருநங்கைகள் 63 பேருக்காக நடத்தப்பட்ட இந்த நிகழ்வுக்கு Pride RYLA என பெயரிடப்பட்டிருந்தது. தொடர்பு மற்றும் நட்புறவை கட்டியெழுப்புதல், பிரச்னைகளுக்குத் தீர்வுகாணும் திறனை வளர்த்துக் கொள்ளுதல் மற்றும் ஒரு நல்ல தலைவருக்கான உத்திகளை அறிந்து கொள்ளுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது என்கிறார் RYLA மாவட்டத் தலைவர் ஆஷா மரினா.



*DG N நந்தகுமார், PDG G சந்திரமோகன் ரோட்டரியினர் மற்றும் RYLA பங்கேற்பாளர்களுடன்.*

இதர அமர்வுகளில் தொழில் முனைவோர், சிறு கடன்கள் பெறுவதற்கான வங்கி நடை முறைகள், திறன் வளர்ப்பு பற்றி தெரிந்து கொள்ளுவதற்கு இந்தியன் வங்கி ஏற்பாடு செய்திருந்தது.

DG Dr N நந்தகுமார், பன்முகத் தன்மை, சமபங்கு மற்றும் உள்ளடக்கம் பற்றிய தமது எண்ணங்களை பகிர்ந்து கொண்டார். PDG ISAK நாஸர், வாய்ப்புகளை பயன் படுத்திக் கொள்வதன் முக்கியத் துவத்தை எடுத்துரைத்தார். பிறகு அவர்களுக்கு நியூரோ-லிங்குஸ்டிக் புரோகிராமிங் பற்றி விளக்கப்பட்டது. அதாவது மயக்க நிலையில் உள்ள மனதை, ஆரோக்கியமானதாக மாற்றுவது. இன்னும் சொல்லப் போனால், ஒருவரின் பேச்சு, செயல்திறனை மற்றவர்கள் புரிந்து கொண்டு, அதன் மூலம் தங்களின் தனித்திறமைகளை வெளிப்படுத்திச் செயல்படுவது பற்றியது.■

ADVT.

# BLOOD BANK EQUIPMENT

## Precision

**that ensures you don't have to use a microscope to view the happiness**



- 4.3" Colour HMI with touch screen
- 200000 data storage capacity
- Configurable maintenance reminder
- 7 days circular chart recorder
- Caster wheels for ease of mobility
- Self-diagnostic system with error messages
- Email, SMS and call alert up to 15 users
- Connectivity to central monitoring software
- Multilevel password protected HMI
- High speed ethernet connectivity
- Multi-level password protected HMI
- Micro controller based programs
- Frost free refrigeration system
- Micro controller based programs

- Blood Collection Monitor
- Blood Donor Couch
- Blood bag tube sealer
- Cryofreeze (-80.0°C )
- Plasma Freezer (-40.0°C )
- Laboratory Centrifuge
- Cryoprecipitate bath
- Plasma Thawing bath
- Platelet Incubator and agitator
- Blood Bank Scale
- Centrifuge Equaliser
- Walk in Blood Bank Refrigerator
- Laboratory refrigerators
- Plasma expressor
- Laminar air flow



Refrigerated Centrifuge



Lab refrigerator



Blood Bank Refrigerator



Platelet incubator



Ultra Plasma freezer

**Labtop Instruments Pvt. Ltd.** ISO 13485 : 2012

Labtop House, Plot No. 59, Waliv Phata, Sativali Road, Vasai (E),
Dist - Palghar - 401208, Maharashtra, India. Tel.:+918446053761 to 70 (10 lines)
Email: info@labtopinstruments.com
Web: www.labtopinstruments.com

LABTOP®
Quality Lab Equipment

# சங்கம்னெரில் 33 ஆண்டுகளாகக் கண் பார்வைத் தொண்டு

ஜெய்ஸ்ரீ

“கடந்த 33 ஆண்டுகளாக எங்களுடைய ரோட்டரி கண் மருத்துவமனையின் வழியாக ஆண்டுதோறும் நாங்கள் நலிந்த மக்களுக்குக் குறைந்தது 1,000 கண் புரை அறுவைச் சிகிச்சைகளைச் செய்துவருகிறோம்’’ என்கிறார் RC சங்கம்னெர், RID 3132, உறுப்பினர் AG திலீப் மல்பானி. 1989ல் அமைக்கப்பட்ட இந்த மருத்துவமனை UK, US சங்கங்களின் இரண்டு நல்கைகள், US, ஸ்விஸ் ரோட்டரி சங்கங்களிடமிருந்து இரண்டு பன்னாட்டு நல்கைகளால் நன்கு விரிவடைந்துள்ளது.

நகராட்சி வழங்கிய நிலத்தில் பொதுமக்கள், சங்க உறுப்பினர் களுடைய தாராளமான நன்கொடை களால் மருத்துவமனை உருவானது, National Association for the Blind மற்றும் Sightsavers International ஆதரவுடன் கருவிகள் சேர்க்கப் பட்டன. இன்று இந்த மருத்து வமனையில் அனைத்து நவீன கருவிகளும் முழு நேர, தகுதி பெற்ற அறுவைச்சிகிச்சை வல்லுனர்களும் உள்ளார்கள். இரண்டு வேன்கள் சுற்றியுள்ள கிராமங்களுக்குத் தொடர்ச்சியாகச் செல்கின்றன, பரிசோதனை முகாம்களை நடத்து கின்றன, கண் புரை அல்லது கண் தொடர்பான குறைபாடுகள் உள்ள நோயாளிகளை மருத்துவமனைக்கு அழைத்துவருகின்றன. அவர்களுக்கு இலவசச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த மருத்துவமனையில் கட்டணம் பெற்றுக்கொண்டு நடத்தப்படும் அறுவைச் சிகிச்சைகளைக் கொண்டு மருத்துவமனையின் ரூ.8 லட்சம் மாத செலவிற்கு உதவுகிறது.

சமீபத்தில் இவர்கள் நடத்திய மிகப் பெரிய மாறுகண் அறுவைச் சிகிச்சை முகாமில் 51 இளம் பெண்கள் இந்தப் பிரச்சனையில் இருந்து குணமானார்கள். இந்த முகாம் 150 நோயாளிகளுக்கு மருந்துகள், மூக்குக் கண்ணாடிகளை வழங்கியது. இந்த மருத்துவமனை தொடங்கப் பட்டதிலிருந்து இன்று வரை ஐந்து கிராமங்களைச் சேர்ந்த 25,000 ஏழை நோயாளிகளுக்குக் கண் பார்வையைப் பரிசளித்துள்ளது.

45 ஆண்டுகளாக இயங்கிவரும் இந்தச் சங்கம் சமீபத்தில் ஒரு GGன் வழியாக 33 ஜில்லா பரிஷத் பள்ளிகளுக்கு ஒலி, ஒளிப் பாடங்களைக் கொண்ட 655 தொடுகணினிகளை வழங்கியது. இதன்மூலம், நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த 1,900 முதல் தலைமுறை மாணவர்கள் பலன் பெறுவார்கள். இந்தத் திட்டத்தில் இவர்களுடைய வியூகக் கூட்டாளர் RC பூனா நார்த், RID 3131, பன்னாட்டுக் கூட்டாளர் RC மியாவோ-லி டுங் ஃப்ளவர், RID 3500, தைவான். RCகள் பஞ்ச்கனி,




*PDG ஓம் பிரகாஷ் மோடிப்பாவ்லே, Rtn கிருஷ்ண பூப், சங்கத்தின் முன்னாள் தலைவர் யோகேஷ் காடே மற்றும் AG திலிப் மல்பானி மாவு அரைக்கும் இயந்திரங்கள் அளிக்கின்றனர்.*



RC *சங்கம்னெரின் ரோட்டரி கண் மருத்துவமனையில் கண் புறை சிகிச்சை செய்யப்பட்டோர்.*

அக்லுஜ் ஆகியோரும் இதற்கு உதவினார்கள்.

மேலும் 61 குடும்பங்களுக்கு இந்தச் சங்கம் தையல் இயந்திரங்களை நன்கொடையளித்தது. இதற்கு மாவட்ட நிதி, உறுப்பினர் பங்களிப்புகள் உதவின. இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தோருக்குத் தையல் பயிற்சி அளிக்கப்பட்டது.

"இன்று அவர்களால் நாள்தோறும் குறைந்தது ரூ.500 சம்பாதிக்க இயலுகிறது. இது சிறிய தொகை தான், ஆனால் அவர்களுடைய நம்பிக்கை, தன்னம்பிக்கையை இது உயர்த்தும். இவர்களுக்குப் பணி வாய்ப்புகளைப் பெற்றுத்தரவும் நாங்கள் திட்டமிடுகிறோம்'' என்றார் மல்பானி. இந்தத் திட்டத்தின் வெற்றியைக் கண்டு ஊக்கம் பெற்ற இச்சங்கம் கோவிடால் பாதிக்கப்பட்ட 111 குடும்பங்களுடைய வாழ் வாதாரத்துக்கு உதவுவதற்கு மாவு அரைக்கும் இயந்திரங்களை வழங்கியது. இந்தத் திட்டத்தைப் புணே நகரைச் சேர்ந்த Rtn கிருஷ்ணா பூப் ஆதரித்தார்.■

---

# பெண்கள் வருவாய் பெற உதவும் பசுக்கள்

**ரோட்டரி செய்திக்குழு**


PDG M G *ராமச்சந்திரமூர்த்தி மற்றும்* DRFC P *நாராயணா ஒரு பெண்ணிற்கு பசு ஒன்றை அளிக்கின்றனர்.*

கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹாசன் அருகில் இருக்கும் அர்கல்குட் நகரத்தைச் சேர்ந்த 65 பெண்களுக்குப் பசுக்களை நன்கொடையளித்தது அர்கல்குட் மிட்-டவுன் ரோட்டரி சங்கம், RID 3182. இந்தச் சங்கம் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வாழ்வாதாரத்தைப் பெற உதவுவதற்கும் அவர்களுக்குப் பொருளாதார, சமூக நிலைத் தன்மையை வழங்குவதற்கும் பணியாற்றுகிற சம்ருத்தி பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் திட்டத்தின்கீழ், RC வெஸ்ட் ஸ்ப்ரிங்ஃபீல்ட், RID 7890, US மற்றும் TRF ஆதரித்த பன்னாட்டு நல்கையின் வழியாக இந்தப் பசுக்கள் வழங்கப்பட்டன.

சென்ற ரோட்டரி ஆண்டில் அப்போதைய சங்கத் தலைவர் B S சசிதர் தொடங்கிய திட்டம் இது. PDG M G ராமச்சந்திரமூர்த்தி, DRFC P நாராயணா முன்னிலையில் பசுக்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் சசிதர், சங்கத் தலைவர் B R ராஜீவ், செயலாளர் B C மஞ்சு, பொருளாளர் குமார் ஹன்யால் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள். DG டாக்டர் ஜெயகௌரி ஹடிகல் இந்தச் சங்கத்தின் முயற்சியைப் பாராட்டினார்.■

# புற்றுநோய் விழிப்புணர்வை உண்டாக்கிய மிதிவண்டிப் பேரணி

**கிரண் ஜெஹரா**

மிதிவண்டி ஓட்டுதலுக்கான RIன் தோழமையின் ஒரு பிரிவாகிய தில்லி NCG மிதிவண்டி பேரணியில் பங்கேற்ற 300 பெண் மிதிவண்டி ஓட்டுநர்களைக் கூட்டத்தினர் ஊக்கப்படுத்தினார்கள். இந்த நிகழ்ச்சி, Rajiv Gandhi Cancer Institute and Research Centre (RGCIRC) மற்றும் மிதிவண்டி ஓட்டுநர்களுடைய அமைப்பாகிய தில்லி வீல்ஸுடன் இணைந்து, புற்றுநோய் விழிப்புணர்வை உண்டாக்குவதற்கு நடத்தப்பட்டது.

RGCIRCல் தொடங்கிய இந்த 20 கிமீ பேரணி தில்லியின் மிகச் சிறந்த பகுதிகளைக் கடந்து சென்றது, நலிந்த பின்னணியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை நடத்தப்பட்ட இரண்டு முகாம்களில் நின்று சென்றது.

DG அசோக் கன்டூர் இந்தப் பேரணியை RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸுக்குச் சமர்ப்பித்தார்,'' புற்றுநோயுடன் போரிடும் ஒவ்வொரு பெண்ணுக்கும் அவர் ஓர் ஊக்கம். இந்தப் பேரணி விழிப்புணர்வை உண்டாக்குகிற எங்களுடைய நோக்கத்தை மட்டும் ஆதரிக்கவில்லை, சரியான நேரத்தில் கண்டறிந்து, பரிசோதித்தால், நலமான வாழ்க்கைமுறையைப் பின் பற்றினால் புற்றுநோய் ஆபத்தைக் குறைக்கலாம் என்கிற செய்தியைப் பரப்ப எங்களுக்கு உதவுகிறது'' என்றார் அவர்.

RGCIRC இயக்குநர் டாக்டர் கௌரி கபூர் தலைமையில் மூன்று மருத்துவக் குழுக்கள் குறிப்பிட்ட புற்றுநோய்களுக்கு எதிராகத் தங்களைப் பரிசோதித்துக்கொள்வது எப்படி என்று பெண் மிதிவண்டி ஓட்டுநர்களுக்குக் கற்றுத்தந்தார்கள்.'' ஏதாவது அறிகுறிகள் அல்லது கவலைகள் தெரிந்தால், இயன்றவரை விரைவாகத் தொழில்முறை உதவியைப் பெறும்படி'' அவர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.'' புற்றுநோயைத் தொடக்கத்தில் கண்டறிவதன்மூலம் அதைச் சரியாக அடையாளம் காணலாம், அதைக் குணப்படுத்தலாம், இறப்புச் சூழலைத் தடுக்கலாம், நோயுற்ற நிலையை, சிகிச்சைச் செலவுகளைக் குறைக்கலாம்.''

இந்தத் தோழமையின் தலைவர் நரிந்தர் குமார் லம்பா ''ஒவ்வோர் ஆண்டும் தில்லி NCR மிதிவண்டி ஓட்டுவதற்கான தோழமை பல அமைப்புகளுடன் இணைந்து சமூகப் பணிகளில் ஈடுபடுகிறது, நல்ல நோக்கங்களை

*DG அஷோக் கன்டூர் (வலதிலிருந்து 3வது) கொடியசைத்து பேரணியை துவக்கி வைக்கிறார்.*





*மிதிவண்டி பேரணியில் பங்கு பெறும் பெண்கள்.*

ஆதரிக்கிறது. இது எங்களை மேலும் செய்ய ஊக்குவிக்கிறது, அடுத்த ஆண்டுக்கான நிகழ்ச்சியை நாங்கள் ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்'' என்று விளக்கினார்.

''எங்கள் தோழமையின் நோக்கம், போட்டியாகவும் பொழுது போக்காகவும் மிதிவண்டி ஓட்டுதலின் வழியாக உலக அளவில் நட்பை உருவாக்குதல், முன்னிறுத்துதல். உள்ளூரில் அல்லது பன்னாட்டு அளவில் நம் சமூகத்துக்குச் சேவை புரியும் ஒரு நோக்கத்தை நாங்கள் தேர்ந்தெடுக்கலாம். நீங்கள் மிதிவண்டி ஓட்டாவிட்டாலும், மற்றவர்கள் மிதிவண்டி ஓட்டுவதைப் பார்க்கும்போது சுறுசுறுப்பு வருகிறது, என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று மக்கள் ஆர்வம் கொள்கிறார்கள்'' என்கிறார் இவர்.

66 வயதுப் பங்கேற்பாளர், RC தில்லி சவுத் ஈஸ்ட், RID 3011, உறுப்பினர் ரஜ்னி தாக்கர் தான் ''மிதிவண்டி ஓட்டுதலுக்கு அடிமையாகிவிட்டதாக'' சொல்கிறார். எட்டு வயதில் மிதிவண்டி ஓட்டத் தொடங்கிய இவரைப் பொறுத்தவரை, இந்தப் பேரணி'' பெண்களும் சிறுமிகளும் தங்களை நன்கு கவனித்துக் கொள்ளவேண்டும் என்று ஊக்குவிக்கிற'' ஒரு வழி. இவர் 90 நிமிடங்களில் பேரணியை நிறைவுசெய்தார். ஆனால்,'' நான்



*அறுபது வயது ரஜினி தாக்கர் கணவர் அஷோக் தாக்கருடன்.*

களைப்பாக உணரவில்லை, மகிழ்ச்சியாக உணர்ந்தேன். மற்ற மிதிவண்டியாளர்கள் என்னிடம் உங்கள் வயதில் நாங்களும் உங்களைப்போன்ற உடற் தகுதியுடன் இருக்க விரும்புகிறோம்' என்றார்கள்.''

''பொது ஆர்வங்கள் நட்பின் சிறப்புப் பிணைப்புகளை உருவாக்க உதவுகின்றன, ரோட்டரியன்களுக்குக் கூடுதல் வாய்ப்புகளைத் திறக்கின்றன என்ற உண்மையை ரோட்டரி அடையாளம் காண்கிறது. நான் ரோட்டரியில் ஒரு புதிய குடும்பத்தைக் கண்டறிந்துள்ளேன். பிறர் நான் சொல்வதைக் கேட்கிறார்கள், மதிக்கிறார்கள் என்று நான் உணர்கிறேன், என் வயதில் இதுமட்டும் தான் எனக்கு முக்கியம்'' என்கிறார் இவர்.

மிதிவண்டி ஓட்டுநர்கள் அனைவருக்கும் ரோட்டரி, மிதிவண்டி ஓட்டுதல் தோழமை, RGCIRC சின்னங் களைக் கொண்ட இளஞ்சிவப்பு மேலங்கிகள் வழங்கப்பட்டன.'' இது நம் பொதுத் தோற்றத் தையும் மேம்படுத்துகிறது'' என்கிறார் லம்பா. ■

ADVERTORIAL

2022–23ன் 2வது AKS உறுப்பினர்

# 3110




ப்ராச்சி மற்றும் பவன் அகர்வால்
DG, RID 3110



அனிதா மற்றும் Rtn சுமித் கோயல்
RC ஆக்ரா சஃபையர்

## மேஜர் டோனர் லெவல் - 3



PDG ஷரத் சந்த்ரா மற்றும்
அஞ்சனா சந்த்ரா
RC காஷிபூர்

## மேஜர் டோனர்கள்



PDG தேவேந்தர் அகர்வால்
(ARRFC)



PDG ஷரத் சந்த்ரா
(DRFC)

## மேஜர் டோனர்



PDG கிஷோர் கட்ரு மற்றும்
சங்கீதா கட்ரு
RC பெரைலி சென்ட்ரல்



Rtn ராஜன் வித்யார்தி
மற்றும் ஷாலினி வித்யார்தி
RC பெரைலி




Rtn O P சிங்கல்
RC ருத்ராபூர்



Rtn மதுகர் ஸ்ரீவஸ்தவா மற்றும்
கீர்த்தி ஸ்ரீவஸ்தவா
RC கான்பூர் மெட்ரோ



Rtn R K பங்கூர் மற்றும்
Rtn மஞ்சு பங்கூர்
RC கான்பூர் வினாயக்ஸ்ரீ



Rtn அஜய்குமார் குப்தா
மற்றும் தீப்தி குப்தா
RC கான்பூர் மெட்ரோ



Rtn Dr ஷாஜஹான் பேகம்
மற்றும் M T சித்திகி
RC பெரைலி ஹெரிட்டேஜ்



Rtn Dr தீபிகா G அட்ரே
மற்றும் நீராஜ் அட்ரே
RC காஷிபூர் கார்பெட்

## உறுப்பினர் வளர்ச்சி



PDG நீரவ் நிமேஷ் அகர்வால்
மாவட்ட உறுப்பினர்
கமிட்டி தலைவர்

## கடந்த இரண்டு ஆண்டுகளாக, எங்கள் மாவட்டம் Zone 6-ல் மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளது

**176 புதிய உறுப்பினர்கள் சேர்க்கை**
**4.9% வளர்ச்சி சதவிகிதம்**

Sept 1, 2022 அன்று மொத்த உறுப்பினர்கள்: **3,738**



Do follow us: @Rotary3110

RID

# 3110-ன் திட்டங்கள்










































Rtn ராஜ் மெஹ்ரோத்ரா
CDS (Admin)

# புனேவில் கதீர்வீச்சு மையம்

## ஜெய்ஸ்ரீ

இந்த பெண்களின் துயரத்தை என்னால் உணர முடிகிறது. எனக்கு நல்ல சிகிச்சை கிடைத்திரா விட்டால் நான் இன்று இங்கு வந்திருக்க மாட்டேன். எனவே நீங்கள் யாருடைய வாழ்க்கையை மாற்றப்போகிறீர்கள் என்பதை குறைத்து மதிப்பிடாதீர்கள் என்றார் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ். புற்றுநோயியல் பிரிவில், மார்பக புற்றுநோய் சிகிச்சைக்காக தங்களது முறைக்காக காத்திருந்தவர்களை குறிப்பிட்டு பேசிய அவர், 15 ஆண்டுகளுக்கு முன்பு மார்பக புற்றுநோய்க்காக தாம் சிகிச்சை பெற்றதை நினைவு கூர்ந்தார். ஆகஸ்ட் மாதத்தின் முற்பகுதியில், புனேயில் கஸ்பா பெத் என்னுமிடத்தில் சூர்யா சஹயாத்ரி மருத்துவமனையில், ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர்கள் Dr மகேஷ் கோட்பாகி, A S வெங்கடேஷ், TRF அறங்காவலர் Dr பரத் பாண்ட்யா மற்றும் RID 3131ன் மாவட்ட ஆளுநர் Dr அனில் பார்மர் ஆகியோர் முன்னிலையில் புதிய கதிர்வீச்சு மையத்தை ஜெனிஃபர் ஜோன்ஸ் திறந்துவைத்தார். ஏழை மக்களுக்கும் பணக்காரர்களைப் போல அதிநவீன சிகிச்சை பெறுவதற்கான வசதி களை செய்து கொடுத்ததற்காக பரத் பாண்ட்யாவுக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார். இந்த மருத்துவமனைக்கு புனேவில் 6 கிளைகளும் மகாராஷ்டிரத்தின் நாசிக் மற்றும் கராத்தில் தலா ஒரு கிளையும் உள்ளது.

புனே பிரிஸ்டைன் ரோட்டரி சங்கம், DRFC கிரிஷ் குணே வழிகாட்டுதலின் பேரில் ரூ.6.9 கோடி (860,000 டாலர்) சர்வதேச மானிய உதவி மூலம் இந்த கதிர்வீச்சு சிகிச்சை மையத்தை ஏற்படுத்தியுள்ளது. புனே

**இடமிருந்து:** PDG *ரவி தோத்ரே,* RI *இயக்குனர் மகேஷ் கோட்பாகி,* RI *தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ்,* TRF *அறங்காவலர் பரத் பாண்ட்யா,* RC *புனே சென்ட்ரல் உறுப்பினர்* M L *ராத்தி,* DG *அனில் பார்மர், திட்டத் தலைவர் சுதின் ஆப்தே,* Dr *ஹேமா பார்மர்,* RI *இயக்குனர்* A S *வெங்கடேஷ், வினிதா வெங்கடேஷ் மற்றும்* DGN *நிக் க்ராயசிச் ஆகியோர் புதிதாக அமைக்கப்பட்ட கதிர்வீச்சு மையத்தில்.*



சென்ட்ரல் மற்றும் யார்மவுத் ரோட்டரி சங்கம் (RID 7780) ஆகியவை கூட்டாளிகளாக செயல்பட்டுள்ளனர்.

புனேயில் நான்கு மருத்துவ மனைகள் வர்த்தக விலையில் கதிர் வீச்சு சிகிச்சை வழங்கி வருகிறது. புனே, பிம்பிரி-சின்ச்வாட், பன்வலில் உள்ள மக்களுக்கு குறைந்த செலவில் சிகிச்சை அளிக்கும் ஒரே மையம் இது வாகும். இங்கு பொதுவாக கதிர்வீச்சு சிகிச்சைக்கு ரூ.2 லட்சம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஏழை மக்களுக்கு பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது என்றார் திட்ட ஒருங்கிணைப்பாளர் சுதின் ஆப்தே. இந்த திட்டத்தின் கீழ் 10,000 நோயாளிகள் பலன்பெற முடியும். இதன் மதிப்பு 20 மில்லியன் டாலராகும். கடந்த ஐந்து வருடத்தில் TRF உடன் சர்வதேச மானிய உதவி தரவுகளை சரிபார்த்த போது ஆசியாவிலேயே அதிகளவிலான சர்வதேச  நிதியுதவி மூலம் நிறை வேற்றப்பட்ட திட்டம் இதுவாகத்தான் இருக்கும் என்றார் அவர்.

கோட்பாகி கூறுகையில் இந்த மாவட்டம்,  கடந்த ரோட்டரி ஆண்டில் 2.2 மில்லியன் டாலர்களை நிதிப்பங்களிப்பாக வழங்கியுள்ளது. ரோட்டேரியன்கள் திறந்த மனதுடன் தாராளமாக நிதிப்பங்களிப்பு செய்தால் அறக்கட்டளை என்ன செய்யும் என்பதை இந்த திட்டம் நமக்கு காட்டுகிறது என்றார்.

இத்திட்டத்தின் மூலம் எத்தனை குடும்பங்களில் மாற்றத்தை ரோட்டரி கொண்டு வந்துள்ளது என்றும் பார்க்க முடிகிறது. எங்களது அறக்கட்டளை (TRF) உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு அனைத்தையும் சாத்தியமாக்குகிறது என்பதை நினைக்கும்போது உற்சாகம் ஏற்படுகிறது என்றார் பாண்ட்யா.

### முன்னோடி

மருத்துவமனையுடன் எங்களுக்கு நீண்ட தொடர்பு உள்ளது. 2019ம் ஆண்டு அங்கு நாங்கள் ஒரு நரம்பியல் சிகிச்சை மையத்தை அமைத்துக் கொடுத்தோம். மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் Dr சாருதத் ஆப்தே, எங்களால் பரிந்துரைக்கப்படும் நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை அளிப்பதாக உறுதியளித்து மேலும் சில வசதிகளை செய்து தருமாறு கேட்டுக் கொண்டார் என்றார் சுதின் ஆப்தே. இதைத் தொடர்ந்து ரோட்டரிக்கும் மருத்துவ மனைக்கும் இடையே PDG ரவி தோத்ரே மற்றும் Dr ஆப்தே இருவரும் 10 ஆண்டுக் கால புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

புனே பிரிஸ்டைன் மற்றும் புனே சென்ட்ரல் ரோட்டரி சங்கங்கள் அங்கு தொடர்ந்து பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. பிரின்ஸ்டைன் ரோட்டரி சங்கம் கோவிட் ICU, கீமோ தெரபி வார்டுகளை நிறுவியதுடன், மானிய உதவி மற்றும் கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு நிதி மூலம் 175 குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சைக்கான செலவையும் ஏற்றுக் கொண்டுள்ளது. புனே சென்ட்ரல் ரோட்டரி சங்கம், சிறுநீரகவியல் சிகிச்சைப் பிரிவில் 12 டயாலிஸிஸ் இயந்திரங்களை நிறுவியுள்ளது. புனே பாஷன் ரோட்டரி சங்கம் சார்பில் இதயநோய் கண்டறியும் பிரிவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### நன்கொடையாளர்கள்

இந்த மையத்தில் இதர உபகரணங்களுக்காக புனே பிரிஸ்டைன் ரோட்டரி சங்கம் ரூ.4.8 கோடி கூடுதலாக வழங்கியுள்ளது. புனே நியூரோசயின்ஸ் டிரஸ்ட் மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் தற்போது AKS உறுப்பினராக உள்ள தனியார் சேவை அமைப்பு சிவில் நிர்மாண பணிகளுக்காக ரூ.1.3 கோடியை நன்கொடையாக வழங்கியுள்ளது. நாக் அறக்கட்டளை ரூ.50 லட்சம் வழங்கி ஆதரவளித்துள்ளது. AKS உறுப்பினர் நிதின் தேசாய் ரூ.1.3 கோடியும், தொழிலதிபர் மதுசூதன் ரதி குடும்ப அறக்கட்டளை மூலம் ரூ.55 லட்சமும் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

சூர்யா-சஹயாத்ரி மருத்துவ மனையை ரோட்டரி-சூர்யா சஹயாத்ரி மருத்துவமனை என்று பெயர் மாற்றம் செய்வது தொடர்பான கூட்டாண்மையை ஜோன்ஸ் வெளியிட்டார். இந்த கட்டடம் நம்பிக்கை என்னும் கதிர்வீச்சை வெளிப்படுத்துகிறது என்று ஜோன்ஸின் கணவரும் DGNனுமான Dr நிக் கிரயாசிச் தெரிவித்தார்.



புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ

# ரோட்டரியால் நாம் மேம்பட்டுள்ளோம்: ஜோன்ஸ்

கிரண் ஜெஹரா




கிரண் ஜெஹரா

*RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் DGN நிக் கிரயாசிச் அவர்களுடன் RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி, சுமேதா, மற்றும் DGN நந்தகுமார், வினிதா மற்றும் RI இயக்குனர் A S வெங்கடேஷ்.*

“ரோட்டரியில் இணைந்ததால், முன்பை விட மேம்பட்ட மனிதர்களாக ஆகாதவர்கள் இங்கு யார்? நம் ஒவ்வொருவருக்கும் ரோட்டரி தொடர்பான ஒரு கதை இருக்கிறது. அந்தக் கதைகள் நம் வாழ்வில் மிகச் சிறப்பானவை, மிக முக்கியமானவை, ரோட்டரி இல்லாவிட்டால் அவற்றை நாம் எப்போதும் பெற்றிருக்க மாட்டோம்’’ என்றார் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ். சென்னையில் RIDகள் 2981, 2982, 3000, 3231, 3232 ரோட்டரியன்களிடம் பேசும் போது அவர் இவ்வாறு கூறினார்.

ஜோர்டானில் உள்ள மா’ன் என்ற இடத்தில் தன் கணவர் Dr நிக் கிரயாசிச் உடன் ஒரு மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்ட போது தான் ஓர் இதய அறுவைச் சிகிச்சையைப் பார்த்ததை அவர் நினைவுகூர்ந்தார்.

சிரியாவைச் சேர்ந்த ஆறு வயது சிறுமி சல்மாவிற்கு Rtn Dr மார்க் டர்பன்டைன் இதய அறுவைச் சிகிச்சை செய்தார். அறுவை சிகிச்சை முடிந்தப்பின் சிறுமி சல்மாவின் இதயம் துடிக்கத் தொடங்கியது, அவருடைய உயிர் திரும்பியதை நான் பார்த்தேன். இப்படி ஒரு விஷயத்தைப் பார்ப்பது எப்பேர்ப்பட்ட நற்பேறு! அந்த நாளில், ரோட்டரியால் நான் இன்னும் மேம்பட்ட மனிதராகியுள்ளேன் என்பதை நான் உணர்ந்தேன்.’’

பன்முகத்தன்மை, சமநிலை, உள்ளடக்குதல் மற்றும் தடைகளை உடைத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிற அதே நேரத்தில், “சங்க உறுப்பினர்களுக்கு ஒரு கதகதப்பான, வரவேற்கிற அனுபவத்தை வழங்குவதும், அவர்கள் ரோட்டரியை நேசிக்கச் செய்வதும் முக்கியம்’’ என்று அவர் வலியுறுத்தினார்.’’ இது வெறும் எண்களை எட்டுவதாக இருக்கக்கூடாது, என்றார்.

தமிழக முதலமைச்சர் M K ஸ்டாலின் அவர்களை ஜோன்ஸ் சந்தித்து அவரிடம் ரோட்டரியின் போலியோ ஒழிப்பு திட்டங்களைப் பற்றியும் RID 3232ன் மாபெரும் ஹெப்பாடிட்டிஸ் தடுப்பு திட்டங் களைப் பற்றியும் விவரித்தார்.

### ரோட்ராக்டர்களுடன் சந்திப்பு

சென்னையில் உள்ள எத்திராஜ் மகளிர் கல்லூரியில் ஜோன்ஸ் ரோட்டராக்டர்களை சந்தித்தார். தனது கற்பனையின் தாக்கம் (இமாஜின் இம்பாஃக்ட்) இந்த மாவட்டத்தில் பெண்கள் அதிக எண்ணிக்கையில் ரோட்ராக்டர்களாக இருப்பதாக எனக்கு தெரிவிக்கப் பட்டது. உள்ளே நுழைந்து உங்களின் ஆற்றலை அனுபவபூர்வமாக உணரும் வரை நிக் மற்றும் நானும் எதிர்பார்ப்பை பற்றி சிந்திக்கவே இல்லை. உங்களின் ஆற்றலை நான் புரிந்துகொண்டேன் என்று கூறினார். இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பாக ஏற்பாடு செய்ததற்காக DRR கௌதம் ராஜ் மற்றும் RAC மெட்ராஸ் சென்ட்ரலின் முன்னாள் தலைவர்




*தமிழக CM M K ஸ்டாலின் அவர்களுடன் RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் RID வெங்கடேஷ். மேலும் (இடமிருந்து) PDG முத்துபழனியப்பன், DGN கிரயாசிச், RC சென்னை கோஸ்டல் முன்னாள் தலைவர் சரண் வேல் ஜெயராமன், DG நந்தகுமார் மற்றும் சுமேதா, மாவட்ட செயலாளர் ஸ்ரீராம் துவூரி.*

மீரா ஷர்மா ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்.

ரோட்டரி கனவு (இமாஜின் ரோட்டரி) என்ற குறிக்கோள் சக்தி வாய்ந்தது. ரோட்ராக்டர்கள் தங்கள் சமூகத்திற்கும் உலகிற்கும் என்னதேவை என்பதை சிந்தித்து செயல்படுத்துவதற்கு இது வாய்ப்பளிக்கிறது என்றும் ஜோன்ஸ் குறிப்பிட்டார். ரோட்ராக்டர்கள் மிகப் பெரிய அளவில் கனவு காண வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். ரோட்ராக்ட் மூலம் நீங்கள் சிறந்த பேச்சாளராகவும், பல்வேறு அரசுகளின் பணிகளையும் புரிந்து கொள்ளவும் முடியும். தலைமைப் பண்பையும், துறைசார்ந்த திறமைகளை வளர்த்துக் கொள்ள முடியும். சேவைகள் மூலம் மகிழ்ச்சி அடையவும் முடியும் என்றார்.

ரோட்டராக்டர்களின் சமூக ஊடக அறிவை மெச்சிய அவர்,'' அவர்கள் எந்த ஒரு திட்டத்தையும் நன்றாக வடிவமைத்து, வாட்ஸ் ஆப் மூலம் உரை யாடி ஒரு மாதத்தில் நிறை வேற்றிவிடுவார்கள். ஆனால், ரோட்டேரியன்கள் அதே திட்டத்தைச் செயல்படுத்த முதலில் குழுவை ஏற்படுத்துவார்கள். செய்து முடிக்க 6 மாதமங்களாகும். ஒரு வேலையை எப்படி திட்டமிட்டு செய்துமுடிப்பது என்பதை ரோட்ராக்டர்களிடமிருந்து ரோட்டேரியன்கள் கற்றுக் கொள்ள வேண்டும்,''என்றார்.

DEI பற்றி அவர் குறிப்பிடு கையில், பன்முகத்தன்மை நமது பலம். ரோட்ராக்ட் அதை ஏற்கெனவே வெளிப்படுத்தி யுள்ளது. ஆனால், பாலின சமத்துவம் என்றாலும் சரி அல்லது பலதரப்பட்ட உறுப்பினர்கள் என்றாலும் சரி நீங்கள் முன்னேற்றத்துக்கு வழிவகுத்துள் ளீர்கள். உங்கள் மாவட்டத்தில் ரோட்ராக்ட் உறுப்பினர்களில் 50 சதவீதம் பெண்கள் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

தனது கணவர் DGN கிரயாசிச் சுடன் அமேசானில் மருத்துவ முகாமுக்குச் சென்ற நேரத்தை நினைவு கூர்ந்தார். மருத்துவக் குழுவின் ஓர் அங்கமாக நிக் இருந்த போது, ஊடக நெறிமுறைகள் குறித்த பயிலரங்கு நடத்தும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த ரோட்டேரியன்களை நான் சந்தித்தேன். ரோட்டரியின் சர்வதேசத் தன்மை என்னை ஈர்த்தது. நமது தேசியம், பின்னணி, மத நம்பிக்கைகள் எதுவாக இருந்தாலும் ரோட்டரி உறுப்பினர் என்ற வகையில் நாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நமது நாடுகளும், ரோட்டரியும் ஒரே மாதிரியான குறிக்கோளுடன் செயல்படுகிறது. உலகில் அழியாத மாற்றத்தை கொண்டு வருதற்கான வாய்ப்புகளை ரோட்டரி வழங்குகிறது என்றார் ஜெனிஃபர் ஜோன்ஸ்.■

கிரண் ஜெஹாரா




*RI தலைவர் ஜோன்ஸ் உடன் DRR கௌதம் ராஜ், DG நந்தகுமார் மற்றும் கிரயாசிச்.*

# TRFன் நல்ல பணிகள் வியக்கவைக்கின்றன இயன் ரைஸ்லி

V முத்துகுமரன்



*இடமிருந்து:* TRF *அறங்காவலர் தலைவர் இயன் ரைஸ்லி, அறங்காவலர்* Dr *பரத் பாண்ட்யா, ஜூலியட் ரைஸ்லி,* PDG J *ஸ்ரீதர் மற்றும்* RI *இயக்குனர்* A S *வெங்கடேஷ். முன்னாள்* DRFC M *அம்பலவாணன் அவர்களும் உள்ளார்.*

ரோட்டரி மாவட்டம் 3232ன் முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் J ஸ்ரீதர் மற்றும் S முத்து பழனியப்பன் இருவரும் தங்கள் பதவிக்காலத்தில் முன்முயற்சி எடுத்து உருவாக்கிய இரண்டு மருத்துவத் திட்டங்களைப் பார்வையிட்ட TRF அறங்காவலர் தலைவர் இயன் ரைஸ்லி வியந்து போனார். என்ன ஒரு அற்புதமான நாள். எங்களது ரோட்டரி அறக்கட்டளையின் சர்வதேச மானிய உதவி மற்றும் ரோட்டேரியன்களின் பெருந்தன்மை ஆகியவை மூலம் தான் இந்த மருத்துவ வசதிகள் சாத்தியமானது. உலக மக்களுக்கு நன்மைகள் கிடைப்பதற்காக ரோட்டரி அறக்கட்டளை நன்கொடை அளித்து பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது என்றார்.

சென்னையின் வடக்கு புறநகர் பகுதியான விநாயகபுரத்தில் M N மருத்துவமனையில் 82-வது ஆரஞ்சு விஷன் சென்டரை (ரோட்டரி கண் மருத்துவ விரிவாக்கத் திட்டம்) தொடங்கி வைத்த ரைஸ்லி, ஒரு விஷயத்தை குறிப்பிட்டார். அதாவது ரோட்டரி மாவட்டம் 3232, இதர ஐந்து ரோட்டரி மாவட்டங்களுடன் இணைந்து 200 கண் மருத்துவ மையங்களை நிறுவும் திட்டத்துடன் 3.4 மில்லியன் டாலர் மதிப்புள்ள 16 சர்வதேச மானியங்களை பெற்றுள்ளது அல்லது நிதியுதவி பெற விண்ணப்பித்துள்ளது. ஆரஞ்சு கண் மருத்துவத் திட்டம் (Project Orange) ஒரு உயர்ந்த, நீண்டால கண்ணோட்டத்துடனான நிலைத்தன்மை உடைய திட்டமாகும் என்று அவர் தெரிவித்தார். கண் மருத்துவப் பரிசோதனை மையங்களை அர்ப்பணிப்பு உணர்வுடன் படிப்படியாக அமைத்து வருவதற்காக முத்து பழனியப்பனை அவர் பாராட்டினார். TRF அறங் காவலர் பரத் பாண்டியா பேசுகையில், உடலின் ஐந்து முக்கியமான உறுப்புகளில் கண், தனித்துவமானது மட்டுமல்ல, வாழ்க்கைக்கு முக்கியமானது. கண்கள் நமது ஆன்மாவை பிரதி பலிக்கின்றன. மக்களின் உண்மையான தேவையை TRF எப்படி பூர்த்தி செய்கிறது என்பதற்கு இந்த கண் மருத்துவ மையத் திட்டம் சிறந்த உதாரணமாகும் என்றார்.

முத்து பழனியப்பன், தனது விளக்கவுரையில், கண் மருத்துவ

மையம் அமைக்கும் திட்டம் 2017ல், மத்திய அரசின் ரூ.3,000 கோடியில் 20,000 கண் மருத்துவ மையம் அமைக்கும் விஷன் 2020 திட்டத்துக்கு உதவும் நோக்கத்துடன் உருவானது. ஆனால், இந்தியாவில் பார்வைக் குறைபாட்டை தடுக்கும் கண் சிகிச்சை மையங்கள் 1,000 தான் உள்ளன. ரோட்டரிமீதான நன்மதிப்பு மற்றும் அதன் வலிமை ஆகியவற்றை கருத்தில் கொண்டு தமிழகம் மற்றும் ஆந்திர மாநிலத்தில் கண் மருத்துவ மையங்கள் அமைக்க 17 மருத்துவ மனைகள் ரோட்டரியுடன் கூட்டு சேர்ந்தன. சங்கர நேத்ராலயா, டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை, அரவிந்த் கண் மருத்துவமனை ஆகியவை எங்களுடன் கூட்டணி அமைத்துள்ள மருத்துவமனைகளில் குறிப்பிடத்தக்கவை என்றார்.

கடந்த ஒராண்டில், புதிதாக திறக்கப்பட்ட கண் மருத்துவ மையங்கள், செயல்படும் அளவுக்கு லாபத்தில் இயங்கி வருவது திட்டக்குழுவினருக்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த மையங்கள் நீடித்திருக்கும் தன்மையை பெற்றுள்ளன. ஒவ்வொரு கண் மருத்துவ மையமும் நவீன வசதி களுடன் அந்தப் பகுதியைச் சுற்றி யுள்ள 60,000 பேருக்கு சேவை அளித்து வருகிறது. தற்போது 7 ரோட்டரி மாவட்டங்களைச் சேர்ந்த 36 சங்கங்கள் மற்றும் 10 வெளிநாட்டில் உள்ள ரோட்டரி சங்கங்கள், மாவட்டங்கள் ஆரஞ்சு திட்டத்தில் தங்களை தொடர்பு படுத்திக் கொண்டுள்ளன. அடுத்த சில ஆண்டுகளில் நாடு முழுவதும் குறைந்தது 1,000 உயர் கண் மருத்துவ மையங்கள் அமைக்க வேண்டும் என்ற இலக்குடன் நாங்கள் செயல்பட்டு வருகிறோம் என்றார்.

புதிய மையத்தில் சென்னை டவர்ஸ் ரோட்டரி சங்கம் 10,000 டாலர்கள் முதலீடு செய்துள்ளது. சென்னை காபிடல் ரோட்டரி சங்கம் 50,000 டாலர் முதலீட்டுடன் 25 உயர் கண் மருத்துவ மையங்கள் கொண்ட தொகுப்பை உருவாக்கி வருகிறது. இதற்கு முத்து மற்றும் அவரது மனைவி கமலா இருவரும் 30,000 டாலர் நன்கொடையாக வழங்கியுள்ளனர். மேலும் சர்வதேச மானிய உதவி 381,718 டாலர் கிடைத்துள்ளது. இதற்கான சர்வதேச கூட்டாளர் புகித் ஜலீல் கோலாலம்பூர் (RID 3300).

**சர்வதேச மானியங்கள்**

முன்னதாக, RYA மெட்ராஸ் காஸ்மோ பவுண்டேஷன் என்னும் சேவை நிறுவனம் நடத்தி வரும் புற்றுநோய் கண்டறியும் மையத்தில் ஐந்து புதிய டயாலிஸிஸ் கருவிகளின் செயல்பாட்டை தொடங்கிவைத்த ரைஸ்லி, பிடிவாதமும், உறுதிப்பாடும் நிறைந்த தலைவரான IPDG ஸ்ரீதர், சென்னையில் 16 மருத்துவமனைகள் மற்றும் மருத்துவமையங்களில் 135 டயாலிஸிஸ் சிகிச்சை கருவிகளை நிறுவுவதில் முக்கியப் பங்கு வகித்தவர் என்று கூறி பாராட்டினார். இந்த புதிய மையத்தில் சிறிய சங்கங்கள் ஒன்றிணைந்து சர்வதேச நிதியுதவித் திட்டத்தை (58,000 டாலர்) செயல்படுத்தியுள்ளது. இதன் மூலம் சென்னைவாசிகள் பலர் பலனடைவர் என்று கூறினார். சென்னை முகப்பேர் ரோட்டரி சங்கத்தின் கீழ் 14 சிறிய சங்கங்கள் 23,000 டாலர் நிதி திரட்டியுள்ளது. மேலும் முன்னாள் மாவட்ட ஆளுநர் அபிராமி ராமநாதன், புதிய டயாலிஸ் மையம் அமைக்க தனது பங்காக 36,000 டாலர் பங்களிப்புச் செய்துள்ளார்.

*ஆரஞ்ச் திட்டத்தைப் பரப்பும் பைக்குகளில் அமர்ந்துள்ள TRF தலைவர் ரைஸ்லி மற்றும் அறங்காவலர் பாண்ட்யா. உடன் PDG ISAK நாசர், DG நந்தக்குமார், ஆரஞ்ச் திட்டத்தலைவர் கணேஷ் சுப்பையா, PDG முத்து பழனியப்பன் மற்றும் Dr சுமேதா நந்தகுமார் ஆகியோரும் உள்ளனர்.*






**இடமிருந்து:** M *அம்பலவாணன்,* DG *நந்தகுமார்,* RC *சென்னை டவர்ஸ் திட்டத்தலைவர்* RM *சுரேஷ், அறங்காவலர் பாண்ட்யா, அறங்காவலர் தலைவர் இயன் ரைஸ்லி, ஜூலியட்,* DRFC B *தாட்சாயணி,* PDG *முத்துபழனியப்பன் மற்றும் சங்கத்தலைவர் சதீஷ் ஜுபிட்டர்.*

அவர்களின் வெளிநாட்டு கூட்டாளர்கள் கார்லிங்ஃபோர்டு ரோட்டரி சங்கம், RID 9685, ஆஸ்திரேலியா.

பெங்களூர் ரோட்டேரியன்கள், தங்களது சமூகநலத் திட்டங்கள் பற்றி முன்னதாக ரைஸ்லியிடம் விவரித்த போதிலும், சர்வதேச நிதியுதவிகள் மூலம் சமூக நலத் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதையும், TRFன் தாக்கத்தையும் சென்னை சங்கங்கள் விரிவாக எடுத்துரைத் துள்ளன என்று பாண்ட்யா தெரிவித்தார்.

உலகில் நீரிழிவு நோயாளிகள் அதிகம் உள்ள இந்தியாவில் சிறுநீரக நோய் சுமையும் அதிகம் உள்ளது. சிறுநீரக சிகிச்சைக்கு 1,80,000 டயாலிஸிஸ் கருவிகள் தேவைப்படும் நிலையில் நம்மிடம் சுமார் 45,000 யூனிட்டுகள்தான் உள்ளன. டயாலிஸிஸ் மையங்கள் அமைப்பதில் PDG ஸ்ரீதர் எடுத்துள்ள முன்முயற்சி மற்ற ஆளுநர்கள் மற்றும் ரோட்டரி மாவட்டங்களும் இத்தகைய மருத்துவ திட்டங்களை செயல்படுத்த ஊக்குவிக்கும்.

சென்னையில் சிறுநீரக நோயாளி களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் டயாலிஸிஸ் கருவிகளை தேவைக்கு ஏற்பட அதிகரிக்கும் ஸ்ரீதரின் அற்புதமான யோசனை தம்மை மிகவும் கவர்ந்ததாக ராமநாதன் தெரிவித்தார்.

RID 3232க்கு உட்பட்ட 51 சங்கங்கள் வழக்கமான சமூக நலத் திட்டங்களுடன் டயாலிஸிஸ் திட்டத்தையும் கூட்டாண்மை மற்றும் சர்வதேச மானிய உதவி திட்டங்களுடன் செயல்படுத்தி வருவதாக ஸ்ரீதர் சுட்டிக்காட்டினார். திட்டத்தலைவர் சிவ இளங்கோவன் கூறுகையில், தற்போது நிறுவப் பட்டுள்ள ஐந்து டயாலிஸிஸ் கருவிகளும் ஒரு நாளைக்கு இருமுறை செயல்படும். இதன் மூலம் தினமும் 10 நோயாளிகள் பயனடைவார்கள். டயாலிஸிஸ் சிகிச்சைக்கு பொதுவாக மருத்துவ மனைகளில் ஒரு அமர்வுக்கு ரூ.1,350 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஆனால், நாங்கள் குறைந்த அளவாக ரூ.400 மட்டுமே கட்டணமாக வசூலிக்கிறோம். ஏழை நோயாளி களுக்கு இலவச சிகிச்சை அளிக்கும் வகையில் முதல்வரின் மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இவற்றுக்கு அனுமதி பெறுவது குறித்து அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சென்னையில் உள்ள அறக் கட்டளை மருத்துவமனைக்கு மேலும் ஐந்து டயாலிஸ் கருவிகள் நன்கொடையாக வழங்குவதற்கான பணிகளை சென்னை முகப்பேர் ரோட்டரி சங்கம் தொடங்கியுள்ளது என்றும் அவர் கூறினார். ஆர்ஒய்ஏ மெட்ராஸ் காஸ்மோ பிராஜக்ட் திட்டச் செயலாளர் உமேஷ் அகர்வால் கூறுகையில், அருகில் உள்ள தங்களின் பல்நோக்கு மருத்து வமனையில் உள்ள 9 டயாலிஸிஸ் கருவிகள் கடந்த 10 ஆண்டுகளில் 50,000 முறை செயல்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் ஏழைகள் பலர் பயன்பெற்றுள்ளனர். அவர்களுக்கு முழுமானியத்துடன் இலவச சேவை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். DG N நந்தகுமார், RI இயக்குநர் A S வெங்கடேஷ், DRFC B தாட்சாயிணி, PDG I S A K நாஸர், சங்கத்தின் தலைவர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் திட்ட தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.■

# ரோட்டரி படிப்பு மையம்

ரோட்டரி செய்திக் குழு




*ரோட்டரி படிப்பு மையத்தில் சுந்தரேஷ் குருசாமி, சென்னை ரோட்டரி மின் சங்க பட்டயத் தலைவர் அனுராதா கிரி, ஜெயந்தி ராஜா சீனிவாசன், PDG V ராஜா சீனிவாசன், DG I ஜெரால்டு மற்றும் ஞானவல்லி அறக்கட்டளை நிறுவனர் குருசாமி.*

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திருமங்கலத்தில் முன்னாள் துணை ஆட்சித் தலைவர் ஒருவர் ரோட்டரியுடன் இணைந்து, ரோட்டரி படிப்பு மையம் நிறுவியுள்ளார். இந்த மையம் கிராமப்புற மாணவர்களை UPSC தேர்வுக்கு தயார் செய்து அரசு பதவிகள் பெற வழிவகுக்கும். முந்தைய 18 ஆண்டுகளாக, K குரு சாமி அவர்கள் தன்னுடைய மனைவி ஞானவல்லி அவர் களுடைய ஆதரவுடன், தங்களுடைய குருசாமி ஞானவல்லி அறக்கட்டளை யின் வழியாக ஒரு படிப்பு மையம், நூலகத்தை நடத்திவருகிறார், இது மதுரையைச் சுற்றியுள்ள கிராமங்களில் மிகவும் புகழ் பெற்றுள்ளது.

அவர்களுடைய ஓய்வு ஊதியத் தொகைகூடப் படிப்பு மையத்தை நடத்தப் பயன்படுத்தப்படுகிறது என்கிறார் ரோட்டரி e-சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜெயந்தி ராஜா சீனிவாசன்.

இந்தப் படிப்பு மையத்தின் தொடக்க விழாவில் DG I ஜெரால்ட், ராஜா சீனிவாசன் தலைமை விருந்தினர்களாகப் பங்கேற்றார்கள். RID 3000, 3212, 3232ஐச் சேர்ந்த எண்ணிக்கையிலான ரோட்டரியன்கள் இதில் கலந்துகொண்டார்கள். குருசாமியின் மகன் G வெங்கடேஷ், PDG ராஜா சீனிவாசன் ஆகியோர் RC திருமங்கலத்தைக் குருசாமி யுடன் இணைப்பதில் முக்கியப் பங்காற்றினார்கள்.■

---

## காக்கிநாடாவில் கண் சிகிச்சை முகாம்




RC காக்கிநாடா கோல்டன் ஜூப்ளி, RID 3030, பெரும்பாலும் மீனவக் குடும்பங்கள் வசிக்கிற உப்பட கொட்டப்பள்ளி கிராமத்தில் நடத்திய மிகப்பெரிய கண் பரிசோதனை முகாமில் சுமார் 300 நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டார்கள். இவர்களில் 62 பேருக்குக் காக்கிநாடா ஸ்ரீ கிரண் கண் மருத்து வமனையில் கண் புரை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. கண் முகாமும் அறுவைச் சிகிச்சைகளும் $40,000 மதிப்புள்ள பன்னாட்டு நல்கைத் திட்டத்தின்கீழ் நடைபெற்றன. “நாங்கள் இந்தக் கண் மருத்துவமனைக்கு இரண்டு கண் பரிசோதனை இயந்திரங்களை வழங்கினோம்” என்கிறார் இச்சங்கத்தின் முன்னாள் தலைவர் G K ஸ்ரீனிவாஸ். இந்த திட்டத் துக்குப் பன்னாட்டுக் கூட்டாளராக RC சௌஹெகன் வாலி (நஷுவா), RID 7870, US, இணைந்தது.■

# ரோட்டரி ஆளுநர்



**கைலாஷ் ஜெதானி,**
ரியல் எஸ்டேட், RC தானே ஈஸ்ட், RID 3142

## ரோட்டேரியன்களுக்கான தலைமைத்துவ பட்டறைகள்

FAB 10 திட்டங்களின் கீழ் தானே மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களை சங்கங்கள் ஒன்றிணைந்து செயல்படுத்துவோம் என்கிறார் கைலாஷ் ஜெதானி. டிஜி வாக்காதான் என்பது ஒரு செயலி. ரோட்டேரியன்கள், அவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் மூலம் இதுவரை ரூ.30 லட்சம் மதிப்பிலான புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இவை பின்னர் கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு நிதியாக மாற்றப்பட்டு சேவைத் திட்டங்களுக்கு பயன் படுத்தப்படும். மேலும் புதிதாக 600 உறுப்பினர்களை சேர்ப்பதன் மூலம் மொத்த எண்ணிக்கையை 4,000 என உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் ஜெதானி தெரிவித்தார்.

ரோட்டரியினரிடம் அர்ப்பணிப்பு உணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நெட்ருத்துவா (தலைமைப்பண்பு) தொடர்பாக பயிலரங்குகளையும் பயிற்சிப் பட்டறை களையும் நடத்தி வருகிறோம். இரண்டு பிரபலங்கள் தங்கள் வெற்றிக்கதைகளை மேடையில் பகிர்ந்து கொள்வார்கள். TRF நிதியாக 6,00,000 டாலர் நிதி திரட்டவும் இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

பலவீனமான மற்றும் வலுவான சங்கங்களின் விகிதம் கவலை அடையச் செய்துள்ளது. இந்தப் பிரச்னையை ஆராய என்னிடம் நல்ல அதிகாரிகள் உள்ளனர். பலவீனமான சங்கங்கள், தங்களிடம் உள்ள உண்மையான திறனை உணர்ந்து செயல்பட்டால் உறுப்பினர்களை தக்கவைப்பதில் நாங்கள் வெற்றிபெற முடியும் என்கிறார் ஜெதானி. 2005ம் ஆண்டு அவர் ரோட்டரியில் சேர்ந்தார்.■



**I ஜெரால்டு**
பவர் எலெக்ட்ரானிக்ஸ்,
RC திருச்சிராப்பள்ளி ராக்சிட்டி, RID 3000

## ரோட்டரியை வளர்க்க ரோட்டேரியன்களுக்கு அதிகாரம்

சங்கங்களை சீரமைப்பது, புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு பதிலாக, ரோட்டேரியன்களிடம் நற்பண்புகளை வலுப்படுத்துவதில் ஆர்வமாக இருக்கிறார் ஜெரால்டு. புதிய உறுப்பினர்களை முழு ஈடுபாட்டில் வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களை தக்கவைக்க முடியும் என்பதும் அவரது கருத்து. 132 சங்கங் களில் 5,400 உறுப்பினர்கள் உள்ளனர். 5 புதிய சங்கங்களை ஏற்படுத்தவும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 5 சதவீதம் அதிரிக்கவும் அவர் திட்டமிட்டுள்ளார். கூடுதலாக 500 ரோட்ராக்டர்களை சேர்க்க முடியும் என்ற நம்பிக்கையில் உள்ளார்.

கிராம நிர்வாக அலுவலர் முதல் IAS பதவி வரை போட்டித் தேர்வை சந்திக்கும் இளைஞர்களுக்கு உதவ ஒவ்வொரு சங்கமும் ஒரு கிராமத்தில் ரோட்டரி கல்வி மையத்தை திறந்து பயிற்சி அளிக்கும். TRF நிதிப் பங்களிப்பாக $1,00,000 வழங்க வேண்டும் என்பது இலக்கு. சேமிப்பு, நிதி மேலாண்மை, இன்சூரன்ஸ் தொடர்பாக ரோட்டேரியன்களுக்கு பயிற்சிப் பட்டறைகள் நடத்தவும் ரோட்டேரியன்கள் குடும்பத்தினருக்கு முழு உடல் பரிசோதனை நடத்தவும் ஜெரால்டு திட்டமிட்டுள்ளார். வர்த்தகத்தில் போட்டியாளர் ஒருவர் ஏற்படுத்திய தாக்கத் தால் 1999ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார்.■

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





## V P கல்தா

ஆயுள் காப்பீடு, RC சிம்லா, RID 3080

### கிராமப்புற திட்டங்களுக்கு முன்னுரிமை

கடந்த ஆண்டு ரோட்டரியில் சேர்ந்த 1,400 புதிய உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் ஒருங்கிணைப்புத் திட்டம், ஈடுபாடு, அணுகுமுறை இல்லாததால் வெளியேறி விட்டனர் என்கிறார் கல்தா. புதிதாக 800 உறுப்பினர்களை சேர்ப்பதை இலக்காக வைத்துள்ளோம். மேலும் தலா 125 உறுப்பினர்களுடன் 18 புதிய சங்கங்கள் நிறுவப்படும் நிலையில் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் 5,000 என்ற இலக்கை எட்டி விடும் என்கிறார். ரோட்ராக்ட் விஷயத்தில் புதிதாக 50 சங்கங்கள் தொடங்கவும், புதிதாக 650 ரோட்ராக்ட் உறுப்பினர்களைச் சேர்க்கவும் திட்டமிட்டுள்ளார்.

கிராமங்களை நோக்கி ரோட்டரி செல்லட்டும் என்பது தான் இந்த ஆண்டு எங்களது மாவட்டத்தின் அம்சமாகும். ஒவ்வொரு சங்கமும் ஒரு கிராமத்தை தத்தெடுத்து சமூக நலத் திட்டங்களை செயல்படுத்தும். இரண்டு மருத்துவ வசதிகள் கொண்ட வேன்கள் ஊரகப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ரூ.50 லட்சம் செலவில் இரண்டு தடுப் பணைகள் கட்டப்படும். TRF நிதிப் பங்களிப்பாக 500,000 இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிம்லாவில் IGMC மருத்துவமனைக்கு அருகே ரோட்டரி அஷ்ரே மையத்தை ஏற்படுத்துவதில் கல்தா முக்கிய பங்காற்றியுள்ளார். இங்கு புற்றுநோயாளிகளுக்கு தனிப்பட்ட கவனத்துடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது. கல்தா, 2000ம் ஆண்டில் RC ராம்பூர் புஷாரில் சேர்ந்தார்.■

## அசோக் கன்டூர்

பட்டய கணக்காளர், RC தில்லி வெஸ்ட், RID 3011

### 100 சதவீதம் டிஜிட்டல் மாவட்ட சங்கங்கள்

கடந்த ஜூலை முதல் அனைத்து 122 சங்கங்களும் தங்களின் தினசரி செயல்பாடுகளை டிஜிட்டல் மயமாக்கியுள்ளன. மேலும் மாவட்ட ஆளுநரின் வருகையின்போதுகூட கள ஆய்வு தவிர திட்டங்கள் தொடர்பான தகவல்கள் ஆன்லைன் மூலமே விவரிக்கப்படுகின்றன. சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் 100 சதவீத டிஜிட்டல் செயல்பாட்டை கொண்டுவந்துள்ள முதல் மாவட்டம் எங்களுடையது தான் என்கிறார் அசோக் கன்டூர். மூன்று புதிய சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 550 உறுப்பினர்களை புதிதாக சேர்த்து மொத்த உறுப்பினர் எண்ணிக்கையை 5,000 - என உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. தொழிற் கல்வி மையங்களை தொடங்க விரும்பும் சங்கங்கள் திட்டத்திற்கான நிலத்தை அடையாளம்கான தில்லி அரசு மற்றும் மாநகராட்சி உதவி பெறப்படும்.

சாகேட்டில், 700 ஆண்டுகள் பழமைவாய்ந்த சத்புலா ஏரி ரூ.70 லட்சம் சர்வதேச மானிய உதவி மூலம் புனரமைக்கப்படும். 100க்கும் மேற்பட்ட பள்ளிகளில் கைகழுவும் நிலையங்கள் அமைக்கப்படும். TRF நிதியாக $1.2 மில்லியன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். 1997ல் எனது ரோட்டரி பயணத்தை தொடங்கினேன் என்று ரோட்டரியில் வெள்ளிவிழா ஆண்டைக் கொண்டாடும் அசோக் கான்டூர் நினைவுகூர்ந்தார்.■

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# சங்கங்களின் திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## பசுமைப் பணியில் RID 3231



DG JKN *பழனி மரநடு விழாவில்.*

ரோட்டரியன்கள் பல சுற்றுச்சூழல் பிரச்சனைகளைச் சமாளிக்கும் நோக்கத்துடன் 1 லட்சம் விதைகளை நடவுள்ளார்கள். தமிழ்நாட்டில் உள்ள காட்பாடியில் இருக்கும் ஏரி அருகே இவர்கள் 10,000 பனை விதைகளை நட்டார்கள். இந்த நிகழ்ச்சியில் DG JKN பழனி, மாவட்டச் சுற்றுச்சூழல் தலைவர் ஜோசஃப் அன்னையா கலந்து கொண்டார்கள்.■

## காகித மற்ற RID 3011



DG *அஷோக் கன்டூர்*

சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு கருதி RID 3011 DG அஷோக் கன்டூர் தன் மாவட்டத்தில் ஆவணங்கள், கடிதங்கள் அனைத்தையும் காகிதமில்லாமல் மின்னஞ்சல் கணினி மூலம் செய்தி பரிமாற்றம் செய்யக் கோரியுள்ளார்.■

## இளம் விளையாட்டு நட்சத்திரத்தை கௌரவித்தது சங்கம்



Rtn *பிரவீன் அகர்வால் திவ்யான்ஷி கௌதமிடம் காசோலை வழங்குகிறார்.*

13 வயதுக்குட்பட்ட மாநில பேட்மிண்டன் போட்டியின் வெற்றியாளர் திவ்யன்ஷி கவுதமுக்கு RC ஆக்ரா, RID 3110, மற்றும் பிரகார் அகர்வால் பேட்மிண்டன் அகாடமியால் பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. சங்கத்தின் உறுப்பினரும், பிரகார் அகர்வால் நினைவகத்தின் இயக்குநருமான பிரவீன் அகர்வாலிடம் இருந்து திவ்யன்ஷி ரூ.51,000 ஊக்கத்தொகையை பெற்றார்.■

## அசன்சோலில் இரத்த தான முகாம்



*முகாமில் சங்க செயலாளர் சுஜாதா முகர்ஜி மற்றும் தலைவர் தபஸ் கோஸ்.*

சர்வதேச மருத்துவர்கள் தினத்தன்று, RC அசன்சோல் கிரேட்டர், RID 3240 ஆல் இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. முகாமில் 40 யூனிட் ரத்தம் சேகரிக்கப் பட்டு, நன்கொடையாளர்களுக்கு உணவுப் பொட்டலங்கள், காபி, பால் மற்றும் ரெயின்கோட்கள் வழங்கப்பட்டன.■

# RID 3160ல் ரூ.25 கோடி மதிப்புள்ள திட்டங்கள்

ரோட்டரி செய்திக் குழு




PRIP *சேகர் மேத்தா,* RI *இயக்குனர் மகேஷ் கோட்பாகி, அமிதா கோட்பாகி,* PDG *ரவி வட்லாமனி,* IPDG V *திருப்பதி நாயுடு, அவர் மனைவி நிர்மலா மற்றும்* RC *ஹோஸ்பெட் முன்னாள் தலைவர் ராஜேஷ் கொரிஷெட்டார்.*

RID 3160 IPDG திருப்பதி நாயுடு தன்னுடைய பொறுப்புக்காலத்தின் தொடக்கத்தில் தான் அமைத்த இலக்குகள் அனைத்தையும் தான் எட்டிவிட்டதை எண்ணி மகிழ்கிறார். இவர் 400 புதிய ரோட்டரியன்களை (இதில் 125 பெண்கள்) இணைத்துள்ளார், 5 புதிய சங்கங்களைப் பதிவு செய்துள்ளார். மாவட்டச் சங்கங்கள் ரூ.25 கோடி மதிப்புள்ள சேவைத் திட்டங்களைச் செயல்படுத்த நாயுடு முக்கியப் பங்காற்றினார். PRIP சேகர் மேத்தா வருகையின்போது அவர் RC ஹொஸ்பெட் திட்டங்களாகிய ரத்த வங்கி மற்றும் ICU மருத்துவ உதவி வண்டிப் பணிகளைத் தொடங்கினார்'' என்றார் இவர். ரூ.48 லட்சம் விலையுள்ள இந்த ICU மருத்துவ உதவி வண்டியை நாயுடு தன்னுடைய மறைந்த தந்தை V ராமி ரெட்டி நினைவாக வழங்கினார்.

“ஒரு பன்னாட்டு நல்கைத் திட்டத்தின் கீழ் நாங்கள் RID 3150 உடன் இணைந்து, ராய்ப்பூரில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் சஞ்சீவனி மருத்துவ மனையில் 138 குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சைகளைச் செய்துள்ளோம்.'' என்கிறார் இவர். RID 3160ல் உள்ள டயாலிசிஸ் மையங்கள் சிறுநீரகச் செயலிழப்பால் துன்பப்படும் நோயாளிகளுக்கு 5,000 டயாலிசிஸ் நிகழ்வுகளைச் செய்துள்ளன. நாயுடு தன்னுடைய பொறுப்புக்காலத்தில் TRFக்கு $37,000 வழங்கினார்.■

---

# புதிய உயரங்களில் சஹ்யோக் திட்டம்



PDG *அஜய் மதன் செயற்கை கை பொருத்தப்பட்ட பயனாளியுடன் கை குலுக்குகிறார்.*

Rtn சலீல் தேவ்சிங் பாலி சிந்தனையில் உருவாகி, IPDG அஜய்மதன் ஆகஸ்ட் 2021ல் தொடங்கி வைத்த, கை, கால் அகற்றப்பட்டவர்களுக்குச் செயற்கைக் கை, கால் வழங்கும் சஹ்யோக் திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, DG V P கல்டா அதை எல்லாச் சங்கங்களும் பின்பற்றுவதற்கான மாவட்டத் திட்டமாக மாற்றியுள்ளார். இதுவரை இத்திட்டம் 155க்கும் மேற்பட்டோருக்குப் புது வாழ்வு அளித்துள்ளது, இதற்கான சராசரிச் செலவு, ஒவ்வொருவருக்கும் ரூ 35,000.

இந்தத் திட்டத்துக்கான நிதி, நன்கொடையாளர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து வந்தது. “கை அல்லது கால் இழந்த மாற்றுத்திறனாளிகள் கண்ணியத்துடன் வாழவும் வாழ்வாதாரத்தைத் திரும்பப் பெற்றுச் சம்பாதிக்கத் தொடங்க உதவும்'' என்கிறார் திட்டத்தலைவர் சலீல் பாலி. இத்துறையில் 40 ஆண்டுகள் அனுபவம் பெற்ற செயற்கை உடல் உறுப்புகள் வல்லுனர் Rtn Dr V J S வோஹ்ரா இதற்கான தொழில்நுட்பக் குழுவுக்குத் தலைமை தாங்குகிறார்.

தொடக்கத்தில், ஆட்டோ ஓட்டுநர்கள், பாதுகாப்புப் பணியாளர்கள், வீட்டு வேலைக்காரர்கள் போன்ற பணிகளில் இருந்த, கை, கால் அகற்றப்பட்ட 10 பேருக்குச் செயற்கைக் கை, கால்கள் பொருத்தப்பட்டன. “இதன் வெற்றியைத் தொடர்ந்து, நாங்கள் இந்தத் திட்டத்தை மாவட்டம் முழுவதும் கொண்டுசென்றோம், 100ல் 55 சங்கங்கள் இதில் பங்கேற்றன.■

# அசன்சோலில் ரயில் பெட்டி உணவகம்

**G சிங்**

ரயில்களில் பயணிக்கும் பெரும்பாலான பயணிகளுக்கு கேட்டரிங் சேவைகள் வழங்கும் உணவின் தரம் பற்றிய இனிமையான அனுபவம் இருப்பதில்லை. அந்த உணவு பெரும்பாலும் சுவையாக இருக்காது மற்றும் அதை வாங்கு வதற்கு செலவழித்த பணத்தை ஈடுசெய்யாது.

### உணவகங்களாக மாறிய பழைய பெட்டிகள்

மேற்கு வங்க ரயில்வேயின் அசன்சோல் பிரிவு, இரண்டு பழைய ரயில் பெட்டிகளை Restaurant on Wheels என்று பெயரிட பட்டு இரண்டு உணவகங்களாக மாற்றியுள்ளது. இந்திய ரயில் வேயின் புகழ்பெற்ற சகாப்தத்தை நினைவூட்டும் வகையில் முன்புறத்தில் நீராவி இயந்திரத்தைக் கொண்டுள்ளன. பழைய ரயில் பெட்டிகள் உணவகங்களாக புதுப்பிக்கப்பட்ட இந்தியாவின் முதல் வகை உணவகம், ரெஸ்டாரன்ட் ஆன் வீல்ஸ் என்று ரயில்வே கூறுகிறது.

கொல்கத்தாவில் இருந்து சுமார் 210 கிமீ தொலைவில் அசன்சோல் ரயில் நிலையத்திற்கு வெளியே அமைந்துள்ள இந்த உணவகங்களை 2020 பிப்ரவரியில் அப்போதைய உள்ளூர் பாஜக எம்பியான பாபுல் சுப்ரியோ திறந்து வைத்தார்.

### சைவ மற்றும் அசைவ உணவுகள்

இரண்டு உணவகங்கள் - சாய் சுன் மற்றும் வாவ்! போஜன் - இரண்டு ரயில் பெட்டிகளிலும் முறையே சைவ மற்றும் அசைவ உணவுகள் வழங்கப்படுகின்றன. சாய் சுன் பல்வேறு தின்பண்டங்கள் மற்றும் உயர் வகை டார்ஜிலிங் தேநீர் உட்பட பல்வேறு வகையான தேநீர்களை வழங்குகிறது, வாவ்! போஜன் மதிய மற்றும் இரவு உணவிற்கு அசைவ உணவுகளை வழங்குகிறது.

“எங்களிடம் 55–60 பேர் அமரக்கூடிய வசதி உள்ளது, எங்கள் சமையலறையில் 300க்கும்மேற்பட்ட உணவுப் பொருட்களை, பெரும்பாலும் அசைவங்களை, எங்கள் மூன்று சமையல்காரர்களை கொண்டு சமைக்கின்றோம். பயணிகளைத் தவிர, அண்டைப் பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் ரயில்வே பெட்டியின் உள்ளே உணவருந்தும் அனுபவத்தை பெற இங்கு வருகின்றனர். உணவகங்கள் புகைப்படம் எடுப்பதற்கான சிறந்த இடங்களாகவும் உள்ளன, என்று ஃபர்ஹான் அன்சாரி என்ற ஊழியர் கூறினார்.

### மகிழ்ச்சியான வாடிக்கையாளர்கள்

வாடிக்கையாளர்களும் உணவகங் களைப் பற்றி நல்ல விமர்சனங்களை கூறுகின்றனர். நான் யூடியூப் வீடியோவைப் பார்த்துவிட்டு இங்கு வந்தேன். உட்புறங்கள் அழகாகச் வடிவமைக்கப்பட்டுள்ளன, மேலும் உணவு சுவையாகவும் மலிவு விலையிலும் உள்ளது. மேலும் பெரிய ரயில் நிலையங்களுக்கு வெளியே இது போன்ற கூடுதல் இணைப்புகள் திறக்கப்பட வேண்டும், ஏனெனில் அவை தொலைதூர பகுதிகளில் இருந்து பயணிக்கும் மக்களுக்கு தனித்துவமான உணவருந்தும் அனுபவத்தைத் தரும், என்று கொல்கத்தாவில் இருந்து வந்திருந்த மென்பொருள் பொறியாளர் அஜய் மித்ரா, கூறினார்.

மூலோபாயமான இடம் என்பதால், கடந்து செல்லும் ரயில்களுக்கு உணவு வழங்கலாம் என்றும் வாடிக்கையாளர்கள் பரிந்துரைக்கின்றனர். ரயில் நிலையத்திற்கு வெளியே உள்ள தங்கள் சொந்த நிலத்தில் இரயில்வே உணவகங்களை உருவாக்கியுள்ளது. ரயில் அந்த நிலையத்தை அடைந்தவுடன் உணவுப் பொருட்களை டெலிவரி செய்யும் வகையில், உணவுக்கான






ஆன்லைன் முன்பதிவை ரயில்வே ஊக்குவிக்க வேண்டும். இது அரசாங்கத்திற்கு வருவாயைச் சேர்ப்பது மட்டு மல்லாமல் உள்ளூர் மக்களுக்கு அதிக வாழ்வாதார வாய்ப்புகளையும் உருவாக்கும்.

**தொற்றுநோய் சவால்**

கோவிட் தொற்றுநோய் கட்டுப்பாடுகள் காரணமாக உணவகங்கள் திறக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து மூடப்படுவதை எதிர்கொண்டன.

இரண்டு உணவகங்களின் ஊழியர்களும் தொற்றுநோய்க்கு முன்னர் உணவகங்கள் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றதாக தெரிவித்தனர் “எங்களிடம் மக்கள் நீண்ட வரிசையில் மேஜையைப் பெற காத்திருந்தனர். கூட்டத்தை தவிர்க்க முன்பதிவு செய்யும்படி அவர்களிடம் கேட்க வேண்டியிருந்தது என்று வாவ்! போஜனின் சமையல்காரர் குமார் தாப்பா கூறினார். “தொடர் சமூக ஊடக பிரச்சாரம் உணவகங்களை பிரபலமாக்கும் என்றார் ஃபர்ஹான்.■

---

TRF உதவியுடன் நற்பணி

# முஜாஃபர் நகரில் டயாலிசிஸ் மையம்

**ரோட்டரி செய்திக் குழு**



*RIDE அனிருதா ராய் சௌத்ரி டயாலிசிஸ் மையத்தை DG தினேஷ் குமார் சர்மா மற்றும் PDG மனீஷ் சார்தா முன்னிலையில் துவக்கி வைக்கிறார்.*

RC முஜாஃபர்நகர் மிட்டவுன், RID 3100, முஜாஃபர்நகர் மருத்துவக் கல்லூரியில் ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக 3 டயாலிசிஸ் இயந்திரங்களை நிறுவியது. ரூ.20.32 லட்சம் செலவில் நடைபெற்ற இந்தத் திட்டத்தின் பன்னாட்டுக் கூட்டாளர் RC சிங்கப்பூர் ஹார்ட்லாண்ட்ஸ். இந்தத் திட்டத்துக்கு 12 இந்திய ரோட்டரி மாவட்டங்களின் உதவின.

DG தினேஷ் குமார் சர்மா, PDG மனீஷ் ஷர்தா, AG சித்தார்த் சிங்கல் முன்னிலையில் RIDE அனிருதா ராய் சௌத்ரி இந்த மையத்தைத் தொடங்கிவைத்தார்.■

# பிறந்த குழந்தைக்கான பிரிவு, RC திருச்செங்கோட்டின் பெருமை

V முத்துகுமரன்

RC திருச்செங்கோடு, RID 2982ல் உள்ள ரோட்டேரியன்களின் குறிக்கோள், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளைக் காப்பாற்றுவது மட்டுமல்ல, அவர்களின் வழிகாட்டும் மந்திரமாகும். திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் புதிதாகப் பிறந்த குழந்தை வார்டில் நடைபெற்று வரும் இந்த மாபெரும் திட்டம், ரோட்டரியின் மையப்பகுதிகளில் ஒன்றான மகப்பேறு மற்றும் குழந்தை பராமரிப்பை வழங்குகிறது, இதனால் ஒரு மாதத்தில் குறைந்தது 100 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 60–70 பிறந்த குழந்தைகளும் பயனடைகின்றன.

ஆபத்தான பிரச்சனைகள் உள்ள குழந்தைகளின் தாய்மார்கள், தமிழகத்தின் மேற்குப் பகுதியான ஈரோடு, சேலம், நாமக்கல், சங்ககிரி மற்றும் மேட்டூர் ஆகிய இடங்களில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் இருந்து திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்படுகின்றனர். “ரோட்டரி பல ஆண்டுகளாக உலகளாவிய மானியங்கள் மூலம் பிறந்த குழந்தை வார்டில் உயர் தொழில்நுட்ப நோயறிதல் வசதிகளை நிறுவியதால், அருகிலுள்ள நகரங்களில் உள்ள PHCகள் சில கர்ப்பிணிப் பெண்களை பாதுகாப்பான பிரசவத்திற்காக இந்த மருத்துவமனைக்கு அனுப்புகின்றனர்” என்று திட்டத் தலைவர் PDG T சண்முகசுந்தரம் கூறுகிறார்.

2008–09ம் ஆண்டில், சங்கம் ரூ.4 லட்சம் திட்ட மதிப்பீட்டில் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தை வார்டை அமைத்தது. “நாங்கள் இந்த மகப்பேறு வார்டை ஒரு வரையறுக்கப்பட்ட வசதி மற்றும் உபகரணங்களுடன் தொடங்கினோம். ஆனால் பிறந்த குழந்தை பராமரிப்புக் கான தேவை அதிகரித்துள்ள



*அரசு மருத்துவமனையில் க்ரிட்டிகூல் உபகரணம் மூலம் சிகிச்சை பெறும் ஒரு குழந்தை.*

நிலையில், 2020ம் ஆண்டில் ரூ.80 லட்சம் மதிப்புள்ள இரண்டு உலகளாவிய மானியங்களுடன் அதை மேம்படுத்தியுள்ளோம், என்று அவர் நினைவு கூர்ந்தார். RC சாவ் பாவ்லோ சூல், பிரேசில், RID 4420, RID 6060 இருந்து இரண்டு US சங்கங்கள் மற்றும் ஆஸ்திரேலியாவின் RID 9570 ஆகியவை உலகளாவிய பங்குதாரர்களாக இருந்தன. பல உயர் தொழில்நுட்ப சாதனங்களை நிறுவி பிறந்த குழந்தை வார்டில் அதன் மருத்துவ சேவைகளை மேம்படுத்தியுள்ளது.

### உயிர் காக்கும் சாதனம்

உபகரணங்களில் ஒன்றான க்ரிட்டிகூல் (ரூ.20 லட்சம்) புதிதாகப் பிறந்த குழந்தையின் வெப்பநிலையை சுமார் 36.5 டிகிரி செல்சியஸ் இருந்து 32–33 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக 72 மணி நேரச் செயல்முறையின் மூலம் குறைக்க பிரத்யேக போர்வைகளால் மூடுகிறது. “பின்னர் வெப்பநிலை 12 மணிநேர செயல்முறையில் படிப்படியாக உயர்த்தப்படுகிறது, இதனால் குழந்தையின் மூளை மற்றும் பிற உறுப்புகளுக்கு இரத்தம் சாதாரணமாக பாய்கிறது” என்று சண்முகசுந்தரம் விளக்குகிறார். “இந்த அதி-தொழில்நுட்ப சாதனம் வேறு எந்த மாவட்ட தலைமையகம் அல்லது மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் கிடைக்காது, ஆனால் சென்னை எழும்பூரில் உள்ள இன்ஸ்டிடியூட் ஆப் சைல்டு ஹெல்த் நிறுவனத்தில் மட்டுமே உள்ளது.” கடந்த இரண்டு ஆண்டுகளில், க்ரிட்டிகூல் 12 குறைந்த எடை, இரத்த சோகை கொண்ட குழந்தைகளை காப்பாற்றியது மற்றும் 1,500க்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் 5,000 தாய்மார்கள் மகப்பேறு பிரிவில் மேம்

படுத்தப்பட்ட பிறந்த குழந்தை பிரிவு மூலம் பயனடைந்துள்ளனர் என்று சங்கத்தலைவர் K ரமேஷ் கூறுகிறார்.

"GHல் ரூ.1.5 கோடி மதிப்பிலான திட்டங்களை நாங்கள் செய்துள்ளோம்," என்கிறார். 45 ஆண்டு பழமையான சங்கம் RO பிளாண்ட்கள், ஆக்ஸிஜன் சிலிண்டர்கள், இரத்த வங்கி, தாய்ப்பால் வங்கி மற்றும் பிரசவ வார்டு ஆகியவற்றை நிறுவியுள்ளது. கோவிட் தொற்று நோய்களின் போது, நாங்கள் மருத்துவமனையில் ரூ.15 லட்சம் மதிப்பிலான திட்டங்களைச் செய்துள்ளோம். சமீபத்தில், மருத்துவர்கள் உயிரி கழிவுகளை எரிக்கும் கருவியைக் கேட்டுள்ளனர், அது விரைவில் நன்கொடையாக வழங்கப்படும் என்றார் அவர்.■



**இடமிருந்து:** CMO Dr *தேன்மொழி, சுகாதார சேவைகள் இணை இயக்குனர்* Dr *சாந்தி, முன்னாள் மாவட்ட ஆட்சியர்* K *மேகராஜ், முன்னாள் தமிழக அமைச்சர்* P *தங்கமணி,* PDG T *சண்முகசுந்தரம் மற்றும்* Dr *ப்ரகாஷ்.*

# தூத்துக்குடியில் குழந்தைகள் இதயப் பரிசோதனை முகாம்

## ரோட்டரி செய்திக் குழு

RC ஸ்பிக் நகர், RID 3212, ஐந்து ஆண்டுகளாகத் 'தங்க இதயம்' என்று அழைக்கப்படும் குழந்தைகள் இதயப் பரிசோதனை முகாம்களை நடத்திவருகிறது. 2020ல் மட்டும் கோவிட் நோய்ப்பரவலால் இது நடைபெறவில்லை. இந்த ஆண்டு, இந்தச் சங்கத்தின் பொன்விழாவைக் கொண்டாடும் வகையில் இந்த முகாம் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்றது. இது SPIC, கிரீன்ஸ்டார் உரங்கள், சென்னை அப்போலோ குழந்தைகள் மருத்துவமனையுடன் இணைந்து, தூத்துக்குடியில் உள்ள ஸ்பிக் நகர் மருத்துவ மையத்தில் நடைபெற்றது. அப்போலோ சென்னையைச் சேர்ந்த தலைமை கார்டியோதொராசிக், வாஸ்குலார் அறுவைச் சிகிச்சை வல்லுனர் டாக்டர் நெவில்லெ A G சாலமன், 12 மருத்துவர்கள், துணை மருத்துவ ஊழியர்கள் இளம் நோயாளிகளைப் பரிசோதித்தார்கள்.

முகாமுக்கு முன்பாக, இந்த நகரிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் உள்ள PHCகள், 20 பள்ளிகளில் சங்க உறுப்பினர்கள் தலைவர் S அருண்ஜெயக்குமார் தலைமையில் இந்த முகாமைப்பற்றிப் பேசினார்கள். "நாங்கள் PHCக்களில் உள்ள மருத்துவர்கள், பள்ளி மேலாண்மைக் குழுவுடன் பேசி, இதய நோயுடன் தொடர்புடைய பிற அறிகுறிகளைக் கொண்ட குழந்தைகளை அடையாளம் கண்டோம்" என்கிறார் இவர். AM இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் நிறுவனர்/தலைவர் அஷ்வின் C முத்தையா தொடங்கி வைத்த முகாமில் PDG H ஷாஜஹான், A G ராதா கிருஷ்ணன் பங்கேற்றார்கள்.



*மருத்துவமுகாமில்* PDG H *ஷாஜஹான் (வலது) மற்றும்* RC *ஸ்பிக் நகர் உறுப்பினர்கள்.*

90 குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டார்கள், இதயப் பிரச்சனைகளைக் கொண்ட 11 குழந்தைகளும் அவர்களுடைய பெற்றோரும் அறுவைச் சிகிச்சைக்குச் சென்னை அப்போலோ மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டார்கள். அனைத்து மருத்துவச் செலவுக்கும் AM அறக்கட்டளை, SPIC, கிரீன் ஸ்டார் உரங்கள் நிதியளித்தன.

நல முகாமின் ஒரு பகுதியாக, ஸ்பிக் நகர் அரிமா சங்கத்துடன் இணைந்து பெரியவர்களுக்கான ரத்த தானம் மற்றும் மருத்துவ முகாமும் நடைபெற்றது.■

# இளவயதில் சுற்றுச்சூழலுக்கு நண்பராவோம்

ப்ரீதி மேஹரா

*உங்கள் குழந்தைக்கு இயற்கையை மதிக்கக் கற்றுக்கொடுங்கள்.*

குழந்தைக்கு நல்ல சிந்தனைகளைக் கற்றுத்தருவது வீட்டில் தொடங்குகிறது என்பது மிகச் சரி. ஒரு வீடுமுழுக்கச் சுற்றுச்சூழலுக்கு இதமான அமைப்புகள் இருந்தால், அங்கு வளரும் குழந்தைகள் சிறுவயதிலிருந்தே தூய்மையான, பசுமையான வாழ்க்கைமுறையை ஏற்றுக்கொள்ளக் கற்றுக் கொள்வார்கள்.

தந்தை, தாய் இருவரும் பரபரப்பாக வேலை செய்துகொண்டிருக்கிற வீடுகளில் இது அத்தனை எளிதில்லை என்பது புரிகிறது. அவர்கள் அவ்வப்போது தங்களுடைய குழந்தைகளைப் பூங்காவுக்குப் பதிலாக ஒரு வணிக வளாகத்துக்கு அழைத்துச் செல்வது இயல்புதான். மாறாக, அவர்கள் தங்கள் குழந்தைகளை ஒரு நீச்சல் குளத்துக்கு அழைத்துச்செல்லலாம். அதன் மூலம் வெய்யிலும் குறையும், அவர்களுடைய குழந்தை சுற்றுச்சூழலுக்கு இதமான ஒரு வாழ்நாள் திறமையைக் கற்றுக்கொள்வார்.

நீங்கள் வீட்டில் செடிகளை வளர்க்கலாம், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மண்ணைக் கிளறிவிடும் பணியில் குழந்தைகளை ஈடுபடுத்தலாம், செடிகள் எப்படி வளர்கின்றன என்று அவர்களுக்கு விளக்கலாம். குழந்தைகளின் பிறந்தநாளின் போது நீங்கள் ஒரு மரத்தை நடலாம், பிறந்தநாள் கொண்டாட்டத்துடன் மரம் நடும் விழாவையும் சேர்த்து அதற்கு உறவினர்கள், நண்பர்களை அழைக்கலாம். அதன் பிறகு, ஆண்டு முழுவதும், அடுத்தடுத்த ஆண்டுகளிலும் அந்த மரக்கன்றுகள் வளர்வதை நீங்கள் பார்க்கலாம், உங்கள் குழந்தையின் மனத்தில் மரங்களின் முக்கியத்துவம், நம் வாழ்க்கையில் அவற்றின் முக்கியப் பங்கு ஆகியவற்றை உணர்த்தலாம்.

சுருக்கமாகச் சொல்வதென்றால், உங்கள் குழந்தைக்குத் திறந்தவெளி இடங்களை இயன்றவரை அறிமுகப்படுத்துங்கள்: பூங்கா, கடல், மலை, காடு... வானத்தின் விரிவை, பூமியில் உள்ள பெருங்கடல்களை, கண்டங்களை, புவிப் பகுதிகளை அவர்கள் அறிந்துகொள்ளட்டும். சனி, ஞாயிறுகளில் நீங்கள் நகரிலிருந்து வெளியில் சென்று இயற்கையான ஓர் இடத்தில் நேரம் செலவிடலாம். இது ஒரு நல்ல மாற்றமாகவும் இருக்கும், கிராமப்புறச் சூழல்களைப்பற்றி நன்கு தெரிந்துகொள்கிற வாய்ப்பும் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கும்.

பறவைகளைப் பார்வையிடும் பயணங்கள், விலங்குக் காப்பகங்களுக்கு, உயிரியல் பன்முகத் தன்மைப் பூங்காக்களுக்குச் சென்றுவருதல் ஆகியவை தகவல்களையும் கொடுக்கும், அறிவையும் பெருக்கும். வீட்டில் மீன் வளர்ப்பது அல்லது ஒரு செல்ல விலங்கைத் தத்தெடுத்து வளர்ப்பது ஆகியவை முழுமையான கற்றல் சூழலை வழங்கலாம்.

அவர்களுக்கு மிக இளம் வயதிலிருந்து சுற்றுச்சூழலுக்கு இதமான மதிப்பீடுகளைக் கற்றுத்தந்தால், அவர்கள் இன்னும் மேம்பட்ட குடிமக்களாக வளர்வார்கள். பல் தேய்க்கும் போது குழாயை மூடித் தண்ணீர் சேமிப்பது, அல்லது, பயன்படாத குழாய்கள் அல்லது ஷவரை மூடுவது போன்ற பாடங்களை அவர்கள் கற்றுக்கொண்டால்,



பின்னர் வாழ்க்கை முழுக்கக் கிட்டத்தட்ட அனிச்சை செயல்களைப் போல் அவர்கள் இதைச் செய்வார்கள்.

இன்னொரு முக்கியப் பழக்கம், குப்பைகளை வகை பிரிப்பது. ஒவ்வொரு வீட்டிலும் குழந்தைகளுக்கு மிக இளம் வயதிலிருந்து இதைக் கற்றுத்தரவேண்டும். வண்ண மயமான இரண்டு தொட்டிகளை வாங்கிவாருங்கள். அவற்றைக் குழந்தையிடம் கொடுங்கள். அவற்றின்மீது “உலர் குப்பை”, “ஈரக் குப்பை” என்று எழுதச் சொல்லுங்கள். தாள், அட்டை போன்றவை உலர் குப்பைத் தொட்டிக்குள் செல்லும் என்று குழந்தைக்குச் சொல்லிக்கொடுங்கள். அவர் ஒரு வாழைப்பழத்தை உண்கிறார் என்றால், தோல் ஈரக்குப்பைத் தொட்டிக்குள் செல்லும் என்று கற்றுக்கொடுங்கள்.

இத்துடன், நீங்கள் உங்கள் குழந்தைகளுடைய உடைகளுக்கு இயற்கைப் பருத்தியைத் தேர்ந்தெடுத்தது ஏன், நீங்கள் வெளியில் பயணம் செல்லும் போது பிளாஸ்டிக் கோப்பைகள், தட்டுகளைப் பயன்படுத்தாமல் இருப்பது ஏன், நீங்கள் வீட்டில் இயற்கை அலங்கரிப்புகள், இயற்கைத் தூய்மைப்படுத் திகளைப் பயன்படுத்துவது ஏன் என்றெல்லாம் குழந்தைக்கு விளக்கலாம்.

பெரியவர்களுடைய செயல்களைக் கவனித்துதான் குழந்தைகள் வளர்கிறார்கள். அதனால், குழந்தை களை வளர்க்கிற பெரியவர்கள் எல்லாரும் அடிப்படையான பசுமை விதிமுறைகளைப் பின்பற்றுவது முக்கியம். வீட்டிலிருக்கும் பெரியவர்கள் குப்பைகளைக் குப்பைத் தொட்டிக்கு வெளியில் எறிந்தால், காரின் சாளரத்தைத் திறந்து குப்பைகளைச் சாலையில் வீசினால், குழந்தையும் அவர்களைப் பின்பற்றக் கூடும்.

நாம் இயற்கையை மதிக்க வேண்டும், இல்லாவிட்டால் அதன் சீற்றத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

*எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.*

---

Rotary PEOPLE OF ACTION

# புதிய வளாகத்தில் ரோட்டரி ரத்த வங்கி

### ரோட்டரி செய்திக் குழு



**இடமிருந்து:** *ரத்த வங்கி மேலாண்மை அறங்காவலர் ஷர்மிளா ஜெயின், AG சைலேஷ் குமிடெளி, G S S பிரகாஷ், RC ஹைதராபாத் டெக்கன் தலைவர் வன்டித் ரெட்டி, DGN ஷரத் சௌத்ரி, ஜோய் மருத்துவமனை தலைவர் Dr ரமேஷ், DG ராஜசேகர் ரெட்டி மற்றும் அவர் மனைவி உமா தேவி.*

RC ஹைதராபாத் டெக்கான், RID 3150 அமீர்பெட்டில் உள்ள சல்லா மருந்தக வளாகத்தில் நடத்தி வந்த ரோட்டரி சல்லா ரத்த வங்கி அந்நகரத்தில் உள்ள சோமாஜிகுடாவில் இருக்கும் ஜோய் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. இதன் மூலம் நோயாளிகள், கொடையாளர்கள் ரத்த வங்கியை அணுகலாம்.


நலிந்த பின்னணியிலிருந்து வரும் நோயாளிகளுக்கு ரத்தம், அதன் பகுதிகளை இலவசமாக அல்லது மானிய விலையில் வழங்கும் இந்த ரத்த வங்கியில் பகுதிகளைப் பிரிக்கும் அனைத்து நவீன வசதிகளும் உள்ளன, இங்கு எல்லா வசதிகளுடன் ரத்த தான வேன் ஒன்றும் உள்ளது. கடந்த பல ஆண்டுகளாக இச்சங்கம் இந்த ரத்த வங்கியில் ரூ.2 கோடி முதலீடு செய்துள்ளது. இந்தத் தொகை $99,000 அளவுள்ள ஒரு பன்னாட்டு நல்கையிலிருந்தும் சங்கத்தின் சேவைக்கணக்கின் வழியாகவும் திரட்டப்பட்டது.

10 ஆண்டுகளாக இயங்கி வரும் மையம் 15,000க்கும் மேற்பட்ட யூனிட்கள் ரத்தத்தைத் திரட்டியுள்ளது. ரத்த வங்கியின் புதிய வளாகத்தை அதன் தலைவர் DGN சரத் சௌத்ரி, மேலாண்மை அறங்காவலர் ஷர்மிளா ஜெயின், சங்கத் தலைவர் வன்டித் ரெட்டி, முன்னாள் தலைவர் விஸ்வநாத், AG சைலேஷ் குமிடெளி உள்ளிட்டோர் முன்னிலையில் DG ராஜசேகர் ரெட்டி டல்லா திறந்து வைத்தார்.■

# வெள்ளை காண்டாமிருகங்களும் கருப்பு மாம்பாக்களும்

**நிக் டால்**

*ஆப்பிரிக்காவில் வனவிலங்குகளுக்கு எதிரான குற்றங்களை முற்றிலும் பெண்களால் ஆன வேட்டையாடுதல் தடுப்புப் பிரிவால் தடுக்க முடியுமா - அதுவும் துப்பாக்கிகள் இல்லாமல்.*



*ப்ளாக் மாம்பாஸ் வேட்டை தடுப்பு உறுப்பினர்கள் ஜுடி மாலாட்ஜி, நலேடி மாலுங்கனே மற்றும் சாகனே நக்சுமாலோ.*

பச்சை நிற பேக்கி உருமறைப்பு சீருடை மற்றும் கருப்பு பூட்ஸ் அணிந்து, 26 வயதான சாகனே நக்சுமாலோ மற்றும் அவரது கூட்டாளி 21 வயதான நலேடி மாலுங்கனே, இருவரும் 7 அடி உயரம், 100 மைல் நீளம் கொண்ட யானை-தடுப்பு மின்சார வேலியை ஒட்டி நடந்து செல்கின்றனர். ஊதா நிற பாட் கொத்து-இலை மரங்களின் சக்திவாய்ந்த, தேன் போன்ற வாசனையானது ஈரப்பதம் கொண்ட கோடைக் காற்றில் வீச, ஒரு மஞ்சள் நிற ஹார்ன்பில் பறவை பறந்து வந்து ஒரு பட்டுப்போன லெட்வுட் மரத்தின் கிளையில் அமர்ந்தது. நக்சுமாலோ மற்றும் மாலுங்கனே ஆகியோர் பிளாக் மாம்பாஸ் வேட்டை தடுப்புப் பிரிவின் உறுப்பினர்கள். இப்பகுதியை பூர்வீகமாகக் கொண்ட நீளமான, வேகமான மற்றும் அதிக விஷம் கொண்ட ஒரு பாம்பின் பெயரிடப்பட்ட மாம்பாக்கள், இஸ்ரேல் நாட்டின் நிலப்பரப்பின் அளவிற்கு சமமான தென்னாப்பிரிக்க வனப்பகுதியான கிரேட்டர் க்ரூகர் தேசிய பூங்காவிற்குள் உள்ள பலுலே இயற்கை சரணாலயத்தில் விலங்குகளைப் பாதுகாக்க போராடி வருகின்றனர்.

நக்சுமாலோ மற்றும் மாலுங்கனே, இருவரும் குழுவின் தலைமையகத்திற்கு அருகில் வளர்ந்தவர்கள், ஆனால் மாம்பாக்கள் ஆன பிறகே ஒருவரையொருவர் சந்தித்தனர். தங்கள் 21-நாள் ஷிப்டில் ஒவ்வொரு நாளும், வேலியில் மீறல்கள் உள்ளதா என்று பார்க்கிறார்கள். இதை தொடர்ந்து காட்டுப்பன்னி மற்றும் சிறுத்தை போன்ற விலங்குகள் வழிக்காக தோண்டிய பள்ளங்களை கற்களை கொண்டு அடைப்பார்கள். ஆனால் அவ்வப்போது மனிதர்களால் வெட்ட பட்ட வேலியையும் காண்கின்றனர். அது மாமிசத்திற்காக விலங்குகளை வேட்டையாடுவதற்காகவும், கொம்பு களுக்காக காண்டாமிருகங்களை வேட்டையாடுவதற்கும் வெட்டப் பட்டது.

2013ல், முதல் மாம்பாக்கள் வனப்பகுதியில் ரோந்து செல்லத் தொடங்கிய போது, காண்டாமிருக வேட்டையாடுதல் பிரச்சனையின்

ஒரு பகுதி மட்டுமே என்பதை உணர்ந்தனர். பூங்கா ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான விலங்கு களை பொறிகளுக்கு இழக்கிறது. "இது எங்களுக்கு சங்கடமாக இருந்தது,'' என்று 48 வயதான கிரேக் ஸ்பென்சர் நினைவு கூர்ந்தார், அவர் ஒரு புஷ்வெல்ட் ப்ராய் (பார்பிக்யூ) அருகே அமர்ந்து பேச அருகில் ஹைனாக்களின் ஓலம் கேட்கிறது. தென்னாப்பிரிக்காவில் புகழ்பெற்ற பாதுகாப்பு ஆர்வலரான அவர் பலுலே என்ற தனியார் விலங்கு பாதுகாப்பு சரணாலயத்தின் தலைமை காவலராக பதவி வகித்தவர்.


ஆப்பிரிக்காவில் வெள்ளை காண்டா மிருகங்கள் அழிவின் விளிம்பிற்கு வேட்டையாடப் படுகின்றன. கண்டத்தில் மீதமுள்ள 18,000 வெள்ளை காண்டாமிருகங்களில், கிட்டத்தட்ட 90 சதவீதம் தென்னாப்பிரிக்காவில் உள்ளன, இவையே அந்த இனத்தின் கடைசி நம்பிக்கையாகும். உலகிலே வெள்ளை காண்டாமிருக மக்கள் தொகை அதிகம் கொண்டது க்ரூகர் பூங்கா மற்றும் உலகில் மீதமுள்ள 5,600 கருப்பு காண்டாமிருகங்களில் சுமார் 300 அங்கே வாழ்கின்றது.

பாரம்பரிய மருத்துவமாகவும், வாழ்நிலை சின்னமாகவும் பயன் படுத்தப்படும் காண்டாமிருகக் கொம்பிற்கு சில நாடுகளில் மதிப்பு அதிகம். வனவிலங்கு நீதி ஆணையத்தின் படி, ஆப்பிரிக்காவில் ஒரு கொம்பு சராசரியாக ஒரு பவுண்டுக்கு $4,000 மற்றும் ஆசியாவில் ஒரு பவுண்டுக்கு $8,000 வரை விலைப்போகிறது. வெள்ளை காண்டாமிருகத்தின் இரண்டு கொம்புகள் பொதுவாக 11 பவுண்டுகள் எடையுள்ளதாக இருக்கும், இதன் மதிப்பு $44,000 முதல் $88,000. தென்னாப்பிரிக்காவின் தனிநபர் வருமானம் ஆண்டுக்கு $5,000 மற்றும் கோவிட்-19க்கு முந்தைய வேலையின்மை விகிதம் 29 சதவீதமாக இருந்தது. எனவே, துரதிர்ஷ்டவசமாக, காண்டாமிருகம் ஒரு கவர்ச்சியான இலக்கு. 2017ம் ஆண்டில், கிரேட்டர் க்ரூகர் தேசிய பூங்காவில் வேட்டையாடுபவர்கள் 500க்கும் மேற்பட்ட காண்டாமிருகங் களைக் கொன்றனர், இதில் 17 பலுலேவில் அடங்கும்.

விலங்குகளைக் குறிக்கும் பழைய வேட்டைச் சொல்லான "பிக் ஃபைவ்'' என்று அழைக்கப்படும் சிங்கங்கள், சிறுத்தைகள், யானைகள், எருமைகள் மற்றும் காண்டாமிருகங்கள், ஆப்பிரிக்காவில் அதிகம் பேணப் படும் ஐந்து விலங்குகள் ஆகும். அவற்றில் ஒன்றை இழப்பது சுற்றுலா விற்கும், வனவிலங்கு பாது காப்பிற்கும் பேரிழப்பை ஏற்படுத்தும் என்று அவர் சுட்டிக்காட்டுகிறார். காண்டாமிருகங்கள், யானைகளுடன் சேர்ந்து, மற்ற உயிரினங்களுக்கு பயனளிக்கும் வகையில் நிலப் பரப்பை வடிவமைக்கும் முக்கிய மெகா-ஹெர்பிவோர்களாகும். எந்த ஒரு சுற்றுச்சூழல் அமைப்பிலும் உள்ள பெரிய விலங்குகளின் அழிவு மற்ற இனங்களின் அழிவிற்கு அறிகுறியாகும். "கீஸ்டோன் இனங்கள் அழிந்து போவதை நம்மால் தடுக்க முடியாவிட்டால், மற்ற உயிரினங்களும் அழிந்துவிடும்'' என்று டாம் டோக்டர்மேன் கூறுகிறார்.

இந்த இயற்கை சரணாலயத்திற்கு தீவிர ஆதரவாளராக இருந்துள்ள, 60 வயதான டோக்டெர்மேன் 2009ல் தென்னாப்பிரிக்காவில் தனது முதல் புகைப்பட சஃபாரியில் சென்றபோது, அவருக்கு "ஆஹா!'' தருணம் ஒன்று ஏற்பட்டது. ஓய்வுபெற்ற ரியல் எஸ்டேட் டெவலப்பர் மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் செலன், வாஷிங்டனின் உறுப்பினரான அவர் ரைனோ மெர்சி என்ற காண்டாமிருக வேட்டையை எதிர்த்துப் போராடும் இலாப நோக்கற்ற நிறுவனத்தை நிறுவினார்.

இயற்கை வளங்களின் நுகர்வு மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு ஆகியவற்றில் அறிவாற்றல் மாறுபாட்டின் தாக்கத்தை ஆராய்ச்சி செய்ததன் மூலம் அவர் முனைவர் பட்டத்தையும் பெற்றவர். கூடுதலாக, டோக்டெர்மேன் அழிந்துவரும் உயிரினங்களுக்கான ரோட்டரி நடவடிக்கை குழுவின் (RAGES)



நிறுவன உறுப்பினராகவும் இருந்துள்ளார், அந்த குழு அனைத்து வகையான ஆபத்தான விலங்குகளின் வாழ்விடங்களையும் வாழ்க்கையையும் மேம்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2010ம் ஆண்டில், டோக்டெர்மேன் ஒரு புதர் முகாமில், முன்னாள் கேம் வார்டன் மற்றும் தற்போதய நெருங்கிய நண்பரும் கூட்டாளி யுமான ஸ்பென்சருடன் ஒரு கேம்ப்ஃபயர் சுற்றி அமர்ந்திருந்தார். இருவரும் ரம்--கோக் குடித்து, இரவு நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது உருவான தீப்பொறியே மாம்பக்கள். "ஆப்பிரிக்கா முழுவதும் வேட்டையாடுதலுக்கான பதில், அதிக துப்பாக்கிகளுடன் அதிகமான ஆண்களைக் கொண்டுவருவதாகும்'' என்று டோக்டர்மேன் கூறுகிறார்.

பாரம்பரிய விவசாயத்தில் பெண்களை சுற்றுச்சூழல் கண்காணிப்பாளர்களாக பணியமர்த்து வதற்கான அரசாங்கத் திட்டத்தைப் பற்றி அறிந்த டோக்டர்மேன் மற்றும் ஸ்பென்சர், அவர்களின் வேலை குறிப்பை நீட்டித்து "கேம் ரேஞ்சர்'' என்று வேலையும் அதில் சேர்க்க நினைத்தனர். ஆனால்

தென்னாப்பிரிக்க தேசிய பூங்காவின் மூத்த நிர்வாகம் சிங்கங்கள், சிறுத்தைகள், காண்டாமிருகங்கள், யானைகள் மற்றும் எருமைகள் சுதந்திரமாக சுற்றித் திரியும் பகுதிகளில் நிராயுதபாணிகளாக பெண்களை நிறுத்தும் திட்டத்தை பற்றி கேள்வி எழுப்பியது. இப்படி ஒரு முட்டாள்தனமான யோச னையை அமெரிக்காவில் இருந்து மட்டுமே வந்திருக்க முடியும்'' என்று டோக்டர்மேனிடம் பலமுறை கூறப்பட்டது.

இறுதியாக அவர்களது கோட்பாட்டை செயல்படுத்த ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்ட போது, அரசாங்கத் திட்டத்தில் அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களுக்கு வேலை என்னவாக இருக்கும் என்று கூறப்பட்டது - அவர்கள் அனை வரும் வேலையே ராஜினாமா செய்தனர். எனவே ஸ்பென்சரும் டோக்டெர்மேனும் பூங்காவிற்கு அருகிலுள்ள சமூகங்களுக்குச் சென்று சரியான நபர்களைத் தேட உள்ளூர் தலைவர்களிடம் அனுமதி பெற்றனர். பிளாக் மாம்பாஸ் பெயர் முதல் குழுவால் தேர்ந்தெடுக்கப் பட்டது என்று டோக்டெர்மேன் கூறுகிறார். முன்பு, பெண்களுக்கு வாய்ப்பளிக்கபடாத ஒரு துறையில் நுழைவதற்கான வாய்ப்பை அவர்கள் தீவிரமாக எடுத்துக் கொண்டனர். தாங்கள் வெறும் அலங்கார பொம்மையல்ல என்று உலகிற்கு காட்ட விரும்பினர்.

செய்தி வேகமாக பரவ, சில மாதங்களுக்குள் மாம்பாக்கள் உள்ளூர் பெண்களிடமிருந்து ஒவ்வொரு நாளும் விண்ணப்பங்களைப் பெற்றனர். தொடக்கத்தில் இருந்து, மாம்பாக்களின் அன்றாட செயல்பாடுகள் ஸ்பென்சரின் லாப நோக்கமற்ற நிறுவனமான டிரான்ஸ்ஃபிரண்டியர் ஆப்பிரிக்கா வால் நிர்வகிக்கப்படுகிறது. டோக்டெர்மேன் மாம்பாக்களின் செயல்பாட்டு மையத்தையும், அவர்கள் தங்கள் ஷிப்ட்களின் போது தங்க தனி வளாகத்தையும் கட்டியெழுப்புவதில் அதற்கான நிதித் திரட்டளிலும் முக்கிய பங்கு வகித்தார். அவர் இராணுவ காவல்துறையில் ஆறு ஆண்டுகள் பணிப்புரிந்ததால், ஒரு நபருக்கு கைவிலங்கிடுவது போன்ற திறன்களில் பயிற்சி அளிக்க அவரால் முடிந்தது. டோக்டெர்மேனின் ரைனோ மெர்சி நிறுவனம் மாம்பாக்களின் சர்வதேச நிதி திரட்டும் பிரிவாக செயல்படுகிறது, மேலும் அது அவர்களுக்கு நிதிப் பாதுகாப்பைக் கொண்டு வந்துள்ளது. அரசாங்கம் சமீபத்தில் பெண்களின் அடிப்படை சம்பளத்திற்கு (மாதம் சுமார் $450) நிதியளிப்பதை நிறுத்தியது, இது திட்டத்தின் மொத்த செலவில் ஒரு சிறிய பகுதியே. ஒரு மாம்பாவை வேலைக்கு அமர்த்துவதற்கு வருடத் திற்கு $50,000 வரை செலவாகும் என்று டோக்டெர்மேன் கூறுகிறார்.

2014ல் மாம்பக்களின் இரண்டாவது குழுவின் இருந்த நகடேகோ மிசிம்பா, தனது சொந்த ஊரில் உள்ள பல ஆண்கள் தன் வேலையைப் பற்றி கிண்டல் செய்ததையும், ஒரு ஆணின் உலகமாக அவர்கள் கருதும் இடத்தில் தான் வாழ்வதற்கான வாய்ப்புகளை குறைத்து மதிப்பிட்டதையும் நினைவு கொள்கிறார். அவர்களின் கணிப்பும் கிட்டத்தட்ட நடந் தேறியது. மாம்பாக்களுடன் இருந்த முதல் சில மாதங்களில், அவரும் இரண்டு சக ஊழியர் களும் சிங்கங்களால் துரத்தப்பட மரத்தில் ஏறி தப்பித்தனர். அங்கே கடந்து சென்ற வாகனம் ஒன்று அவர்களை மரத்தில் இருந்து மீட்டது. இப்போது நினைக்கையில் சிங்கங் களின் நடவடிக்கைகளை நன்றாகப் படித்திருந்தால், அச்சூழலை தவிர்த்திருக்கலாம் என்று அவர் கூறுகிறார். தற்போது சார்ஜென்டாக இருக்கும் அவர் விரைவில் ஒரு தொழில்முறை வழிகாட்டியாகத் தகுதி பெறவுள்ளார்.

மிசிம்பா இப்போது ஒவ்வொரு ரோந்திலும் ஒரு மூத்த மாம்பா இருப்பதையும், ஆயுதமேந்திய படை எப்போதும் தயார் நிலையில் இருப்பதையும் உறுதிப்படுத்துகிறார். (மாம்பாக்களின் ஒவ்வொரு அசைவும் ஒரு மைய செயல்பாட்டு அறையில் இருந்து கண்காணிக்கப்படுகிறது.) அவர்களின் முதல் ஆண்டில், மாம்பாக்கள் ஒரு நாளில் 70 பொறி களை கண்டுப்பிடித்தனர். அவர்கள் பல வனவிலங்கு இறைச்சியை வெட்டி, உலர்த்தி, சமையல் செய்த இடங்களை கண்டனர்.



2015ல் ஒரு முழு நிலவில், மாம்பாக்களின் ரோந்து ஒரு துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்ட இடத்திற்கு சென்றது. அங்கே, இவர்களை கண்டதும், ஒரு காண்டாமிருகத்தைக் கொன்ற வேட்டைக்காரர்களின் குழு திடுக்கிட்டு ஓடியது. சிறிது நேரம் தங்கள் வாகனத்தில் துரத்திய பிறகு, மாம்பாக்கள் சம்பவ இடத்திற்குத் திரும்பினர். அங்கே இரண்டு காண்டா மிருகங்கள் இறந்தும், ஒரு காண்டாமிருகம் காயமடைந்தும் இருந்ததை கண்டனர். அவசரகால கால்நடை மருத்துவர்களின் சிறந்த முயற்சிகள் இருந்த போதிலும், மூன்றாவது காண்டாமிருகம் இறந்தது. இந்த கொடூரமான அத்தியாயத்தின் ஒரே சிறிய கருணை வேட்டையர்கள் தங்கள் பரிசைப் பெறாததே.

வேட்டையாடுவதைக் குறைப்பதில் மாம்பாக்கள் பெரும் பங்காற்றுகின்றனர் என்பதை நினைப்பது மிகவும் பெருமையாக இருக்கிறது'' என்று நக்சுமாலோ கூறுகிறார், மேலும் இது ''ஆண்களால் செய்யப்பட வேண்டிய வேலை என்று நினைத்து தான் வளர்ந்ததால் மேலும் சந்தோசம் கூடுகிறது. இன்றுவரை, தென்னாப்பிரிக்காவில் பாதுகாப்புத் துறையில் உள்ள பலர், வேட்டையாடுவதைத் தடுக்கும் அரங்கில் பெண்களுக்கு இடமில்லை என்றும், பிக் ஃபைவ் பகுதிகளில் நிராயுதபாணியாக ரோந்து செல்வது முட்டாள்தனமானது என்றும் கருதுகின்றனர். ''பிக் ஃபைவ் பகுதியில் ஆண்கள் நிராயுதபாணியாக வேலை செய்ய விரும்பமாட்டார்கள்'' என்று நக்சுமாலோ சிரித்துக் கொண்டே கூறுகிறார். ''ஒரு ஆண் தனக்கு துப்பாக்கி தேவை என்பதற்கு பல காரணங்களை கொண்டு வருவார். ஆனால் எங்களுக்கு இந்த வேலையின் முக்கிய செயல் விலங்குகளின் நடவடிக்கையை படிப்பதுதான். இது உண்மையில் துப்பாக்கிகளைப் பற்றியது அல்ல என்பதை நாங்கள் புரிந்துகொண்டோம்.

அவர்களின் சமூக தொடர்புகள் மூலம், தென்னாப்பிரிக்காவில் வனவிலங்கு பாதுகாப்பு இயக்கத்தின் தொடக்கத்திலிருந்து அதனை



பாதித்த போலீஸ்-திருடன் கருத்தை மாற்றவும் மாம்பாக்கள் உதவுகின்றனர். 1898ல் க்ரூகர் தேசிய பூங்காவை உருவாக்க நிலம் ஒதுக்கி வைக்கப்பட்ட சிறிது காலத்தில், சோங்கா இனத்தைச் சேர்ந்த சுமார் 3,000 பேர் அந்த நிலத்திலிருந்து வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டனர். வேலிகள் அமைக்கப்பட்டு, முன்னர் வரைபடங்களில் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட தேசிய எல்லைகள் செயல்படுத்தப்பட்டு, அந்த மக்கள் எப்போதும் வாழ்ந்த நிலத்தில் அத்துமீறி நுழைந்ததற்காகவும் மற்றும் அவர்கள் காலங்காலமாக சாப்பிட்ட விலங்குகளை வேட்டையாடியதற்காகவும் அபராதம் விதிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். நிறவெறி காலத்தின் போது, வேலிகள் மேலும் வலுப்படுத்தப்பட்டு, தண்டனைகள் கடுமையாக்கப்பட்டது.

ரேஞ்சர்களும் வேட்டையாடுபவர்களும் ஒரே சமூகத்தில் இருந்து அல்லது குடும்பங்களில் இருந்து எப்படி வருவார்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கு இந்த வரலாறு இன்றியமையாதது. அதனால்தான், உலகின் மிகச் சிறந்த தேசிய பூங்காக்களில் ஒன்றின் விளிம்பில் தங்கள் முழு வாழ்க்கையையும் வாழ்ந்த பலருக்கு இது பற்றி எதுவும் தெரியாமல் இருந்தது.

நக்சுமாலோ க்ரூகருக்கு சில முறை சென்றிருக்கிறார், ஆனால் காட்டுடன் அவருக்கு உண்மையான தொடர்பு இருந்ததில்லை. ஒரு குழு நேர்காணல் மற்றும் உடற்தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு, அவரும் மாலுங்கனே உட்பட எட்டு பணியாளர்களும் தங்கள் அடிப்படைப் பயிற்சியைத் தொடங்கினார்கள். பயிற்சி கடினமாக இருந்தது. ஒரு சிறிய பாட்டில் தண்ணீருடன் நாள் முழுவதும் வெயிலில் ஓடுவது போன்றவை அந்த பயிற்சியில் உள்ளடங்கியது என்று அவர் கூறுகிறார்.


பிக் ஃபைவ் பகுதிகளில் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் கால் ரோந்துப் பணியை மேற்கொண்ட பிறகு, நக்சுமாலோ காட்டினை விரும்பி, அதன் பாதுகாப்பிற்காக அர்ப்பணிப்புடன் இருக்கிறார். அவர் தனியாக இல்லை - அவருடைய குழுவைச் சேர்ந்த பெண்கள் அனைவரும் இன்னும் மாம்பாக்களாகவே இருக்கிறார்கள். மேலும் அவர்கள் கற்றுக்கொண்டதைக் மற்றவர்களுக்கு கற்பிப்பதில் பெருமிதம் கொள்கிறார்கள். மாம்பாக்கள் தங்கள் சீருடையில் வீட்டிற்குச் செல்ல மாட்டார்கள் (ஒரு வேட்டையாடுபவர் ஒன்றைத் திருடி அதை அணிந்து பூங்காவிற்குள் ஊடுருவ முயற்சிக்கலாம்), ஆனால் நக்சுமாலோ தன் வேலையே மறைக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ''நீங்கள் செய்வதைப் பற்றி நீங்கள் பெருமைப்பட வேண்டும்,'' என்று அவர் விளக்குகிறார். ''இது மற்றவர்களை சாதிக்க தூண்டுகிறது. நான் நிறைய செய்யமுடியும் என்று எனக்கு எப்போதும் தெரியும். ஆனால் மாம்பாக்கள் அதனை என்னிடமிருந்து வெளியே கொண்டு வந்தார்கள்.

மாம்பாக்களின் சம்பளம் அந்த பகுதியில் மிகவும் உயர்ந்ததாக கருதப்படுகிறது. தனது வருமானத்தை தாய் மற்றும் சகோதரிக்கு ஆதரவாக பயன்படுத்துவதோடு, நக்சுமாலோ தனது பல்கலைக்கழக கட்டணத்தையும் செலுத்தி வருகிறார். அவர் சமீபத்தில் கற்பித்தல் பட்டப்படிப்பின் முதல் ஆண்டை ஆன்லைனில் முடித்தார். மிசிம்பா தனது வருவாயை பசியால் வாடும் அண்டை வீட்டாருக்கு உணவுப் பொருட்களை வழங்க பயன்படுத்துகிறார் - இது வேட்டையாடுவதைக் குறைப்பதில் மேலும் உதவுகிறது.

# வனவிலங்குகளின் வாழ்க்கை

அழிந்துவரும் உயிரினங்களுக்கான ரோட்டரி செயல் நடவடிக்கை குழு (RAGES) ரோட்டரி சங்கங்கள் மற்றும் மாவட்டங்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டங்களை வடிவமைக்க உதவுகிறது. பிரபல வனக்காவலர் ஜானே குட்ஆல் ஆதரவுடன் 2015ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த குழுவில் 71 நாடுகளைச் சேர்ந்த 1,000 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

ஆரோக்கியமான நிலப்பரப்புகள் ஆரோக்கியமான சமூகங்களுக்கு இட்டுச் செல்கின்றன என்கிறார் செயல் நடவடிக்கை குழுவின் தலைவர் டாம் டோக்டர்மேன்.



**மலைக் கொரில்லாக்கள்**
**காங்கோ ஜனநாயக குடியரசு, ருவாண்டா மற்றும் உகாண்டா**

**உலகில் சுமார் 1,000 மலைக் கொரில்லாக்கள் தான் உயிருடன் இருக்கின்றன.** கனடாவில் உள்ள, ரோட்டேரியன் ராமான்டோ பெஜினார் தலைமையிலான மலைக் கொரில்லாக்கள் பாதுகாப்பு சங்கம், உகாண்டா, ருவாண்டா மற்றும் காங்கோ நாடுகளில் உள்ள பல்கலைக்கழங்களின் வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் நிர்வாகத் துறையின் உதவித்தொகை மூலம் வன விலங்குகளுக்கான மருத்துவர் களின் எண்ணிக்கையை அதிகரிக்க செயலாற்றி வருகிறது. உகாண்டாவில் உள்ள எட்மான்டன் ரிவர்வியூ, அல்பர்டா மற்றும் கம்பாலா முனியோநியோ ரோட்டரி சங்கங்கள் RAGES அமைப்புடன் இணைந்து வனவிலங்குகள் சுகாதாரத் திட்டத்துக்காக மூன்று சர்வதேச மானிய உதவித் தொகையை பெற்றுள்ளது.



**மகரந்தசேர்க்கையாளர்கள்**
**குவாட்டிமாலா**

உலகின் முன்னணி உணவுப் பயிர்களில் 75 சதவீதம், தேனீக்கள், பறவைகள், பட்டாம்பூச்சிகள், வண்டுகள் அல்லது வௌவால்களின் மகரந்த சேர்க்கையையே நம்பியுள்ளது. எண்ணெய்வித்துக்கள், நார்ச்சத்து மற்றும் மூலப்பொருள்களுக்கும் மகரந்தச்சேர்க்கைதான் முக்கிய காரணம். ஆனால், சாகுபடி பரப்பு குறைவது, பருவநிலை மாற்றம் மற்றும் பூச்சிக் கொல்லிகள் பயன்பாடு ஆகியவை இவற்றின் அழிவை துரிதப்படுத்துகின்றன.

RC கார்பின்டெரியா மார்னிங் அடிட்லான் ஏரிப்படுகையில் Save Me Peace Projectஐ தொடங்கியுள்ளது. அங்கு பல ரீங்காரம் செய்யும் பறவையினங்கள் அச்சுறுத்தப்படுகின்றன. குடிமக்கள்- அறிவியலாளர்கள் மூலம் சங்க உறுப்பினர்கள் பள்ளிக்குழந்தைகளுக்கு மகரந்தச் சேர்க்கையாளர்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். குவாடிமாலாவில் உள்ள யுனிவர்சிடாட் டெல் வாலி டீ பல்கலைக்கழகத்திலிருந்து மெய்நிகர் மூலம் கருத்தரங்கு நடைபெற்றது. ரோட்டரி சங்கம் மற்றும் RAGES இணைந்து இதற்கு ஏற்பாடு செய்திருந்தது.



**பெரிய குரங்குகள்**
**கேமரூன்**

ஆப்பிரிக்காவில் பெரிய குரங்குகள்- அதாவது கொரில்லாக்கள், சிம்பன்சிகள் மற்றும் போனோபாஸ்- இவற்றின் வாழ்விடங்கள் அழிப்புக்கு வெப்பமண்டல காடுகளில் உள்ள கடினமான மரங்கள் மற்றும் ஆப்பிரிக்க வனவிலங்குகளின் ச ட்டவிரோத இறைச்சி விற்பனை ஆகியவையே காரணமாகும். வனப்பகுதியில் வசிப்போர் உணவுக்காக ஆண்டாண்டு காலமாக விலங்குகளை வேட்டையாடி வந்தனர். ஆனால், இன்று பலர் வர்த்தகத்திற்காக குரங்கு உள்ளிட்ட பாலூட்டி களை வேட்டையாடி வருகின்றனர்.

RC ஒன்டோரியோவிலுள்ள பிக்கரிங் ஆதரவுடன், அனாதையாக கைவிடப்பட்ட பெரிய குரங்குகளை மீட்க Ape Action Africa திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. வனவிலங்குகள் இறைச்சி சட்டவிரோத விற்பனை, மரம் வெட்டுதல் மற்றும் வனவிலங்குகளை பாதுகாத்தல் மற்றும் சு ற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட இதர விவரங்களையும் இந்த அமைப்பு உள்ளூர் பள்ளிக் குழந்தைகளிடம் விளக்கி வருகிறது. விலங்குகளை மீண்டும் வனப்பகுதிக்குள் விடுவிக்கும் வகையில் வாழ்விடமாக பாதுகாக்கும் பகுதிகளைக் கண்டறியவும் இந்த அமைப்பு செயல்பட்டு வருகிறது.




**ஒராங்குட்டான் மற்றும் குள்ள யானைகள்**
**இந்தோனேசியா மற்றும் மலேசியா**

ஒராங்குட்டான்கள் தென்கிழக்கு ஆசியாவில் அதிகம் வாழ்பவை என்றாலும் இன்றைய சூழலில் அவை போர்னியோ மற்றும் சுமத்ரா தீவுகளில் உள்ள வனப்பகுதிகளிலும் அங்கும் இங்குமாக வாழ்ந்து வருகின்றன. அகாசியா (வெள்ளை அல்லது மஞ்சள் பூக்கள் நிறைந்த ஒருவகை மரம்) ரப்பர் மற்றும் பனை மரங்கள் உள்ள பகுதிகள்தான் இவற்றின் வாழ்விடங்கள். வசிப்பிடங்கள் அழிக்கப்பட்டதால் போர்னியன் பிக்மி யானைகள் (குள்ள யானைகள்) வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது.

ஒராங்குட்டான் அப்பீல் யு.கே. என்ற அமைப்பு, மலேசியாவின் போர்னியோவில் உள்ள செபிலாக் ஒராங்குட்டான் மறுவாழ்வு மையத்துடன் இணைந்து அனாதையாக கைவிடப்பட்ட ஒராங்குட்டான்களை பராமரித்து வருகிறது. இங்கிலாந்தில் உள்ள புக்ஹாம் மற்றும் ஹார்ஸ்லே ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த சூசன் ஷிவார்ட் என்பவரால் நிறுவப்பட்ட இந்த அமைப்பு, அந்த மையத்தில்

*உள்ள ஊழியர்களுக்கு நிதியுதவி அளிப்பதுடன், வனவிலங்கு மீட்பு மற்றும் வனவிலங்கு வாழ்விட பாதுகாப்பு மற்றும் மீண்டும் காடுகளை வளர்ப்பதற்கு ஆதரவளித்து வருகிறது.*

**காண்டாமிருகங்கள்**
**தென்னாப்பிரிக்கா**



*உலகில் பெரும்பாலான காண்டா மிருகங்கள் வாழும் தென்னாப்பிரிக்காவில், 2013 மற்றும் 2017ம் ஆண்டுகளுக்கு இடையில், வேட்டைக்காரர்கள் ஆண்டுக்கு சராசரியாக 1,000 காண்டாமிருகங்களை கொன்று குவித்துள்ளனர். காண்டா மிருகத்தின் கொம்புகள் பாரம்பரிய சீன மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. வேட்டையாடுபவர்களுக்குப் பின்னால் சர்வதேச அளவிலான கிரிமினல் கும்பல்கள் செயல்பட்டு வருகின்றன.*

*சிபெம்பர் ரைனோ அறக்கட்டளை காண்டாமிருகங்கள் வேட்டையாடப்படுவதை தடுப்பதை ஆதரிக்கிறது. வேட்டையாடுபவர்களை மோப்பம் பிடித்து கண்காணிக்கும் பயிற்சி பெற்ற நாய்கள், காண்டாமிருகங்களை கண்காணிக்கும் தொழில்நுட்பம் மற்றும் நவீன கருவிகளை இது வழங்கி வருகிறது. தென்னாப்பிரிக்காவில் உள்ள கென்டன் ஆன் ஸீ ரோட்டரி சங்கம் நீண்டகாலமாக இந்த அமைப்புக்கு உதவி செய்து ஆதரவாக இருந்து வருகிறது. டோக்டர்மேனால் நிறுவப்பட்ட ரைனோ மெர்ஸி, தென்னாப்பிரிக்காவில் வேட்டை யாடுபவர்களை எதிர்க்கும் முதல் பெண் குழுவை அதாவது பிளாக் மாம்பாஸ் குழுவை எற்படுத்தி செயல்பட்டு வருகிறது. இந்த குழு சுற்றுச்சூழல் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சிக்கு உதவி வருகிறது.*■

மாம்பாக்களுக்கு ஒரு பொதுவான நாளின் வேலை, விடியற்காலையில் எழுந்து வேலி ரோந்து பணி அல்லது பொறி தேடல் (இரண்டும் நடந்தே செய்யும் செயல்) மற்றும் ஒரு திரைக்கு பின் அல்லது வாகனத்தில் இருந்து இரவு கண்காணிப்பை மேற்கொள்வதற்காகும். துப்பாக்கிச் சூடு, டார்ச்லைட் மற்றும் புகையின் வாசனை ஆகியவை வேட்டை யாடுபவர்களின் செயல்பாட்டின் அறிகுறிகளாகும், ஆனால் தற்போதய காலக்கட்டத்தில் மாம்பாக்கள் சிறுத்தை அல்லது யானைக் கூட்டத்தால் குறுக்கிடப்படுவதற்கான வாய்ப்புகளே அதிகம் என்று நக்சுமாலோ கூறுகிறார். “அவர்கள் இரவில் மிகவும் அமைதியாக இருக்கிறார்கள். சில நேரங்களில் அவர்கள் வழிமறிகிறார்கள், ஆனால் நாங்கள் அவர்களை ஒருபோதும் அவசரப்படுத்துவதில்லை.'' என்று அவர் கூறுகிறார்.

ரிசர்வ் ஊழியர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் வசிக்கும் வளாகங் களைத் தேடுதல், சோதனை சாவடி களை நடத்துதல் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் சமூகங்களுடன் பேசுதல் ஆகியவை மாம்பாக்களுக்கான வாராந்திர பணிகளாகும். “ஒரு ரோந்துப் பணியில் எதுவும் நடக்கவில்லை என்றால், அது ஒரு பெரிய வெற்றி,'' என நக்சுமாலோ கூறுகிறார். “நான் எந்த பொறியையும் கண்டுபிடிக்கவில்லை என்றால் அது கூடுதல் போனஸ், ஏனென்றால் புதிய பொறியை வைக்க யாரும் வரவில்லை மற்றும் நான் கடைசியாக சரிபார்த்ததிலிருந்து யாரும் வேலியை வெட்டவில்லை. இது ஒரு மாபெரும் நிவாரணம்.''

2015ம் ஆண்டில், மாம்பாஸ் திட்டத்திற்கு பெரிய திருப்புமுனை ஒன்று ஏற்பட்டது. அது இயற்கைப் பாதுகாப்பு மாணவரான லெவின் மேஃபாலாவின் வருகை. மேஃபாலா, ஷ்வானே தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் தனது பாடநெறிக்காக ஸ்பென்சரின் இலாப நோக்கற்ற நிறுவனத்தில் ஒரு வருடகால பயிற்சியை மேற்கொண்டார். மாம்பாக்கள் வேலிகளுக்கு ரோந்து சென்று விலங்குகளை வேட்டையாடுபவர் களிடமிருந்து பாதுகாத்தாலும், வேட்டையாடுபவர்களின் சமூகங்களில் அவர்கள் தடுப்பு பணிகளைச் செய்யவில்லை என்பதை அவர் கவனித்தார். சில மாதங்களுக்குள், நான்கு உள்ளூர் தொடக்கப்பள்ளிகளில் மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் கல்வித் திட்டத்தைக் கற்பிக்க மேஃபாலா அனுமதி பெற்றார்.

புஷ் பேபீஸ் என்று தனது திட்டத்தை அழைத்த மேஃபாலா, மாணவர்கள் தினமும் எதிர்கொள்ளும் விலங்குகளைப் பயன்படுத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றி கற்பித்தார். “நாங்கள் விலங்குகளைப் பற்றியும் அவை உள்ளூர் வாழ்வியலில் எவ்வாறு பொருந்து கின்றன என்பதைப் பற்றியும் பேசு கிறோம்,'' என்று அவர் கூறுகிறார், கானாவில் உள்ள ஷாய் மக்கள், “யானைகளுடன் நடனமாடுவதை விரும்புகிறார்கள் என்பதை உதரணமாக கூறுகிறார். விலங்குகள் உயிர்வாழ சுத்தமான நீர் மற்றும் ஆரோக்கியமான மரங்கள் ஏன் தேவை என்பதையும் புஷ் பேபீஸ் கற்றுக்கொள்கின்றனர். மேலும், பாம்புகள் மற்றும் தேள்களைக் கொல்ல வேண்டும் என்பது போன்ற தங்கள் பெரியவர்களிடமிருந்து வந்த மூட நம்பிக்கையை தவிர்ப்பதை பற்றியும் அவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்படுகிறது. “ஒரு நாள், என் புஷ் பேபீஸ் சிலர் பஃப் அடர் பாம்பு ஒன்றை பிடித்தனர். அதை சமூகத்திலிருந்து வெகு தொலைவிற்கு கொண்டு சென்று காட்டுக்குள் விடுவித்தோம். இதுவே சில வருடங்களுக்கு முன்பு அப்படி நடந்திருக்காது. என்று மேஃபாலா கூறுகிறார்.

2017ம் ஆண்டுக்குள், 10 பள்ளிகள், இரண்டு தர நிலைகள் மற்றும் 1,000க்கும் மேற்பட்ட மாணவர்களை உள்ளடக்கியதாக மேஃபாலா திட்டத்தை விரிவு படுத்தினார். புஷ் பேபிஸ்களுக்கு கற்பிக்க இளைஞர்கள் மற்றும் பெண்களை வேலைக்கு அமர்த்து வதற்காக அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட சுற்றுச்சூழல்

கண்காணிப்பாளர்களை அவர் பயன்படுத்திக் கொண்டார். ஒரு போதும் அமைதியாக அமராத மேஃபாலா பள்ளி பாடத் திட்டத்துடன் தன் திட்டத்தை ஒருங்கிணைத்துள்ளார் (உதாரணமாக, கணித மாணவர்கள், சரணாலயத்தில் காணும் அனைத்து விலங்குகளின் இனங்கள், வயது மற்றும் பாலினம் ஆகியவற்றைப் பதிவுசெய்து, அந்தத் தரவைப் பயன்படுத்தி சிறய மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்துகின்றனர்) மற்றும் ஒரு காய்கறி தோட்டத்தைத் உருவாக்கினார். அங்கு குழந்தைகள் மண்ணை தழைக்கூளம் செய்வது முதல் விளை பொருட்களை சமைப்பது வரை முழு செயல்முறையையும் மேற்பார்வையிடுகிறார்கள். அவர் புஷ் கிரானிஸ் திட்டத்தையும் தொடங்கி யுள்ளார், இது உள்ளூர் பாட்டிகளின் ஆழமான அறிவை பயன்படுத்தி கொள்கிறது, மேலும் அவரது திட்டம் இளம் பருவத்தினரையும் சென்றடைவதை உறுதி செய்வதற் காக தென்னாப்பிரிக்கா சாரணர் உள்ளூர் அமைப்புடன் இணைந்து செயல் படுகிறார். கடந்த ஆண்டு 1,500க்கும் மேற்பட்ட இளைஞர்கள் புஷ் பேபீஸ் சுற்றுச்சூழல் கல்வி மையத்தில் சாரணர் கூட்டங்களில் கலந்து கொண்டனர். மேஃபாலா புஷ் பேபீஸ்களை உயரத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.'' என்று ஸ்பென்சர் பாராட்டுடன் கூறுகிறார்.

2019ல் நக்சுமாலோ மாம்பாவில் இணைந்த நேரத்தில், திட்டம் முழு திறனில் இருந்தது (36 மாம்பாக்கள் உட்பட புஷ் பேபீஸ் குழு), மற்றும் பெண் ரேஞ்சர்களைப் பற்றிய சமூக அணுகுமுறைகள் தளர்ந்தது. ''நான் எனது கிராமத்திற்கு செல்லும் போது, மாம்பாவில் ஏதேனும் காலியிடங்கள் உள்ளதா என்று மற்ற பெண்கள் என்னிடம் கேட்கிறார்கள்,'' என்று அவர் கூறுகிறார். ''வேட்டையாடலுக்கு எதிரான போராட்டத்தில் பெண்களால் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை மக்களுக்கு உணர்த்தி அவர்கள் மனநிலையை மாற்றுவது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.''

கோவிட்-19 தொடர்பான பயணக் கட்டுப்பாடுகளால் காண்டாமிருகக் கொம்புகளை எல்லைகள் தாண்டி கடத்துவது கடினமானது, தென் கிழக்கு ஆசியாவில் கொம்புகளுக்கான தேவை குறைந்துள்ளது மற்றும் கொல்லப்படுவதற்கு குறைவான காண்டாமிருகங்களே உள்ளன. காண்டாமிருகம் வேட்டையாடுதல் குறைந்துள்ளது என்பதற்கு சான்று உள்ளது. 2021 முதல் பாதியில், தென்னாப்பிரிக்காவில் வேட்டை யாடுபவர்கள் 249 காண்டா மிருகங்களை கொன்றனர் - அது 2013 முதல் 2017 வரையிலான தொகையை விட கணிசமான சரிவு. அவர்கள் ஆண்டுக்கு 1,000க்கும் அதிகமானவற்றை கொன்றுள்ளனர். மாம்பாக்களின் எல்லைக்குள், வேட்டையாடுபவர்கள் 2020ம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து ஒரு காண்டாமிருகத்தை மட்டுமே கொன்றுள்ளனர்.

மாம்பாக்கள் இப்போது ஒரு முறையான உயர்நிலைப் பள்ளி மற்றும் தொழில்பயிற்சி திட்டத்தை எதிர்காலத்தில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளனர், மேலும் தென்னாப்பிரிக்கா மற்றும் அதற்கு அப்பால், நிலத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் அதிக பெண்களை ஈடுபடுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக உள்ள இடங்களில் விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளனர். அதைச் செயல்படுத்துவதற்கு நிதிப்பற்றாக்குறை மட்டுமே தடையாக உள்ளது.



மேஃபாலாவின் புஷ் பேபீஸ் திட்டம், அதன் முதல் பட்டதாரி வகுப்பின் இரு உறுப்பினர்களை இயற்கை பாதுகாப்பு பட்டப்படிப்பை பயில தூண்டியுள்ளது. மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு பள்ளியும் தனது திட்டத்தைச் செயல்படுத்துவதைப் காண விரும்புகிறார் மேஃபாலா , மேலும் 100 இருக்கைகள் கொண்ட பேருந்து வாங்குவது மற்றும் நூலகம், இணையதள வசதியுடன் கூடிய ''மிகப் பெரிய'' புஷ் பேபீஸ் மையத்தையும் கட்டுவது அவரின் கனவு.

இது, கடக்கப்பட வேண்டிய இன்னும் ஒரு தடையாகும் என்கிறார் நக்சுமாலோ. ''எல்லா பூங்காக்களிலும் மாம்பாக்கள் வேலை செய்ய வேண்டும்,'' என்று அவர் கூறுகிறார். காண்டாமிருகங்கள் அழிந்து விட்டால், வேட்டையாடுபவர்கள் யானைகள், பாங்கோலின்கள், சிங்கம்-எலும்பு வர்த்தகம் என்று நகர்வார்கள். யானைகள் மரங்களை மிதிக்க வேண்டும், அதனை இம்பாலாக்கள் சாப்பிட வேண்டும். சிங்கங்கள் உயிர்வாழ இம்பாலாக்கள் தேவை. பாதுகாப்பு என்பது அனைத்து விலங்குகளையும் காப்பாற்றுவதாகும். இதனாலேயே நாங்கள் செய்யும் பணி மிகவும் முக்கியமானது என்று அவர் கூறுகிறார்.

படங்கள்: பாபி நெப்டியுன்

©ரோட்டரி

# முதியோர் இல்லத்தில் ஓணம் விருந்து

ரோட்டரி செய்திக் குழு



கேரளத்தின் ஓணம் திருவிழாவை ஈர நெஞ்சம் அறக்கட்டளை நடத்தும் முதியோர் இல்லத்தைச் சேர்ந்தோருடன் கொண்டாடினார்கள் RC கோயம்பத்தூர் மொனார்க்ஸ், RID 3201, ரோட்டரியன்கள். இந்த நிகழ்ச்சியில் சங்கத் தலைவர் A அபிஷேக், செயலாளர் C N சரவணா, A G சசிகுமார் பங்கேற்றனர்.

ஒவ்வொரு மாதமும் முதல் நாளன்று இச்சங்கம் Smile with a Meal என்ற திட்டத்தின் கீழ் போத்தனூர் அருகில் 180 குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்குகிறது. சங்க உறுப்பினர் குருமூர்த்தி விக்னேஷ் ஆதரவில் இத்திட்டம் நடைபெற்று வருகிறது.

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

### பன்னாட்டு நல்கைப் பங்களிப்பு

பன்னாட்டு நல்கைகளுக்கான ரொக்கப் பணப் பங்களிப்பு களை நல்கை அங்கீகாரத்துக்கு முன் அனுப்பக்கூடாது. ஒரு விண்ணப்பம் அங்கீகரிக்கப்படாவிட்டால், பங்களிப்புகள் பன்னாட்டு நிதிப் பங்கில் சேர்க்கப்படும், அவற்றை அதன்பிறகு மறு நியமித்தல் செய்ய இயலாது. அனைத்து GG பங்களிப்புகளும் TRFக்குத் திரும்பப் பெற இயலாத பங்களிப்புகளாகக் கருதப்படுகின்றன, அவை திரும்பச் செலுத்தப்படாது.

### பேரிடர் எதிர்வினை நல்கைகள்

நோய்ப்பரவலின் போது சமூகங்களுக்கு உதவுவதற்கு TRF பேரிடர் எதிர்வினை நல்கைகளை அங்கீகரித்து வழங்கியது. இந்த நல்கை நிதிகள் எந்த நோக்கத்துக்கு வழங்கப்பட்டனவோ அந்த நோக்கத்துக்கு அவை பயன்படுத்தப்பட்டன என்று அறக்கட்டளை நம்புகிறது, இந்த நல்கைகளின் நிறைவு அறிக்கையை அனுப்பும்படி மாவட்டங்களைக் கோருகிறது.

### ரோட்டராக்ட் வழங்கல் சான்றிதழில் மாற்றங்கள்

இப்போது ரோட்டராக்ட் சங்கங்கள் TRFக்கு நன்கொடை அளிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதில் கூடுதல் நெகிழ்வுத்தன்மை உள்ளது. ரோட்டரி ஆண்டு 2022–23ல் தொடங்கி, ஒரு சங்கத்தின் உறுப்பினர்கள் அறக்கட்டளைக்குக் குறைந்தது $100 பங்களித்தால், அந்தச் சங்கம் ரோட்டராக்ட் வழங்கல் சான்றிதழைப் பெறும். குறைந்தபட்சம் இத்தனை உறுப்பினர்கள் பங்கேற்கவேண்டும் என்ற கட்டுப்பாடு இனி இல்லை, ரோட்டராக்ட் சங்க உறுப்பினர்கள் குழுவாகவோ தனியாகவோ பங்களிக்கலாம்.

### மிகப் பெரிய கொடையாளர் அங்கீகார வழிகாட்டுதல்கள்

- தனிப்பட்ட பங்களிப்புக்கு மட்டும் தான் கிடைக்கும். மிகப் பெரிய கொடையாளர் அங்கீகாரத்துடன் துணை வருடைய பங்களிப்பைமட்டும் தான் சேர்க்க இயலும்.
- மிகப் பெரிய கொடையாளர் அங்கீகாரம் தானாகச் செயல்முறைப்படுத்தப்படுவதில்லை, அதைக் கொடையாளர் RI ஊழியருக்குத் தெரிவிக்கவேண்டும்.
- APF, போலியோபிளஸ் மற்றும் GGகளுக்கான பங்களிப்புகளுக்கு அறக்கட்டளை அங்கீகாரப் புள்ளிகள் உருவாக்கப்படுகின்றன.

### பங்களிப்புகளை மறு வகைப்படுத்தலுக்கான வழிகாட்டுதல்கள்

அனைத்துக் கோரிக்கைகளும் பரிசு நாளிலிருந்து 60 நாட்களுக்குள் கிடைக்கவேண்டும், அவை இப்போதைய நிதி ஆண்டுக்கான கோரிக்கைகளாக இருக்கவேண்டும். இந்தக் கோரிக்கைகளைக் கொடையாளர் நேரடியாக எழுப்பவேண்டும். ஆண்டு நிதியிலிருந்து GG ரொக்கப் பணப் பங்களிப்புகளுக்கு மறு வகைப்படுத்த அனுமதி இல்லை.■

Wordsworld

# மலைகளில் லிட்ஃபெஸ்ட்

சந்தியா ராவ்



ஊட்டி லிட்ஃபெஸ்ட் ஒரு 'காலம்போன புரட்சியாளர்' முதல் பிரபலமான பாட்டி வரை சில சுவாரஸ்யமான உரையாடல்களை கண்டது."நான் ஒரு எழுத்தாளர் அல்ல. நான் ஏன் இங்கே இருக்கிறேன் என்று எனக்கு தெரியவில்லை" என்று கீதா ராமசாமி மேடையில் தனது உரையாடலைத் தொடங்கினார். அமர்வின் முடிவில், பார்வையாளர்களிடமிருந்து அவர் கைதட்டல்களை பெற்றார். 1869ம் ஆண்டு முதல், காலனித்துவ, கோதிக் பாணியில் கட்டப்பட்ட நீலகிரி நூலகத்தில் செப்டம்பர் 9 மற்றும் 10ம் தேதிகளில் நடைபெற்ற ஊட்டி இலக்கிய விழாவின் (OLF) இந்த ஆண்டு பதிப்பின் நட்சத்திரமாக அவர் இருந்தார். அவர் தெளிவுப்படுத்த விரும்பியது என்னவென்றால் அவர் ஹைதராபாத் புத்தக அறக்கட்டளையின் (HBT) ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் இருந்தார் என்பதே, அது 1980ம் ஆண்டு முதல் தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட அல்லது மொழி பெயர்க்கப்பட்ட புத்தகங்களை மலிவு விலையில் வாசகர்களுக்குக் கிடைக்கச் செய்து வருகிறது. இருப்பினும், அவர் ஊட்டிக்கு வந்ததுக்கு அவரது HBT இணைப்பு மட்டும் காரணமல்ல, அவர் எழுதிய லேன்ட், கன்ஸ், காஸ்ட், வுமன் (Land, Guns, Caste, Woman) என்ற புத்தகமே காரணம்.

லேன்ட், கன்ஸ், காஸ்ட், வுமன். இந்த சுவாரஸ்யமான தலைப்பின் காரணமாகவே எனது உள்ளூர் புத்தகக் கடையில் இந்த புத்தகத்தை வாங்கினேன். அதுவும் அந்த புத்தகத்தின் கோஷம்: "தி மெமோயர் ஆஃப் எ லேப்ஸ்டு ரெவல்யூஷனரி" என்னை ஈர்த்தது. கீதா ராமஸ்வாமி யார் என்று எனக்குத் தெரியாது, ஆனால் நான் படிக்கத் தொடங்கிய தருணம் நான் ஈர்க்கப்பட்டேன்: "இது என்னையும் என்னைச் சுற்றியுள்ள உலகத்தையும் நான் கணக்கிடும் கதை. நான் கேரளாவில் வேரூன்றிய தமிழ் பிராமண குடும்பத்தில் பிறந்தேன். ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக, ஹைதராபாத் மற்றும் அதைச் சுற்றியுள்ள டெக்கான் நிலப்பரப்பு எனது வீடாக இருந்தது. மேற்கத்திய நாடுகளில் ப்ராவை எரிப்பது தீவிரமானதாகக் கருதப்பட்டபோது, என் குடும்பத்தில், நான் பதினான்கு வயதில் அதை அணிவது என்னை ஒரு வேசி ஆக்கியது. எனது இளமை நாட்கள் சிறு சிறு கிளர்ச்சிகளாலும் கணிதத்தின் மீதான மோகத்தாலும் குறிக்கப்பட்டன. 1970களில் நக்சலைட் இயக்கத்தின் மீது ஈர்ப்பு ஏற்பட்டு, எமர்ஜென்சி காலத்தில் தலைமறைவானேன். நான் மூளைச்சலவை செய்யப்பட்டதாக என் பெற்றோர் நினைத்தார்கள்.


முதலில் தனது குடும்பத்திலிருந்து பிரிந்து, பின்னர் இயக்கத்தால் ஏமாற்றமடைந்த கீதா ராமசாமிக்கு, HBT 'எனது மனச் சோர்வுக்கு எதிரான மருந்தாக வேலை செய்தது. நான் விரைவில் HBT இன் அடையாளமாக மாறினேன். ஆனாலும் என்னால் இந்த பாத்திரத்தில் இருக்க முடியவில்லை. நான் கனவு கண்ட புரட்சி இன்னும் என் கைக்கு எட்டவில்லை. நான் அமைதியின்றி இருந்தேன். எனக்கு அப்போது முப்பது வயது.' 1984ல், ஹைதராபாத்தின் தென்மேற்கே உள்ள இப்ராஹிம்பட்டினத்திற்குச் சென்று, நிலப்பிரபுத்துவம் மற்றும் நிலமின்மையின் இரும்புகரங்களால் நசுக்கப்பட்ட தலித் சமூகங்களைச் சேர்ந்த மக்களைச் சந்தித்தபோது, அவரது வாழ்க்கைப் பாதை மீண்டும் மாறியது. அங்கு அவர் தனது நோக்கத்தைக் கண்டு பிடித்தார், அடுத்த பத்து வருடங்கள் அப்பகுதியில் உள்ள கிராமங்களுக்கு சென்று, அச்சமின்றி மற்றும் வெற்றிகரமாக நிலப் போராட்டங்களை சட்ட வழிகள் மூலம் வழிநடத்தி, கொத்தடிமைத் தொழிலுக்கு எதிராக போராடினார்.

"சவர்ணா" என்ற பிராமணரின் வாழ்க்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கையை எப்படி சமாளித்தார் என்று கேட்ட போது, "அவர்கள் என்னை ஏற்றுக் கொண்டு எனக்கு அளவற்ற அன்பைக் கொடுத்தார்கள். அந்த அன்பை திருப்பித் தருவது எனது கடமையானது" என்கிறார் கீதா. ரெட்டி நிலப்பிரபுக்கள், "தண்டனையாக" மணிக்கணக்கில் மக்களின் முதுகில் பெரும் கற்களை ஏற்றி வைத்தனர்; சில கிராமங்களில், புதிதாகத் திருமணமான மடிகா மணப்பெண்கள் முதலில் நிலப்பிரபுக்களின் காருக்குக் கொண்டு வரப்பட்டு கன்னித் தன்மையை இழந்தனர். பாலூட்டும் பெண் தொழிலாளர்களின்



மார்பகங்கள் உண்மையில் தங்கள் கைக்குழந்தைகளுக்கு உணவளிக்க வேண்டுமா என்று சோதிக்க அழுத்தப்பட்டன... இது போன்ற கதைகள் ஒவ்வொரு கிராமத்திலும் ஏழைகள் மற்றும் தலித்துகள் மத்தியில் ஏராளமாக உள்ளன.' அவர் ஈடுபட்ட வேலையால் அவரின் சொந்த வாழ்க்கை அடிக்கடி ஆபத்துக்கு உட்படுத்தப்பட்டது. எளிமையாகவும், வெளிப்படையாகவும், எழுதப்பட்ட லேன்ட், கன்ஸ், காஸ்ட், வுமன் - இந்தியாவில் நமக்குத் தெரியாத அல்லது புறக்கணித்த பல உண்மைகளுக்கு என் கண்களைத் திறந்தது.

இப்போது, கீதா ராமசாமியின் பணி முழுக்க முழுக்க HBTயில் கவனம் செலுத்துவதாக இருக்கிறது, சில வருடங்கள் தொடர்ந்து பல தலைப்புகளை வெளியிட்டு வந்த பிறகு, தொற்றுநோய்களின் போது மோசமாகப் பாதிக்கப்பட்டு, மீண்டும் தலையெடுக்க போராடுகிறது. இரண்டாம் நாள் எழுத்தாளர் ஜெர்ரி பின்டோவுடன் சிறிய, சுதந்திரமான பதிப்பகங்கள் பற்றிய உரையாடலில், இரண்டு தெலுங்கு மொழி பேசும் மாநிலங்களில் இருந்து ஆதிவாசிகளின் எழுத்துக்களின் தொகுப்பை வெளியிட ஆர்வமாக இருப்பதாகவும், ஆனால் திட்டத்திற்கான நிதி திரட்டுவது சவாலாக இருப்பதாக கூறினார். "இரண்டு வருடங்களில், இதே இடத்தில் இந்தப் புத்தகத்தை வெளியிடுவீர்கள்." என்று கூறிய ஜெர்ரி பின்டோ 25,000 ரூபாய் கொடுத்து, ஸ்பாட் க்ரோவுட் சோர்சிங் டிரைவைத் தொடங்கினார். கூட்டத்தில் இருந்து கைகள் வேகமாக உயர்ந்தன, சில நிமிடங்களில், ஐந்து இலக்கத் தொகையை அடைந்தது, அதில் பெரும்பகுதி பணமாக இருந்தது.



நீலகிரி நூலகம்.

முழுக்க முழுக்க வித்தியாசமான முறையில் ஊக்கமளிக்கும் வகையில் இருந்தா ஷோபா டே , தனது புத்தகமான 'செவேன்ட்டி... அண்ட் டு ஹெல் வித் இட்' இருந்து ஒரு பகுதியை முந்தைய நாள் இரவு உணவின் போது படித்தார். அவர் அமர்வானது, மிகப்பெரிய கூட்டத்தை ஈர்த்ததில் ஆச்சரியமில்லை. அவர் ரசிகர்களை தீவிரமாக கவனித்து, தன் செயல்களை நினைவு கூர்ந்தார். அவரின் பொது உருவமும் அவர் உள்ளே இருக்கும் தனிப்பட்ட பெண்ணும் மிக சுலபமாக இணைந்து வாழ்வதாகவும், அவர் யார் என்பதை அவர் அறிந்திருந்தும், மதித்தும் இருந்ததாகத் தோன்றியது, மேலும் அவர் பகிர்ந்தவை அனைத்தும் உண்மையானதாகவும் இதயப் பூர்வமானதாகவும் தோன்றியது. மக்கள் செல்ஃபிக்காக அவரை சூழ்ந்த போது அவர் பொறுமையாக போட்டோ எடுத்துக்கொண்டார்!

ஷோபா டே, தான் 12 வயதிலிருந்தே பத்திரிக்கை துறையில் இயங்கி வருவதாகவும், எழுத்தாளராக வேண்டும் என்று ஒரு போதும் கனவு காணவில்லை என்றாலும், அவரது வாழ்க்கை, மக்களைப் பற்றிய அவதானிப்புகள் மற்றும் அவரின் அனுபவங்கள், பல தசாப்தங்களாக அவர் எழுதிய புத்தகங்களுக்கு உத்வேகம் அளித்ததாக கூறினார்... அவருக்கு 75 வயது என்றால் நம்புவது சாத்தியமில்லை - ஆம்! - ஜனவரியில், அவர் அதற்காக எல்விஸ் தீம் விருந்து ஒன்றைத் திட்டமிட்டிருக்கிறார்: "எனக்கு எல்விசை மிகவும் பிடிக்கும்!" என்று உற்சாகமாக கூறுகிறார். பெண்களுக்கு அவரின் அறிவுரை? பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருங்கள்,



Land, Guns, Caste, Woman

ஆசிரியர் கீதா ராமசாமி.

ஒருபோதும் கூட்டுக் கணக்கு வைத்திருக்காதீர்கள், உங்கள் சொந்த பணத்திற்கு நீங்களே பொறுப்பாக இருங்கள்.

இப்போது நாம் தி எஜுக்கேஷன் ஆப் யூரி பற்றி பார்போம். "இந்தப் புத்தகம் புக்கர் பரிசை வெல்லப் போகிறது!" என்று OLFன் ஒருங்கிணைப்பாளர் ஆர்த்தி முத்தண்ணா சிங் அயராமல் கூறுகிறார்.

கடைசியாக OLF பற்றி ஒரு விஷயம்.நீண்ட காலமாக நீலகிரியில் வசிக்கும் யாஷ் முத்தண்ணாவின் சிந்தனையால் இது 2015ல் தொடங்கப்பட்டது. அவர் தனது குடும்பத்தினருக்கு அச்செய்தியை அறிவித்த போதும், அவர் நூலகத்தின் படிக்கட்டில் நீலகிரியில் நீண்ட காலமாக வசிக்கும் கீதா சீனிவாசனை சந்தித்தும், அதன் கதை தொடங்கியது. OLF இப்போது ஏழு வருடங்களை கண்டுள்ளது. இந்த ஆண்டு விருதை பெற்றவர் தாரா புக்ஸ் நிறுவனர் கீதா வுல்ஃப். OLFஐ தொடங்கிய பாட்டிகள் என்று அன்புடன் குறிப்பிடப் பட்டாலும், யாஷ் முத்தண்ணா மற்றும் கீதா சீனிவாசன் அவர்களின் எல்லையற்ற ஆற்றல் மற்றும் உற்சாகத்தில் பொதுவாக 'பாட்டியாக' இருப்பதில்லை. அவர்கள் அழகாக, ஆக்கப்பூர்வமாக, சுறுசுறுப்பாக மற்றும் விருந்தோம்பலுடன் எவ்வாறு வளர வேண்டும் என்பதற்கான உதாரணம்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# ஐந்து நாட்களில் 75 திட்டங்கள்: சண்டீகர் ரோட்டரியின் சாதனை!

ஜெய்ஸ்ரீ






**மேலே:** PRIP *ராஜேந்திர சாபூ மற்றும்* PDG *ப்ரவீண் கோயல் குடிசைக் குடியிருப்பில் குழந்தைகளுக்கு கதை புத்தகங்கள் வழங்குகின்றனர்.* **கீழே:** *உஷா சாபூ குழந்தைகளுக்கு பரிசு அளிக்கிறார்.*

இந்தியா சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் ஆனதை கொண்டாடும் வகையில் சண்டீகர் ரோட்டரி சங்கம் (RID 3080) 75 மனிதாபிமான திட்டங்களை 5 நாட்களில் நிறைவேற்றியுள்ளது. இந்த திட்டங்கள் ஐந்து பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. உடல்/மன ஆரோக்கியம், கல்வி, படைப்பாற்றல் மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் 650 குடியிருப்புகள் கொண்ட நகரின் குடிசைப்பகுதியான சாகேத்ரி காலனியில் நடைபெற்றது.

கடந்த 2018ம் ஆண்டு முதல் இங்குள்ள மக்களுக்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் சங்கம் கவனம் செலுத்தி வருகிறது. 2016ம் ஆண்டு புத்தாண்டு தின இரவில் நாங்கள், எங்கள் வழிகாட்டியான உஷா சாபூவுடன் குடிசைப் பகுதிகளுக்குச் சென்று கம்பளிப் போர்வைகளை வழங்கினோம். அங்குள்ள மக்களின் அவல நிலையைப் பார்த்த உஷா, அந்த காலனி மக்களின் நல்வாழ்வுக்கான வளர்ச்சித் திட்டங்கள் மீது கவனம் செலுத்த பரிந்துரைத்ததாக திட்டத் தலைவர் நீனு விஜ் கூறினார். அதற்கு இரண்டு

ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 2018ம் ஆண்டில் சுகாதாரம், கல்வி, திறன் வளர்ப்பு உள்ளிட்ட திட்டங்களைச் செயல்படுத்த சங்கம் முன்வந்தது. காலனியைச் சேர்ந்த பள்ளி செல்லும் 120 குழந்தைகளுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப் பட்டன. சங்க உறுப்பினர்கள் திருவிழாக்களை காலனி மக்களுடன் சேர்ந்து கொண்டாடினர். சேவா என்ற தொண்டு நிறுவனம் மற்றும் பவன்ஸ் வித்யாலயா, சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருந்து செயலாற்றினர்.

இந்த ஆண்டு சுதந்திர தினத்தன்று நீனு மற்றும் திட்ட இணை தலைவர் சீமா குப்தா மற்றும் சேவா அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சிம்ரஞ்சித் சிங் ஆகியோர் காலனி மக்களைச் சென்றடைந்து ஐந்து நாட்களில் 75 நலத் திட்டங்களைச் செயல்படுத்த முடிவு செய்தனர். உஷாவும், PRIP ராஜேந்திர சாபூவும் உடனடியாக இத்திட்டத்தை செயல்படுத்த ஒப்புக்கொண்டதுடன் நிதியுதவி வழங்கவும் முன்வந்தனர் என்றார் நீனு. அனைத்து உறுப்பினர்களும் இத்திட்டத்துக்கு பங்களிப்புச் செய்தனர்.

குழந்தைகளுக்கு விளையாட்டு மற்றும் வினாடி-வினா போட்டிகள், படைப்பாற்றல் பயிலரங்குகள், படம் வரைதல், மெழுகு ஓவியம் மற்றும் களிமண்ணில் பொம்மைகள் செய்யும் போட்டிகள் நடத்தப்பட்டன. நிதியைக் கையாளும் திறமை, சுகாதாரம் மற்றும் மகளிர் மற்றும் வளர் இளம் பெண்கள் முன்னேற்ற தொடர்பான அமர்வுகள், இசை மற்றும் நடனப் போட்டிகளும் நடைபெற்றன. போக்குவரத்து விதிகள், போதைப் பொருள் துஷ்பிரயோகம், நெறிமுறைகள், தார்மீக முறைகள், சமூக நடத்தை மற்றும் தனிப்பட்ட சுகாதாரம் போன்ற அடிப்படை விஷயங்கள் குறித்து குடியிருப்பாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. சண்டீகரில் உள்ள லலித் கலா அகாதெமியில் நடைபெற்ற கலை படைப்புகள் மற்றும் ஓவிய கண்காட்சிக்கு வளர் இளம் கலைஞர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

குழந்தைகளிடம் புத்தகம் படிக்கும் பழக்கத்தை உருவாக்க அவர்களுக்கு சங்க உறுப்பினர்கள் புத்தகங்களை நன்கொடையாக வழங்கினர். மேலும் புத்தகங்களை படித்தபின் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளவும் ஊக்குவிக்கப் பட்டனர்.

இந்த ஐந்து நாட்களும் காலனி குடியிருப்பு வாசிகளுடன் நெருக்கமாக பழகுவதற்கான வாய்ப்பை எங்களுக்கு வழங்கியது. அவர்களுக்கு உண்மையில் என்ன தேவை?, அவர்கள் வளர்ச்சி பெற நாங்கள் எவ்வாறு உதவ முடியும்? என்பது பற்றிய கண்ணோட்டத்தை எங்களுக்கு அளித்தது என்றார் நீனு.■

---

# ரத்த தானத்தில் சிறந்து விளங்கிய இளம்பிள்ளைவாதப் போராளி

**ரோட்டரி செய்திக் குழு**

ரத்த தானத்தில் சிறந்து விளங்கியவர் இவர். PDG ஸ்ரீகாந்த் சத்ரபதி 52 முறை ரத்த தானம் செய்துள்ளார், தன்னுடைய சங்கம் RC பெங்களூர் டௌன்-டவுன், RID 3190, வழியாகத் தொடர்ச்சியாகப் பல ரத்த தான முகாம்களை நடத்தியுள்ளார். “என்னுடைய சகோதரர் இதில் மிகவும் பேரார்வம் கொண்டவர். TTK ரத்த வங்கி, வேறு பல அமைப்புகளுடன் சேர்ந்து ரத்த தான முகாம்களை அவர் நடத்திவந்தார். ரத்த தானம்தான் அவருடைய வாழ்க்கையின் இலக்கு என்று பலரும் அறிந்திருந்தார்கள்'' என்கிறார் PDG மதுரா சத்ரபதி. நவம்பர் 2021ல் PDG ஸ்ரீகாந்த் சத்ரபதி மறைந்தார்.

ஆகஸ்ட் 25 அன்று அவருடைய பிறந்தநாளை முன்னிட்டு அவருடைய நினைவைப் போற்றும் வகையில் RC பெங்களூர் டௌன்-டவுன் இந்தியச் செஞ்சிலு வைச் சங்கத்துடன் இணைந்து பெங்களூரு CMR பல்கலைக் கழகத்தில் ரத்த தான முகாம் ஒன்றை நடத்தியது. முன்னாள் தலைவர் ஜகதீஷ் ரெட்டி இதை முன்னின்று நடத்தினார். இந்த மைல்கல் திட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் பங்கேற்றார்கள். “என் சகோதரருடைய மரபைத் தொடரவேண்டும் என்று இந்தச் சங்கம் தீர்மானித்துள்ளது'' என்கிறார் மதுரா. இவரும் இந்தச் சங்கத்தின் உறுப்பினர் ஆவார்.



PDG *ஸ்ரீகாந்த் சத்ரபதி,*
RID 3190

PDG ஸ்ரீகாந்த் சத்ரபதி இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதிலும் அதே அளவு அர்ப்பணிப்புடன் இருந்தார், ஒவ்வொரு மாதமும் இளம்பிள்ளைவாத அகற்றல் நிதிக்கு $100 பங்களித்தார். சமீபத்தில், ரோட்டரி அறக்கட்டளை அவருக்கு “இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைத்தல் தோழர்'' என்ற பெருமையை வழங்கியது.■

# RC திமாபூர், நாகா குழந்தைகளின் வரப்பிரசாதம்

V முத்துகுமரன்

நாகாலாந்தில் உள்ள 63 உறுப்பினர்களைக் கொண்ட சிறிய சங்கமான RC திமாபூர், RID 3240, மாவட்ட மானியத் திட்டங்களை வலையமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் மூலம், பிறவி இதய நோய்களால் பாதிக்கப்பட்ட 109 நாகா குழந்தைகளுக்கு உதவியது. கிஃப்ட் ஆஃப் லைஃப் என்ற உலகளாவிய மானியத் திட்டத்தின் மூலம், 2006–07 முதல் ஒரு டெல்லி சங்கத்துடன் இணைந்து, 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஃபோர்டிஸ் மருத்துவமனை மற்றும் நேஷனல் ஹார்ட் இன்ஸ்டிடியூட் ஆகியவற்றிற்கு அனுப்பினோம். பின்னர், ஹார்ட்-டு-ஹார்ட் என்ற மாவட்டத் திட்டம், கொல்கத்தாவுக்கு அருகிலுள்ள துர்காபூர் மிஷன் மருத்துவமனைக்கு ஏழைக் குழந்தைகளை அனுப்ப எங்களுக்கு உதவியது, என்கிறார் குழந்தை இதய அறுவை சிகிச்சை பிரிவின் தலைவர் பிரதீப் குமார் ஜெயின்.

இங்கு அறுவை சிகிச்சைக்கான செலவு மிகவும் அதிகம். எனவே, ராய்ப்பூரில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் சஞ்சீவனி மருத்துவமனையுடன் இணைந்து, ஹார்ட்-டு-ஹார்ட் திட்டத்தை சங்கம் தொடர்ந்தது. “PDG அசோக் அகர்வால், RID 3240, மற்றும் PDG சஷி வர்வந்த்கர், RID 3261, நாகா குழந்தைகளுக்கான இந்த திட்டத்தை நிலை நிறுத்துவதற்கான அனைத்து ஆதரவுப் பணிகளையும் மேற் கொண்டனர்” என்று ஜெயின் நினைவு கூர்ந்தார். கடந்த நான்கு ஆண்டுகளில், ராய்ப்பூர் மருத்துவ மனையில் 48 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

RC திமாபூரின் உலகளாவிய கூட்டாளியான RC நார்த் ஃபீனிக்ஸ், US, RID 5490 மற்றும் TRF ஆகிய வற்றின் மூலம், 2003 ஆம் ஆண்டில் பொருத்தமான மானியத்துடன் (ரூ.2 லட்சம்) இரண்டு கணினிகளுடன் கூடிய இளைஞர் கல்வி மையம் அமைக்கப்பட்டது. இந்த மையம் ஒரு வருடத்தில் சுமார் 250 இளைஞர் களுக்கு அடிப்படை கணினி திறன்களில் பயிற்சி அளித்தது. “எங்களுக்கு மாவட்ட மானியம் ரூ.2 லட்சம் கிடைத்தது, 2018ல் இந்த மையத்தில் எங்களிடம்

*RI இயக்குனர் A S வெங்கடேஷ், சஞ்சனா அகர்வால், DG மோகன் ஷியாம் கொன்வர், PDG சந்து அகர்வால், மம்தா புச்சா, முன்னாள் சங்கத்தலைவர் பஜ்ரங் புச்சா மற்றும் பங்கஜ் மோடி ஆகியோருடன்.*



15 கணினிகள் இருந்தன மற்றும் 4,000 மாணவர்களுக்கு பயிற்சி அளித்திருந்தோம்.'' அதன் நிரந்தர வசதிகளில் சில - மூன்று குடிநீர் சாவடிகள் (ரூ.24 லட்சம்); ஒரு பொது கழிப்பறை (ரூ.10 லட்சம்); மற்றும் ஆறு ஹாப்பி பள்ளிகள் ரூ.40 லட்சம் செலவில் - ஆகியவை உள்ளூரின் பார்வைக்கு சங்கத்தை கொண்டு வந்துள்ளது. “எல்லா ஹாப்பி பள்ளிகளும் இப்போது கை கழுவும் நிலையங்கள், நூலகங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட வளாகச் சுவர்களைப் பெற்றுள்ளன, இதனால் திமாபூரில் 2,500 குழந்தைகள் பயனடைகிறார்கள்'' என்கிறார் ஜெயின். கடந்த 20 ஆண்டுகளில் 800 மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை உறுப்புகளை விநியோகித்த சங்கம் ஒவ்வொரு ஆண்டும் செயற்கை மூட்டு பொருத்துதல் முகாமை நடத்துகிறது.



*ஹாப்பி பள்ளி துவக்க விழாவில் RI இயக்குனர் A S வெங்கடேஷ், சங்க உறுப்பினர்களுடன்.*

மகத்தான திட்டத்தை நினைவு கூர்ந்த சங்கத்தலைவர் மணீஷ் குமார் ஜெயின், 2015–16ல் திமாபூரில் உள்ள மாவட்ட மருத்துவமனையில் ஒரு வார கால மெகா மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. சுமார் 7,000 நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டனர் மற்றும் 200க்கும் மேற்பட்ட கண் அறுவை சிகிச்சைகள் செய்யப் பட்டன. உணவு, தங்குமிடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் சங்கம் மூலம் மேற்கொள்ளப்பட்டது என்றார்.

பொன்விழா நிகழ்வில் பேசிய RID A S வெங்கடேஷ், “உங்கள் சமூகங்களில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் பிரமாண்டமான திட்டங்கள் மற்றும் நாகாலாந்தில் உள்ள தொலைதூர மக்களுக்கு அதன் பலன்களைப் பெற நீங்கள் சேவையின் அளவையும் வரம்பையும் விரிவுபடுத்துதல் போன்றவற்றை இலக்காகக் கொள்ளுமாறு திமாபூர் ரோட்டேரியர்களை வலியுறுத்தினார். அப்போதைய DG டாக்டர் மோகன் ஷியாம் கோன்வார்,

பொன்விழா கமிட்டி தலைவர் PDG சந்து அகர்வால், அப்போதைய சங்கத்தலைவர் பஜ்ரங் புச்சா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.■

# தில்லியில் குறைந்த கட்டணத்தில் கண் பராமரிப்பு

### ரோட்டரி செய்திக் குழு

RC டெல்லி அனந்தா, RID 3012, கிரேட்டர் நோய்டா-வில் இந்த ஆண்டு பிப்ரவரியில் கட்டப்பட்ட நான்கு மாடிகளைக் கொண்ட ரோட்டரி அனந்தா தொண்டு மருத்துவ மனையில், கண் பராமரிப்பு மையத்தை ஜூலையில் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மெய்நிகர் முறையில் திறந்துவைத்தார். RC கராச்சி, RID 3271, பாகிஸ்தான், ஒரு பன்னாட்டு நல்கை வழியாக ஆதரித்துள்ள இந்த மையம் இந்தச் சங்கத்தின் ரோட்டரி அனந்தா நல அறக்கட்டளை வழியாகக் கண்புரை, மாறுகண், கிளக்கோமா அறுவைச் சிகிச்சைகளைக் குறைந்த கட்டணத்தில் வழங்கும்.

தொடக்க நிகழ்ச்சியில் DG Dr லலித்கன்னா, PDG அலோக்குப்தா பங்கேற்றனர். அப்போது நடைபெற்ற மருத்துவமுகாமில் 200க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்றனர்.■



*DG லலித் கன்னா, அவர் மனைவி நீலு, PDG அலோக் குப்தா முன்னிலையில் கண் பராமரிப்பு மையத்தை துவக்கி வைக்கிறார்.*

# ஆரோக்கியமான, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு

**பரத் – ஷலன் சவூர்**

பருவங்கள் மாறுகின்றன. காலங்கள் மாறுகின்றன. அதுபோல் நாமும் மாறுகிறோம். நாம் வயதாகும் போது நமது உடல் ஆரோக்கியத்துக்கும், உடல் நலத்துக்கும் உதவாத பழைய வழிகளில் சென்று சிக்கிக் கொள்ளக்கூடாது என்று நினைக்கிறோம். உதாரணமாக முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜி.விசுவநாத், “ரிஸ்ட் அஷ்யூர்டு” (Wrist Assured) என்ற புத்தகத்தில் மைத்துனர் சுனில் காவஸ்கர் கூறிய ஒருவார்த்தைதான் நான் குடிப்பழக்கதை கைவிட வைத்தது என்று கூறியிருந்ததை படித்தேன். நாம் அந்த வழியில்தான் செல்ல வேண்டும். சிகரெட், மதுபானம், போதை மருந்து இவை மூன்றும் நமது உடலுக்கு எதிரிகள். அவற்றிலிருந்து விடுபட்டு நாம் நல்வாழ்க்கையை தேடவேண்டும். உங்கள் உடலையும் மனதையும் மூடிமறைக்கும் எந்த பொருளும் இல்லாமல், உணவின் சுவையை ருசிப்பீர்கள். உங்களைச் சுற்றியுள்ள விஷயங்களை தெளிவாகப் பார்ப்பீர்கள், நறுமணத்தை உணர்வீர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, ஒட்டு மொத்தமாக எல்லாவற்றையும் விட்டுவிட்ட நிலையில் உங்களை நீங்களே பாராட்டிக் கொள்வீர்கள். நாம் உயிருடன் இருப்பது மேலானது.

குணமடைவது என்பது நம் கையில் இல்லை. அது ஒரு இயற்கையான, தொடர்ந்து நடக்கும் செயல். உங்கள் கைவிரலில் தற்செயலாக வெட்டுக் காயம் ஏற்பட்டால், அது தானாகவே குணமடையத் தொடங்குகிறது. ஒரு சிறய வெட்டுக்காயம், உங்களின் குணப்படுத்தும் நுட்பத்தை தீவிரப்படுத்துகிறது. இதற்கு அறிவும், கண்ணோட்டமும் உதவுகிறது. கேள்வி என்னவென்றால் நாம் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதற்கு நான் என்ன செய்ய வேண்டும் அல்லது எந்த பழக்கத்தை கைவிட வேண்டும்? என்பதுதான்.

### பசிக்கும்போது சாப்பிடுங்கள்

கடந்த காலங்களில் நான் பகல் 12 மணிக்கு மதிய உணவும், மாலை 6 மணிக்கு இரவு உணவையும் சாப்பிடுவேன். அதற்கு ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் முன்னதாக நன்றாக இருப்பதாகவே உணர்ந்தேன்.

மருத்துவப் பயிற்சி பெற்றவரான ப்ரீத்தா கூறுகிறார், உங்களது உடல் உணவு சாப்பிடும் இயந்திரம் அல்ல; உங்களுக்கு பசி ஏற்படும்போது உணவு கேட்டுவாங்கி சாப்பிடுங்கள், உங்கள் நாக்கு கேட்கிறதே என்று சாப்பிடாதீர்கள். சரியாகச் சாப்பிடுங்கள். வெளிப்படையாகக் கூறினால் நமது உடலில் வெளி பொருள்களைக் கண்டறிந்து அழிக்கும் ஆற்றல் கொண்ட புரதச் சத்து இருக்கிறது. இவை இம்யூன் குளோபுலின் என்று அழைக்கப்படும். அவை நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவை. நாம் சாப்பிடும் உணவில் சரியான அளவில் புரதச் சத்து இருந்தால், அது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் என்று அவர் விளக்கினார்.



### பொன்னான ஆற்றல் நேரத்தை உங்களுக்காகவே செலவிடுங்கள்

நம்மில் சிலர் அதிகாலை 3 மணிக்கே சுறுசுறுப்பாக இருப்போம். சிலர் காலை 7 மணிக்கும், வேறு சிலர் காலை 4 முதல் 6 மணி வரையும், சிலர் இரவு முழுவதுமே ஆந்தை போல் விழித்துக் கொண்டு எதைச் செய்யலாம் என்று சுறுசுறுப்பாக இருப்பார்கள். நீங்கள், சுறுப்பாக ஆற்றலுடன் இருக்கும் சிறந்த நேரத்தை கண்டறியுங்கள். வாட்ஸ் ஆப் பார்ப்பதில் அல்லது கைபேசியில் படம் பார்ப்பதிலும் உங்கள் அரிய நேரத்தை வீணடிக்காதீர்கள். உங்கள் உடலும், மனமும் உச்சத்தில் இருக்கும் போது பிடித்தமான கைவினை அல்லது வேறு கலைகளிலும், சமூக சேவைகளிலும் கவனம் செலுத்துங்கள்.

உங்களுக்கு விருப்பமான ஒரு வேலையைச் செய்வது சிறப்பானது. அது நம்மை நல்வழிப்படுத்தும் இது திருப்தியற்ற மற்றும் எரிச்சலை ஏற்படுத்துவதிலிருந்து நம்மை விடுவித்துக் கொண்டு முக்கியமான விஷயங்களில் அதிகம் கவனம் செலுத்துவது பற்றியது. ஆரோக்கியத்தின் மீதான ஆர்வம் ஆரோக்கியத்தை வடிவமைக்கிறது.

**உடற்பயிற்சியின் போது அனைத்தையும் மறந்துவிடுங்கள்**

ஒரு மாணவி என்னிடம், எனக்கு 12.30 மணிக்கு ஒரு வேலை இருக்கிறது. இன்று சைக்கிள் பயிற்சியுடன் நிறுத்திக் கொள்ளட்டுமா? என்றாள். நாங்கள் வழக்கமாக எங்கள் அமர்வை 1 மணிக்குத்தான் முடிப்போம். எனவே நான் அவனிடம், இல்லை. நாம் முதல் மற்ற உடற்பயிற்சி களைச் செய்வோம். கடைசியாக சைக்கிள் பயிற்சியைச் செய்வோம் என்றேன். அதற்கு அவள் சரியென்றாள். அது எப்படி நடந்தது என்றே தெரியவில்லை. ஒருவேளை அவசரம் எங்களின் இயக்கத்தை விரைவுபடுத்தியிருக்கலாம். நாற்பது நிமிட சைக்கிள் பயிற்சி உள்பட அனைத்து அமர்வுகளும் சாதனை நேரத்தில் நடந்து முடிந்தது. அந்த பயிற்சி மாணவியின் முகத்தில் புன்னகை தெரிந்தது. இதுவரை நடந்த உடற்பயிற்சி வகுப்புகளிலேயே இன்று நடந்தது தான் சிறப்பானது என்று ஆச்சரியத்துடன் அவள் குறிப்பிட்டாள். நாங்கள் வேகமாக உடற்பயிற்சி செய்தது மட்டுமல்ல, அவள் கைபேசியை தொடவே இல்லை அல்லது சாரி மேடம் இந்த ஒரு அழைப்பை மட்டும் பேசிக் கொள்கிறேன் என்று கூறவில்லை. அவள் உடற்பயிற்சி யைத் தவிர வேறு எதிலும் கவனம் செலுத்தவில்லை. உடற்பயிற்சியில் மட்டும் கவனம் செலுத்துங்கள். உங்கள் அமர்வுகள் எப்படி பிரகாசி க்கிறது என்று பாருங்கள். உங்கள் உடல் எப்படி நீங்கள் சொன்னபடி கேட்கிறது, உங்கள் மனது எப்படி புத்துணர்ச்சியுடன் இருக்கிறது என்று பாருங்கள்.

**எளிமையான விதிகள்**

எத்தனை மணி நேரம் தூங்க வேண்டும், எவ்வளவு நார்ச்சத்து தேவை, எத்தனை நிமிடங்கள் படிக்க வேண்டும் என்பது பற்றிய தகவல்களைப் படித்தபோது நான் அதிர்ச்சி அடைந்தேன். அவையெல்லாம் எண்கள் பற்றியது. ஒரு ஊட்டச்சத்து நிபுணர், உணவு சாப்பிடும்போது 4 அல்லது 5 கிண்ணங்களில் பருப்பு சேர்த்து சாப்பிட வேண்டும். அப்போதுதான் சரியான புரதச்சத்து கிடைக்கும் என்று அறிவுறுத்தியிருந்தது கண்டு நான் திகைப்படைந்தேன். அப்படிச் செய்தால் புரதச்சத்து அதிகமாகி வயிற்றில் வலிதான் ஏற்படும். நான் சொல்வது என்னவெனில், எதுவாக இருந்தாலும் இது போதும் என்ற விதியை பின்பற்றுங்கள்.

**தூக்கம்:** உங்கள் உணர்வுகள் கட்டுப்படுத்தப்பட்டு, உங்கள் மனநிலை, நினைவாற்றல், கவனம் ஆகியவை நன்றாக இருந்தால் உங்களுக்கு இரவில் தூக்கம் நன்றாக வரும். டிப்ஸ்: 20 நிமிடம் யோக நித்திரை தியானம் செய்தால் தூக்கம் நன்றாக வரும். இது திட்டமிடல், கவலை, எதையாவது கணக்குப் போடுதல் உள்ளிட்டவற்றிலிருந்து விடுவித்து உங்களுக்கு நல்ல தூக்கத்தை கொடுக்கும். "நர்சரி ரைம்ஸ்" கேட்டுக்கொண்டே தூங்கும் பெண்களை எனக்குத் தெரியும். அதுபோல் உங்களுக்கு என்ன தேவையோ அதை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

**சூரியன்:** தினமும் காலையில் 10 முதல் 20 நிமிடங்கள் சூரியக்குளியல் செய்வது நல்லது. கவலைகள், தலைவலிகள், அசௌகரியங்கள், மயக்கம், மனச்சோர்விலிருந்து விடுபடலாம். சூரிய ஒளி, கெட்ட பாக்டீரியாக்களை அழித்து உடலுக்கு ஆரோக்கியத்தை ஏற்படுத்தும்.

**நார்ச்சத்து:** தினமும் ஒரு நடுத்தரமான கிண்ணத்தில் பாலுடன் ஓட்ஸ் கலந்து ஒரு சிட்டிகை உப்பு கலந்து சாப்பிடுவது உடலுக்கு புத்துணர்ச் சியையும் நிறைவையும் தரும். இது அடுத்த நாள் காலை கழிவுகளை வெளியேற்ற உதவும். நார்ச்சத்து கொழுப்பு மற்றும் சர்க்கரையை இணைக்கிறது. ஆனால் அதன் கலோரிகளை அனுமதிக்காது. நீரிழிவு நோய் (சர்க்கரை நோய்) உள்ளவர்களுக்கும் உடல் எடையை குறைக்க விரும்புவர்களுக்கும் இது ஒருநல்ல செய்தி. கேரட், பீட்ரூட் மற்றும் வெண்டைக்காயில் அதிக நார்ச்சத்து உள்ள உணவுகளாகும். நார்ச்சத்து புற்றுநோய் வரும் அபாயத்தை குறைக்கிறது.

**ஒலிகள்:** இயற்கை ஒலிகளும் உடலில் ஆரோக்கியத்தை ஏற்படுத்தும். கடற்கரையில், மலைப்பகுதியில், நீரோடைகள் அல்லது நீர்வீழ்ச்சிகளுக்கு அருகில் சில மணி நேரங்களைச் செல விடுவது மன ஆரோக்கியத்துக்கு நன்மை ஏற்படுத்தும்.

**முதுகுவலி/தலைவலி:**

உங்களுக்கு முதுகுவலி இருந்தால் முழங்காலுக்கு கீழே ஒரு தலையணையை வைத்துக் கொண்டு தூங்குங்கள். உங்களுக்கு தலைவலி இருந்தால் நீங்கள் உடலை குறுக்கிக்கொண்டு தூங்கியதுகூட காரணமாக இருக்கலாம். தோள்களை சமமாக வைத்து தூங்குங்கள். விழித்துக் கொண்டுவிட்டால் மீண்டும் தூங்கச் செல்லாதீர்கள். எழுந்து நின்று சில நிமிடங்கள் நடந்தால் எல்லா வலிகளும் மறைந்துவிடும்.

இறுதியாக, ஆசைகள் மற்றும் எதிர் பார்ப்புகளால் நமக்கு நாமே சுமை ஏற்படுத்திக் கொள்கிறோம் என்பதை அனைவரும் உணர வேண்டும். ஆசை களையும் எதிர்பார்ப்புகளையும் விட்டுவிட்டாலே புதிய வாழ்க்கைக்கு இடம் கிடைக்கும். உங்கள் எண்ணங்களையும், வழிமுறைகளையும் மாற்றிக்கொண்டு செயல்பட்டாலே வாழ்க்கை இனிமையாக இருக்கும் நீங்கள் கற்றுக்கொண்டதையும், பார்த்து தெரிந்து கொண்டதையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். மற்றவர்களின் மனமும் வாழ்க்கையும் எப்படி ஒளிர்கிறது என்று பாருங்கள்!

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

RC **வெப்பூர்** — RID 2981



வெப்பூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஒலிபெருக்கி (ரூ.70,000) நன்கொடை அளிக்கப்பட்டது.

RI **மாவட்டம்** 3020

தேசியக் கொடியின் முக்கியத் துவத்தைப் பரப்பவும் தேச பக்தி உணர்வை வளர்க்கவும் இன்டராக்டர்கள் மிதிவண்டிப் பேரணி நடத்தினார்கள்.



RI **மாவட்டம்** 3000



20 ரோட்டரி கல்வி மையங்களின் வழியாகக் கிராமப்புற மாணவர் களுக்குப் பயிற்சியளிக்க DG I ஜெரால்ட், NRS IAS கல்வி அமைப்பு இடையில் MoU கையொப்பமிடப் பட்டது.

RC **புசவால் ரயில்சிட்டி** — RID 3030

பிளாஸ்டிக் ஒழிப்புப் பரப்புரையாகச் சுமார் 1,500 துணிப் பைகள் வழங்கப் பட்டன. ரோட்டரியன் களுடைய வீடுகளிலிருந்து பெறப்பட்ட சேலைகள் பைகளாக மாற்றப்பட்டன.



RC **குன்ட்லி** — RID 3012



ரசோய் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு 40க்கும் மேற்பட்ட மேசை இருக்கைகள் நன்கொடை யளிக்கப் பட்டன.

RC **அகமதாபாத் சுப்ரீம்** — RID 3054

அகமதாபாதில் ஒரு ரோட்டரி அலமாரி நிறுவப்பட்டது. இதன் வழியாகக் குடும்பங்கள், உணவகங்கள் தங்களிடம் மீதமுள்ள உணவை நலிந்த மக்களுக்கு நன்கொடை யளிக்கலாம்.



# செய்திகள்

## RC **சூரத் ஈஸ்ட்** — RID 3060



புற்றுநோய் பரிசோதனை முகாம் ஒன்றில் 300க்கும் மேற்பட்ட மக்கள் பரிசோதிக்கப் பட்டார்கள்.

## RC **முஜாஃபர்நகர் விஷால்** — RID 3100

சங்கத் தலைவர் பவன்குமார் கோயல் முன்னிலையில் முஜாஃபர்நகர் பால் மந்திர் பள்ளி குழந்தை களுக்குத் தண்ணீர் பாட்டில்கள், கைக்குட்டைகள் பரிசளிக்கப்பட்டன.



## RC **யமுனாநகர் ரிவியெரா** — RID 3080




தயாள்கர்-ல் உள்ள அரசு நடுநிலைப் பள்ளி அருகில் 50 மரக்கன்றுகள் நடப்பட்டன. பள்ளி முதல்வர், கிராமத்துச் சர்பாஞ்ச், ரோட்டரியன்கள், ஆன்கள் இதில் பங்கேற்றனர்.

## RC **ஆக்ரா** — RID 3110

பல் மருத்துவ முகாம் ஒன்றில் பசாய் குர்த் அரசு பள்ளியில் சுமார் 270 மாணவர் களுக்குப் பரிசோதனை செய்யப்பட்டது.



## RC **ஃபரீத்கோட்** — RID 3090



சங்கத் தலைவர் ஆர்ஷ் சச்சார், செயலாளர் அர்விந்த் சப்ரா முன்னிலையில், அங்கன்வாடி ஒன்றில் உள்ள குழந்தை களுக்கு வைட்டமின் மாத்திரைகள் வழங்கப்பட்டன.

## RC **சித்தார்த்நகர்** — RID 3120

தொகுதிக் கல்வி அலுவலர் தர்மேந்திர குமார் பால், ரோட்டரியன்கள் முன்னிலையில், சனாய் குர்த்-ல் இருக்கும் அரசுத் தொடக்கப் பள்ளியில் 100 மாணவர்களுக்கு உணவுத் தட்டுகள் வழங்கினார்.



## RC **புணே ராயல்** — RID 3131




புணே ரயில் நிலையத்தில் போர்ட்டர்களுக்கு ரூ.3 லட்சம் செலவில் எலும்பு அடர்த்தி முகாம் ஒன்று Rtn டாக்டர் யோகேஷ் கன்டால்கர் மூலமாக நடத்தப்பட்டது.

## RC **பால்கி ஃபோர்ட்** — RID 3160

கண் பரிசோதனை, கண் புரைப் பரிசோதனை முகாமில் சுமார் 100 மக்கள் பலன் பெற்றார்கள். கடந்த பத்து ஆண்டுகளில் 5,400 நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டார்கள்.



## **ரோட்டரி ஈ-கிளப் எம்பவரிங் யூத்** — RID 3132



இந்தச் சங்கத்தின் தொடக்க விழா PDG டாம் கம்ப், RID 4950, US, உடனான கூட்டத்தில் தொடங்கப் பட்டது.

## RC **கஜேந்திரகத்** — RID 3170

அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ரோட்டரியன் டாக்டர்கள் T H சங்கர், கோமள் ராய்பாகி நடத்திய பல் மருத்துவ முகாமில் 1,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டார்கள்.



## RC **நியூ பாம்பே சீசைட்** — RID 3142



GN ஹியரிங் இந்தியா ஆதரவில் ரூ.10 லட்சம் மதிப்புள்ள 8 ICU படுக்கைகள் பெலாபூரில் உள்ள ஆச்சார்ய ஸ்ரீ நானேஷ்வர் மருத்துவ மனைக்கு நன்கொடை யளிக்கப்பட்டன.

## RC **ஐவரி சிட்டி மைசூரு** — RID 3181

PDG ரவி வட்லாமணி, சங்கத் தலைவர் M N ரமேஷ் முன்னிலையில் 50 காய்கறி விற்போருக்குக் குடைகள் வழங்கப்பட்டன.



# செய்திகள்

## RC **கோயம்பத்தூர் ஈஸ்ட்** — RID 3201



காரையூர் தொடக்கப் பள்ளியில் ரூ.15 லட்சம் மதிப்புள்ள ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப் பட்டன. கட்டடங்கள் புதுப்பிக்கப் பட்டு, கழிப் பறைகள், புதிய அமர் பொருட்கள், கணினிகள், மின் விசிறிகள், RO அமைப்பு, CCTVகள் நிறுவப்பட்டன.

## RC **தூத்துக்குடி டிரெயில்பிளேஜர்ஸ்** — RID 3212

PDG ஜசிந்தா தர்மா கால்ட்வெல் உயர்நிலைப் பள்ளியில் ஒரு கழிப்பறைத் தொகுதியைத் (ரூ.1 லட்சம்) தொடங்கி வைத்தார்.



## RC **மேட்டுப்பாளையம் பிரைம்** — RID 3203



கங்கா மருத்துவ மனையுடன் இணைந்து 120 பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை செய்யப் பட்டது.

## RC **ஜாம்ஷெட்பூர் டால்மா** — RID 3250

76வது விடுதலை நாளை முன்னிட்டு, ஒரு லோகோமோடிவ் எஞ்சினுக்கு மூவண்ணம் தீட்டப்பட்டு டாடாநகர் ரயில் நிலையத்தில் காட்சிப்படுத்தப் பட்டது. இது ரோட்டரியின் தோற்றத்தை மேம் படுத்தியது.



## RC **ஆலப்பி கிரேட்டர்** — RID 3211



சங்கத் தலைவர் விஜயகுமார் தலைமையில் இரண்டு கிராமங்களைச் சேர்ந்த நலிந்த குடும்பங் களுக்கு ரூ.80,000 மதிப்புள்ள ஓணம் பொதிகள் வழங்கப்பட்டன.

## RC **ஜபாலிபுரம்** — RID 3261

MP பவர் மேனேஜ்மென்ட் நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்ட மரம் நடுதல், விழிப்புணர்வு நடை விழாவில் சுமார் 1,500 தன்னார்வலர்கள் பங்கேற்றார்கள்.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# வளர்ந்த நாடுகளில் ஏன் சிறிய குளியலறைகள்?

**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

கடந்த இரண்டு வாரங்களாக நான் மேற்கு ஐரோப்பாவில் பயணம் செய்து வருகிறேன், அது வளர்ந்த நாடுகளை உள்ளடக்கியதாக கருதப்படுகிறது. பொருளாதார வல்லுநர்களும் மற்றவர்களும் ஒரு நாடு வளர்ந்ததா இல்லையா என்பதைத் தீர்மானிக்க தனிநபர் வருமானம், மருத்துவமனை படுக்கைகள் மற்றும் தனிநபர் மருத்துவர் விகிதம், பள்ளிகள் மற்றும் தனிநபர் ஆசிரியர்கள் விகிதம் போன்ற அனைத்து வகையான ஆடம்பரமான அளவுகோல்களைப் பயன்படுத்துகின்றனர். அதிகமாக இருந்தால் நல்லது, குறைவாக இருந்தால் கெட்டது என்கிறார்கள். இந்த அளவுகோல்களில் இந்தியா மோசமாக இருக்கிறது.

சரி, ஆனால் இப்போது இந்த தனிநபர் விகிதத்தில் நான் மற்றொரு அளவுகோலைச் சேர்க்க விரும்புகிறேன்: தனிநபர் குளியலறைகள் விகிதம். கடந்த பல மாதங்களாக வெளிநாட்டில் வாழ்ந்து, ஓரளவுக்கு வெளிநாடுகளுக்குப் பயணம் செய்ததால், இந்த அளவு கோலைச் சேர்த்தால், மிகவும் வளர்ந்த நாடும் கூட இந்த பட்டியலில் பல நிலைகளில் சரியக்கூடும் என்று என்னால் நம்பிக்கையுடன் சொல்ல முடியும்.

இங்கிலாந்து உட்பட ஐரோப்பாவும் மிகவும் மோசமாக உள்ளது. சுவிட்சர்லாந்து போன்ற ஒரு நாடு கூட இதற்கு விதிவிலக்கல்ல. என் மகன் அங்கு, செழிப்பான ஊரில் வசிப்பதால் எனக்குத் தெரியும். அங்குள்ள வீடுகள் ஜெனிவா ஏரியை நோக்கி அழகாக இருக்கும். அவை பழமையானவை, மிக அழகான கதவுகள், ஜன்னல்கள் மற்றும் அழகான தரையையும் கொண்டுள்ளன. அறைகள் பெரியவை மற்றும் காற்றோட்ட மானவை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு குடியிருப்பில் நீங்கள் விரும்பும் அனைத்தும் அங்கு இருக்கும்.

ஆனால் இந்த அழகான அடுக்குமாடி குடியிருப்புகள் அனைத்தும் ஒரு பெரிய குறைபாட்டைக் கொண்டுள்ளன: அவை ஒரு சிறிய குளியலறை மற்றும் ஒரு தனி கழிப்பறை கொண்ட ஒரே ஒரு குளியலறையை மட்டுமே கொண்டுள்ளன. ஒன்றே ஒன்று மட்டும். அது மட்டுமல்ல. அவையும் மிகச் சிறியவை. இந்தியாவில் மேற்கத்திய கமோட் கொண்ட குளியலறையின் சராசரி அளவு 40 சதுர அடியாக இருந்தாலும், ஐரோப்பாவின் 'வளர்ந்த' நாடுகளில், அது பாதியாகவோ அல்லது பாதிக்கும் குறைவாகவோ உள்ளது. என் மகனின் அபார்ட்மெண்ட்டும் விதிவிலக்கல்ல. நான் ஒருமுறை மத்திய லண்டனில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தேன், அது மிகவும் ஆடம்பரமாக ஒன்று. அங்கும் குளியலறை மிகவும் சிறியதாக இருந்தது, சுவர்கள் கிட்டத்தட்ட என் தோள்களைத் தொடும்.

பல ஆண்டுகளாக, ஆடம்பரமான அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீடுகளில் கூட ஒரு சிறிய குளியலறைக்கான இந்த விசித்திரமான விருப்பம் குறித்து நான் சில ஆராய்ச்சி செய்துள்ளேன். முதலில், ரியல் எஸ்டேட் விலை உயர்ந்தது என்பதால், ஒரு நபர் ஒரு நாளைக்கு அதிகபட்சம் 15 நிமிடங்கள் தங்கும் அறைகளில் பணத்தை வீணடிக்க அவர்கள் விரும்பவில்லை என்று நினைத்தேன். வீட்டில் நான்கைந்து பெரியவர்கள் இருந்தாலும் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம்தான். எனவே ஏன் இடத்தையும் பணத்தையும் வீணடிக்க வேண்டும்? ஆனால் நிலைமை அவ்வாறு அல்ல. இந்தியாவில் ரியல் எஸ்டேட் என்பது ஒப்பீட்டளவில் மிகவும் விலை உயர்ந்தது, எனினும் நம்மிடம் மிகப் பெரிய குளியலறைகள் உள்ளன. உண்மையான காரணம் என்னவென்று என்னிடம் சொல்லப்பட்டது, பிளம்பிங் அதிக விலை அல்லது அவை சுகாதாரமற்றதாக இருக்கலாம்.

ஆனால் நீங்கள் ஐரோப்பியர்களை ஒரு விஷயத்தில் பாராட்ட வேண்டும். குளியலறைகள் எவ்வளவு சிறியதாக இருந்தாலும், பெரிய அளவிலான தண்ணீரைப் பயன்படுத்தும் ஒரு குளியல் தொட்டி எப்போதும் இருக்கும். அது அவர்கள் வாரத்திற்கு ஒரு முறை அல்லது அதற்கும் குறைவாக கருளிப்பார்கள் என்று தெரியப்படுத்துகிறது, இது குளிராக இருப்பதால் என்பதைப் நம்மால் புரிந்து கொள்ள முடியும். இருப்பினும், புரிந்துகொள்வதற்கு சிரமமாக இருப்பது என்னவென்றால் கோடையில் வெப்பம் அதிகமாக இருக்கும்போது அவர்கள் எவ்வாறு நிர்வகிக்கிறார்கள் என்பதுதான். ஆனால் தற்போது நல்ல விஷயம் என்னவென்றால் சில இடங்களில் நல்ல மழை பெய்துள்ளது. ஆனால் இங்கு ஒரு சிக்கல் உள்ளது: நீங்கள் தொட்டியில் நின்று குளிக்க வேண்டும். இது மிகவும் ஆபத்தானதாகவும் இருக்கலாம்.

அவர்களுக்கு அறையுடன் இணைக்கப்பட்ட குளியலறைகள் என்ற ஒரு அணுகுமுறையே இல்லை. அனைத்தும் தாழ்வாரம் வழியாகவே அணுக வேண்டும். இது ஐரோப்பியர் அல்லாத பெண்களுக்கு வாழ்க்கையை மிகவும் சங்கடமாக மாற்றும். எனவே, எந்த நாடு வளர்ந்தது, எது வளர்ச்சி அடையவில்லை என்பதைத் தீர்மானிக்கும் உலக வங்கிக்கு எனது பரிந்துரை: உங்கள் அளவுகோலில் இணைக்கப்பட்ட குளியலறைகளைச் சேர்க்கவும். இந்தியா பட்டியலில் விரைந்து முன்னேறும்.■

# செய்தித் துளிகள்

## காலநிலை மாற்றத்துக்கு எதிரான பணிகளுக்குப் நன்கொடை அளித்த சில்லறை விற்பனை வல்லுனர்



ய்வோன் சொய்னார்ட் என்ற அமெரிக்கச் சில்லறை விற்பனை வல்லுனர், படகோனியா என்ற ஆடை பிராண்டின் நிறுவனர். தன்னுடைய ஆடை நிறுவனத்துடைய ஒட்டுமொத்த மதிப்பாகிய $3 பில்லியனைக் காலநிலை மாற்றத்துக்கு எதிரான பணிகளுக்கு நன்கொடையளித்துள்ளார்.

## WWFக்கு ஓடுங்கள்



பிரிட்டனைச் சேர்ந்த மாரத்தான் ஓட்ட வீரர், 2018 லண்டன் மாரத்தானில் ஃபாரஸ்ட் கம்ப்-ஆக (திரைப்படக் கதை மாந்தர்) உடையணிந்து மிக விரைவாக ஓடிக் கின்னஸ் சாதனை படைத்தவர் (2 மணி 36 நிமி). சமீபத்தில் அயர்லாந்தின் அகலத்துக்கு இணையான தொலைவை 24 மணி நேரத்துக்குள் ஓடி உலக வன உயிர்கள் அறக்கட்டளைக்கு (WWF) நிதி திரட்டினார்.



## பசிஃபிக்கைத் தூய்மைப்படுத்துதல்

ஓஷன் க்ளீனப் என்ற லாப நோக்கம் இல்லாத அமைப்பு, சிஸ்டம் 02 என்கிற தன்னுடைய மாதிரி தூய்மைப்படுத்தும் அமைப்பைப் பயன்படுத்திப் பசிஃபிக் பெருங்கடலில் இருந்து 100 டன்னுக்கும் மேற்பட்ட பிளாஸ்டிக்கை நீக்கியுள்ளது. இது 45க்கும் மேற்பட்ட முறைகள் 3,000 சதுர கிலோ மீட்டர் பரப்பைத் தூய்மைப்படுத்தியது.



## 50 வகைப் புற்றுநோய்களைக் கண்டறியும் ரத்தப் பரிசோதனை

Grail என்ற அமெரிக்க உயிரியல் தொழில்நுட்ப நிறுவனம் 50க்கும் மேற்பட்ட புற்றுநோய்களைக் கண்டறியக்கூடிய கல்லெரி பரிசோதனை என்ற எளிய ரத்தப் பரிசோதனையை உருவாக்கியுள்ளது. இது ரத்த ஓட்டத்தில் சேர்கிற புற்றுநோய் செல்களின் DNAக்களைக் கண்டறிகிறது.



## கார்பன் உமிழ்வுகளின் விலை

இந்திய அரசு கார்பன் உமிழ்வுகளின் விலையைக் கணக் கிடுவதை எளிதாக்கும் பாதுகாப்பு மசோதா ஒன்றை மக்களவையில் வெளியிட்டுள்ளது. இந்த மசோதா தொல்பொருள் சாராத எரிபொருள்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கிறது, அத்துடன், தங்களுடைய செயல்பாடுகளுக்கு ஆற்றல் அளிக்கப் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் வளங்களைப் போதுமான அளவு பயன்படுத்தாத பெரு நிறுவனங்களுக்குத் தண்டனைகளையும் கொண்டுள்ளது.

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

ADVT.




## UNDERGRADUATE PROGRAMMES

- **B.A.**
- **B.Sc.**
- **B.Com.**
- **B.A. Hons.**
- **B.Sc. Hons.**
- **B.Com. Hons.**

## SPECIALIZED PROGRAMMES

- **B.Com. Hons.** (Proficiency in Chartered Accounting/ Proficiency in Company Secretaryship) Specialized programmes and separate academic calendars for aspirants of CA & CS.
- **B.Com. Hons.** (Applied Accounting and Finance) Accredited by ACCA, UK.

## UG - PROFESSIONAL PROGRAMMES

- **B.A.** (J.M.C.)
- **B.F.A.**
- **B.C.A.**
- **B.Sc. Hons.** (Forensic Science)
- **B.Sc. Hons.** (Data Analytics and Artificial Intelligence)
- **B.Sc. Hons.** (Home Science)
- **B.Sc.** (Fashion Design)
- **B.Sc.** (Jewellery Design & Technology)
- **B.B.A.**
- **BBA** (Aviation and Tourism Management)

## BACHELOR OF VOCATION (B.Voc.) PROGRAMMES*

- **B.Voc.** (Office Management and Secretarial Practices)
- **B.Voc.** (Banking and Financial Services)
- **B.Voc.** (Entrepreneurship and Business Innovation)
- **B.Voc.** (Digital Marketing)

*UGC Approved

## CO-EDUCATIONAL PROGRAMMES
@ IISU Block, ISIM Campus, Mahaveer Marg, Mansarovar

- **B.Sc. Hons.** (Multimedia & Animation)
- **B.C.A.** (Bachelor of Computer Applications)
- **B.B.A.** (Bachelor of Business Administration)
- **B.Lib.I.Sc.** (Bachelor of Library and Information Science)
- **M.A.** (Digital Media and Communication)
- **M.C.A.** (Master of Computer Applications)
- **M.B.A.** (**Dual Specialization, Trimester based**)- Marketing, Finance, Production and Operation Management HR, IB, IT

## INTEGRATED PROGRAMMES

- **B.A. B.Ed.***
- **B.Sc. B.Ed.***
- **B.Sc. M.Sc.** (Nano Science & Technology)

*NCTE Approved

## SHORT TERM COURSES

- **Cyber Security and Cyber Law (Online)**
- **Certificate Course in Textile Design**

## POST GRADUATE PROGRAMMES

- **M.A.-** English, History, Economics, Psychology, French, Sociology, Geography, Mathematics, Political Science, Statistics, International Relations, Public Administration
- **M.Sc.-** Zoology, Chemistry, Microbiology, Botany, Biotechnology, Psychology, Environmental Science, Geography, Mathematics, Physics, Economics, Statistics
- **M.Com.** - Accounting & Taxation, Business Studies, Financial Studies

## PG - PROFESSIONAL PROGRAMMES

- **M.A.-** Journalism & Mass Communication
- **M.A. /M.Sc.** (Yogic Sciences)
- **M.A./M.Com./M.Sc.** (Fashion Design)
- **M.A./M.Com./M.Sc.** (Jewellery Design)
- **M.F.A.** - Applied Art (Graphic Design/Illustration), Print Making, History of Art, Painting, Sculpture (Portraiture, Creative Sculpture)
- **M.S.W.** (Master of Social Work)
- **M.Sc. Home Science** - Clothing and Textiles, Foods and Nutrition, Human Development
- **M.B.A. (Semester Based)** Human Resource Management; International Business; Retail Management; Tourism & Travel Management; Finance; Advertising & Brand Management; Business Analytics; Innovation, Entrepreneurship and Venture Development

MBA/MCA AICTE Approved

## RCI APPROVED PROFESSIONAL DIPLOMA IN CLINICAL PSYCHOLOGY

## RESEARCH PROGRAMMES

- **Ph.D.:** Admission through Research Entrance Test.
- **D.Sc./D.Litt.**

## CAREER ORIENTED & SKILL DEVELOPMENT PROGRAMMES, 3-LEVEL CERTIFICATE/ DIPLOMA/ADVANCED DIPLOMA ALONG WITH DEGREE PROGRAMMES

### Scholarship for Meritorious/ National Level Sports Achievers

## PREPARATORY CLASSES
along with UG/PG programmes

▶ Civil Services ▶ NET ▶ USCMA

## DISTINGUISHING FEATURES

- Hostel Facilities Available
- Placement Support
- Wi-Fi Enabled Campus
- Extension Activities
- Extra & Co-Curricular Activities
- Conveyance Facility, covering all parts of Jaipur including remote areas
- NCC
- NSS
- Sports

**FOR MORE INFORMATION :**

Gurukul Marg, SFS, Mansarovar, Jaipur-302020
Rajasthan (INDIA)

+91 141 2400160, 2397906/07
Toll Free No.: 1800 180 7750

admissions@iisuniv.ac.in

www.iisuniv.ac.in